143


ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 மே 2009 பார்வை: 57 விலை: ரூபா 50.00

## முன்பள்ளிச் சிறப்பிதழ்



★ ...இயல்

★ ...ல்வி

★ ...பள்ளி ஆசிரியை

★ நடைமுறைகளும் பிரயோகங்களும்

★ மாற்றுச் சிந்தனை

நேர்காணல்:

★ தொழில் திருப்தி இல்லாத நிலை தொடர வேண்டுமா?

★ எமது கிராமம் எமது பிள்ளைகள்

* சோ.சந்திரசேகரன் * எம்.எச்.எம்ஹஸன் * அனுஷ்சியா சத்தியசீலன் * பா. தனபாலன்
* ஞானசக்தி கணேசநாதன் * அ. வேதநாயகம் * ஜெயலட்சுமி இராசநாயகம்
* சோமநாதன் கனகலட்சுமி * திகநாதன் * மீனா * பா. இராஜேஸ்வரன்
* எஸ். செல்வராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 11




**விலை: 100.00**

தொடர்பு:
3, டொரிங்டன் அவனியூ
கொழும்பு 07

தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

ஆலோசகர் குழு : பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா.ஜெயராசா
(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் மா.செல்வராஜா
(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி உ.நவரட்ணம்
(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)
தை. தனராஜ்
(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இதழ் வடிவமைப்பு : த.மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்
தொலைபேசி: 011-2472362

*வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:*

: AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel: 011-2506272
E-mail : ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

ISSN 1888 - 1246

# அகவிழி

மாத இதழ்

## உள்ளே...

- முன்பள்ளி 03
- முன்பள்ளி ஆசிரியை 04
- சுதந்திர இலங்கையில் பாலர் கல்வி... 07
- முன் ஆரம்பக் கல்வியில் அழகியல் 11
- ஒளிமயமான முன்பள்ளிக் கல்வி... 15
- முன்பள்ளி உளவியலில் ஒரு மாற்றுச்... 18
- யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்பள்ளி... 21
- தொழில் திருப்தி இல்லாத நிலை... 28
- முன்பள்ளிக் கல்வியின் உலகளாவிய... 31
- எமது கிராமம் எமது பிள்ளைகள் 35
- வாசகர் பக்கம் 39

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து...

நாம் மகிழ்ச்சியற்ற வகையில் இந்த இதழ் தயாரிப்பில் உள்ளோம். இந்த இதழ் முன்பள்ளி சிறப்பிதழாக வெளிவருகின்றது. ஆனாலும் முன்பள்ளி தொடர்பிலான பன்முக அம்சங்கள் இங்கு முழுமையாக பதிவு செய்யப்படவில்லை. ஆனால் முன்பள்ளி குறித்து ஆழமாகவும் தெளிவாகவும் பொருத்தப்பாட்டுடனும் நாம் சிந்திக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. இதன் தொடக்கச் சிந்தனை நகர்வுக்கான கூறுகளை களங்களை அடையாளப்படுத்துகின்றது.

இன்னொருபுறம் முன்பள்ளிக்குச் சென்று மகிழ்ச்சியுடன் விளையாட்டு அல்லாத விளையாட்டுச் செயல்முறைசார்ந்த கற்றலில் ஈடுபடவேண்டிய குழந்தைகள், குதூகலிக்க வேண்டிய குழந்தைகள் இன்று சொல்லனா துயரங்களை அனுபவிக்க நேர்ந்து வருகின்றது. இனி வாழ்ந்தது போதுமென்று முடிவு செய்து மடிந்தவர்கள் ஏராளம். இத்தகு தொடர் நிகழ்வுகள் வரலாறாகிக் கொண்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் இந்த இதழ் வெளிவருகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் தமது தொழில் திருப்திக்கு அப்பால் சமூக அக்கறையுடன் சமூக பொறுப்புடன் செயற்பட்டு குழந்தைகள் தங்கள் தாய்க்கு அடுத்தபடியாக தங்களை நேசிப்பவர்களாக உணரும்படி செய்த அந்த பெரும் பணியாளர்களை சேவையாளர்களை இந்த இடத்தில் நாம் நினைவுபடுத்த முடியாமல் போக முடியாது. இன்று அத்தகையவர்களில் சிலர் மடிந்தும் வாழ்புலம் தேடி அழைந்து திரிபவர்களாகவும் உள்ளார்கள். இவர்களையும் நாம் நினைவுகொள்ளத்தான் வேண்டும்.

துயரங்களையும் இழப்புகளையும் வலிகளையும் மற்றும் நம்பிக்கைகளையும் கொண்டு நாம் எப்படி வாழ்வோம் என்று ஏங்கிக்கொண்டு இருக்கும் உள்ளங்களுடன் 'நாம் இருக்கிறோம்' என்பதைத் தவிர வேறொன்றும் சொல்ல முடியாதவர்களாகவே உள்ளோம்.

இதுதான் நிலைமை என்றால்...

மறுபுறம் பாடசாலைகள் பல இயங்க முடியாமல் உள்ளன. எங்கும் அகதிகள் தஞ்சம். கல்விச்சாலைகள் கல்வியின் இன்னொரு பரிமாணத்தை ஆழமாகக் கடத்துகின்றன. இந்த அறிவு, அனுபவம் எமது தொடர் கல்விச் செயற்பாட்டில் மாற்று நடமுறைகளை வேண்டுகின்றது. நாம் உலகளாவிய கல்விச் செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்கும் அதே நேரம், நமக்கான நம்மை விடுவிக்கும் கல்விச் செயற்பாடுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். மீறல்வகைப்பட்ட வித்தியாசமான கல்வி விரிவாக்கத்திட்டங்கள் புதிய அணுகுமுறைகள் உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

கல்வியியலாளர்களே உலகம் தழுவிய கல்வி விரிவாக்கச் சிந்தனை மட்டும் எமக்குப் போதாது. நமது அன்றாட வாழ்புல அனுபவம் மற்றும் நெருக்கீடு சார்ந்த நிலைமைகளை மாற்றியமைக்கும் சொல் செயல் எமக்கு வேண்டும். பொருத்தமான மனப்பாங்கு மாற்றம் வேண்டும். தொடர்ந்து நம்பிக்கைகளை விதைக்கும் பண்பட்ட திறன்களை வளர்க்கும் புதிய பண்பாடு வேண்டும். இவற்றைச் சாத்தியமாக்கும் கருத்து வினைப்பாடுகள் மேலெழுச்சி பெற வேண்டும். இதற்கான சாதகமான சூழலை உருவாக்குவது நம் ஒவ்வொருவரது பொறுப்பாகும்.

இன்று முன்பள்ளிப் பருவத்தில் பிள்ளைகளுடன் பழகும் அல்லது உறவாடும் பெரியவர்கள் பிள்ளையை இனங் காணக்கூடியவர்களாக பிள்ளையின் அருகே இருந்து அதன் தேவைகளை உணர்வுகளை புரிந்து கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். பிள்ளையை ஒரு உற்சாகமான சூழலில் வைக்க வேண்டும். பொருந்தி வாழ்வதற்கான தன்மைகளை உருவாக்க வேண்டும்.

சமகால நெருக்கடிச் சூழலில் வளர்ந்தவர்களாக இருப்போர் முன்பள்ளிப் பருவத்தினருக்கு முழுமையான பாதுகாப்பு உணர்வை வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும். உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் தருணங்களை வழங்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

குறிப்பாக முன்பள்ளியின் நோக்கங்களை பல்வேறு விருத்திக் கோலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதாவது சமூக விருத்தி, உளவிருத்தியும் நுண்மதி விருத்தியும், உடல் விருத்தி, நடைத்தை விருத்தி, அழகியல் உணர்வு விருத்தி, மனவெழுச்சி வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பாதுகாப்பு தொடர்பான விருத்தி போன்ற அம்சங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். கற்பித்தலில் ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை உருவாக்க வேண்டும். இவை புதிய புதிய மாற்று அணுகுமுறைகளாக சமகால தேவைபாட்டின் நோக்கங்களாக விரிவாக்கம் பெற வேண்டும்.

தற்போது விசேட தேவையுடைய பிள்ளைகளது எண்ணிக்கை பெருக்கூடிய நெருக்கடிச் சூழல் நமக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இத்தகைய மாணவர்களது விசேட தேவைகள் யாவும் கருத்தில் எடுக்கப்பட்டு செயற்படக்கூடிய மனப்பாங்கு மற்றும் அறிவு விருத்தி பெற்ற ஆசிரியர் சமூகம் வேண்டும். இவர்கள் தான் நம்பிக்கைகளுடன் வாழ்வதற்கான ஏற்புச் சூழல்களை உருவாக்க முடியும். அத்தகு ஆசிரியர்களது வருகைக்காக குழந்தைகள் மட்டுமல்ல நமது சமூகமும் காத்துக் கொண்டிருக்கிறது

தெ.மதுசூதனன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி...

-மூர்-



பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று ஆரம்பக் கல்வியைத் தொடங்கும் நிலைக்கு முன்னராகப் பெறுகின்ற முறைசார்ந்த நிறுவன ரீதியான செயல்பாட்டினை முன்பள்ளிக் கல்வி என்று குறிப்பிடலாம். அதாவது 0-3 வயது வரை பிள்ளைக்கு வழங்கப்படும் பராமரிப்பினை ஆரம்பப் பிள்ளைப் பருவ பராமரிப்பும் விருத்தியும் எனவும் 3-5 வயது வரை வீட்டுக்கு வெளியே வழங்கப்படுகின்ற "ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி"யை முன்பள்ளிக் கல்வி எனவும் வழங்குகின்றோம்.

முன்பள்ளிகள் பிள்ளைக்கு பாதுகாப்பும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த சூழலை வழங்குவதோடு பின்னர் அதன் கற்றலுக்கும் உடல் உள மனவெழுச்சி விருத்திக்கும் அடித்தளமாக விளங்கக் கூடிய பயனுள்ள அனுபவங்களையும் வழங்குகின்றன.

முன்பள்ளிக்குச் சென்ற பிள்ளையின் விருத்தி நிலையும் அடைவு மட்டமும் முன்பள்ளிக்குச் செல்லாத பிள்ளையை விட மேம்பட்டுக் காணப்படுவதாக (ஆரம்ப வகுப்புகளிலேனும்) ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் இன்று ஆரம்பப் பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் முன்பள்ளிக் கல்வி பற்றிய ஆர்வமும் முனைப்பும் பன்னாட்டு ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இலங்கையிலும் இதற்கான முனைப்பும் ஆர்வமும் அதிகரித்து வருகின்றன.

ஆனால் நடைமுறையில் முன்பள்ளிகளை நிருவகிக்கும் முகாமை செய்யும் மட்டங்களில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. நகரம் கிராமம் என்ற நிலைகளிலும் பல்வேறு மட்டங்கள் உள்ளன. இதனால் முன்பள்ளிகளின் தேவை அவசியம் யாவும் கொள்கை சார்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அவற்றுக்குரித்தான பண்புசார் விருத்திக்கான கோலங்களை அவை தன்னளவில் கொண்டிருக்கவில்லை. அசமத்துவம் நிலவுகின்றன.

குறிப்பாக ஒவ்வொரு முன்பள்ளிகளும் தமது சூழலுக்கு ஏற்பவும் ஆசிரியர்களின் தரத்துக்கு ஏற்பவும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் வேறுபட்டு உள்ளதை அவதானிக்கலாம். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியின்றி முன்பள்ளிகள் இயங்கும் நிலைமையில் இல்லை. நீண்ட கால தொலை நோக்குப் பார்வையில் முன்பள்ளிகள் தரப்பெறுமானத்துடன் இயங்குவதற்கான திட்டமிடலும் ஆலோசனைகளும் இல்லாமலே இழுபட்டு வருகின்றன. அதாவது முன் பள்ளிகள் கல்வியின் அவசியம் உணரப்பட்டுப் பல்வேறு நிறுவனங்கள் செயற்பட்டாலும் அவற்றை ஓர் ஒழுங்கமைந்த பொதுவான அமைப்புக்குக் கீழ் இயக்கம் பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கும் நிலை உருவாகவில்லை இது துரித கதியில் செய்யப்பட வேண்டும்.

இதைவிட முன்பள்ளிகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் குறித்து நாம் இன்னும் அதிகம் அக்கறைப்பட வேண்டும். 'தொழில் திருப்தி' 'தொழில் பாதுகாப்பு' என்பன உறுதிப்படும் வகையில் மாற்று நடவடிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும். ஆசியர்களின் தர மேம்பாட்டு விருத்தி பற்றி அக்கறைப்படும் அதே நேரம் ஆசிரியர்களது தொழில்சார் மனப்பான்மையில் முன்னேற்றம் விரிவாக்கம் ஏற்படும் வகையில் புதிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தாமும் ஆசிரியர் சேவைக்கு பொருத்தமானவர், தமக்கு அத் தகுதி உண்டு, தமது பணிகளுக்கு உரித்தான 'பெறுமதி' கிடைக்கிறது, நாம் முழுமையான சேவை ஆற்றத்தக்கவர்கள், எமக்கு சமூக அந்தஸ்து உண்டு. போன்றவற்றை உறுதிப்படுத்தும் கலாசாரத்தை விருத்தியாக்கும் ஏற்பாடுகள் விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வேண்டும். அப்பொழுதுதான் முன்பள்ளி ஆசிரியர்கள் தமது முழு ஆற்றல்களை வழங்குவார்கள். கல்விசார் அபிவிருத்தியில் முன்பள்ளிக் கல்விக்கான முக்கியமான தளம் விரிவு பெறும்.

பிள்ளைகளின் ஆர்வங்களுக்கும் திறன்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து செயற்படும் முன்பள்ளி ஆசிரியர் தனது மகிழ்ச்சியின்மைக்கான காரணங்களை கண்டறிந்து மாற்று நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டும். வெறும் பயிற்சிகள் கருத்தரங்குகள் மட்டும் இவர்களின் வாழ்க்கையை நல்வழிப்படுத்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்பள்ளி ஆசிரியை




**எம்.எச்.எம்ஹஸன்,**
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.


**ஆசிரியம்**

எந்த முன் தகுதியுமற்றவர் முன்பள்ளி ஆசிரியராக இருக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ஆனால் அத்தகைய ஒருவரையும் முன்பள்ளி ஆசிரியராகத் தயார்ப்படுத்த முடியும். முன்பள்ளி ஆசிரியராக வர விரும்பும் ஒருவரின் முன்தகைமைகளுள் ஒன்று ஆக்கரீதியான சிந்தனையாகும்.

முன்பள்ளி தொடர்பாக மேலோட்டமாகக் கருத்து வெளியிடும் பலரும், முன்பள்ளி ஆசிரியை என்று தனியாக ஒரு பிரிவினர் அவசியமில்லை என்றும் எவரும் ஆற்றக்கூடிய ஒரு மிகச் சாதாரண பணிகளே அங்கு இருப்பதாகவும் கூறுகின்றனர். முன்பள்ளி ஆசிரியர் பிள்ளைகளின் கருமங்களில் தலையிடுவதில்லை என்றும் அவர்கள் தமது பாட்டில் இயங்க இடமளிப்பர் என்றும் விளக்கப்படுகின்றது. ஆனால் முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளின் கற்றல் சந்தர்ப்பங்கள், பயன்படுத்தும் உபகரணங்கள், அவற்றின் தன்மைகள், படிமுறைகள், முன்வைப்புக்கள் என்பவற்றைப் பார்க்கும் போது ஆசிரியர் வகிபாகத்தின் ஆழம் புரியும். சாதாரண வகுப்பறையில் ஆசிரியர் செயற்படும் போது முன்பள்ளியில் ஆசிரியர் செயற்பட வேண்டியதில்லை என்று கூற முடியுமா, முன்பள்ளி ஆசிரியரின் திட்டமிடலும் முன்னாயத்தமும் அவரின் இயக்கத்தின் பிரதான அமிசமாக இருக்க வேண்டும். ஆசிரியரது இயங்காமையும் ஒரு சிறப்பறிகுறியாகவே அமையும். அது வெற்றிகரமாக பிள்ளைகள் இயங்குகின்றனர் என்பதற்குரிய ஒரு சிறப்பறிகுறியாகும். தான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முன்பள்ளியின் நடவடிக்கைகள் செவ்வனே நடைபெறுகின்றன என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமது வகுப்பை ஆக்கிக் கொண்டுள்ள ஆசிரியர்கள் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள். இத்தகைய வெற்றிகரமான நிலைமையை அடைய ஓர் ஆசிரியர் தனது விருத்திப் பாதையில் கடந்து செல்ல வேண்டிய அனேக திருப்புமுனைகளுண்டு.

எந்த முன் தகுதியுமற்றவர் முன்பள்ளி ஆசிரியராக இருக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ஆனால் அத்தகைய ஒருவரையும் முன்பள்ளி ஆசிரியராகத் தயார்ப்படுத்த முடியும். முன்பள்ளி ஆசிரியராக வர விரும்பும் ஒருவரின் முனதகைமைகளுள் ஒன்று ஆக்கரீதியான சிந்தனையாகும். அதாவது ஒன்றைச் செய்ய முன்பு அது எப்படி, எந்த மட்டத்தில் அமைய வேண்டும் என்பது தொடர்பான கற்பனை வடிவம் அவரது மனதில் உருவாக வேண்டும். அது ஒரு சுய ஆயத்தமாகவும் அமையும். இதுவரை தான் கண்ணால் கண்டிராத ஒரு பிள்ளையை மனதில் எண்ணி அப்பிள்ளைக்காக சில திட்டங்களை இட வேண்டியேற்படும். அதாவது முன்பள்ளி ஆசிரியை தமது வேலைகளினூடாக தாம் கண்டறிய இருக்கும் ஒரு பிள்ளையின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். தன்னை எந்த வகையிலும் பொருட்படுத்தாத பிள்ளைகளைக் கூட விருப்புள்ள கருமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தும், ஊக்குவிக்கும், வழிகாட்டும், நம்பும் நிலையில் அவ்வாசிரியர் இருக்க வேண்டும். இதன் மூன்று படிமுறைகளின் கீழ் நோக்கலாம்.

1. பிரிச்சினையுடன் கூடிய பிள்ளையின் பிரச்சினையை போக்குவதைவிட சூழலின் பொறுப்பாளர் என்ற வகையிலும் பாதுகாவலர் என்ற வகையிலும் சுற்றாடலூடாகவே அப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் எனும் நம்பிக்கையுடன் ஆசிரியர் இருக்க வேண்டும். பிள்ளையின் எதிர்பார்ப்பை முனைப்பாக்கும் கவர்ச்சி ஆசிரியரிடத்தே தங்கியுள்ளது. கற்றல் உபகரணங்கள், எப்போதும் மிக அழகாக, நேர்த்தியாக கண்கவரும் விதமாக இருக்க வேண்டும். எந்தவித குறைபாடுமின்றி பூரணமாக செயற்பாட்டுடன் கூடியதாக, பாவனைக்குகந்ததாக எப்போதும் அவை பிள்ளைக்குத் தோன்ற வேண்டும். பிள்ளை எப்போதும் பார்க்கும் முன்பள்ளிச் சூழலின் ஒரு முக்கிய அங்கம் என்ற வகையில் ஆசிரியை பிள்ளையைக் கவரும் நிலையில் இருக்க வேண்டும். நேர்த்தியாக, அழகாக, முழுமையாக உடையணிந்து பிள்ளைகள் விரும்பும் மணங்கள் பூசி ஒழுங்குமுறையுடன் கருமாற்றுவதும், மகிழ்ச்சியை எப்போதும் வெளிக்காட்டுவதும், ஆர்வத்தை வெளிப்படுத்தும் முகமலர்ச்சியுள்ள ஒருவராக இருத்தலும் முக்கியமானவையாகும். குழந்தைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அழகான, இளமையான, நன்றாக உடையணியும், சிரித்த முகத்துடன் பழகும் ஆசிரியைகளையே அவர்கள் விரும்புவதாக கண்டறியப்பட்டுள்ளது. இங்கு இலட்சிய (Ideal) நிலையில் எப்போதும் ஒருவர் இருக்க முடியாது என்பது உண்மை. ஆனால் பிள்ளைகளின் முன்னிலையில் எப்போதும் இவற்றை மனதில் வைத்திருப்பதுடன் பிள்ளைகளை மதித்து அவர்களின் ஒவ்வொரு கருமத்தையும் மதித்து அவர் விளங்கிக் கருமமாற்றும் நிலைமையை மறந்தவிடக் கூடாது. அவர்கள் எப்போதும் எடுத்துக்காட்டும், உயர் பண்பும் வெளிப்படுபவர்களாக இருப்பது முக்கியம். ஒவ்வொரு நடவடிக்கையிலும் பேச்சிலும், சிரிப்பிலும், பார்வையிலும், விளிப்பிலும், வாழ்த்துதலிலும் இவற்றை உறுதிப்படுத்த வழிபார்த்துக் கொள்ள வேண்டும். அழகின், அன்பின் இருப்பிடமான தனது தாய்க்கு ஒப்பாக அல்லது தாய்க்கு அடுத்தபடியாக பிள்ளை முன்பள்ளி ஆசிரியையைக் காண வேண்டும். தாய்க்கு வழங்கும் மதிப்பை, கௌரவத்தை, நெருக்கத்தை, அன்னியோன்னியத்தை இயல்பாகவே பிள்ளை வெளிக்காட்டும் நிலைமைக்க இட்டுச் செல்ல வேண்டும்.

2. இரண்டாவது படிமுறையில், முறைசாரா நிலையில் உள்ள பிள்ளைகளுடன் கருமமாற்றுகிறேன் என்பதை நினைவில் வைத்துதிருக்க வேண்டும். எந்த நோக்கமுமின்றி ஓடும், பாயும், ஆடும், சிரிக்கும், துள்ளும் நிலையில் இப்பிள்ளைகள் இருப்பார்கள். இந்த நிலையை அனுசரித்து ஒரு வேலையில் எல்லோரையும் ஒன்றுபடுத்த அல்லது ஒன்றிணைக்க வேண்டிய தேவை ஆசிரியைக்கு ஏற்படும். கற்றல் அல்லது எதிர்காலம் பற்றிச் சிந்தித்தல், திறமை, திறமையின்மை போன்ற எந்த எண்ணக்கருவும் அவர்களிடத்தே விருத்தியடையவில்லை. எனவே எந்த வழிமுறையைக் கையாண்டு இவர்களை ஊக்குவிக்கலாம் என்ற உத்தி முறைகளை ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். தமக்கு விருப்பமான எந்த வழியையும் கூட்டியும் குறைத்தும் பின்பற்றும் பூரண சுதந்திரம் ஆசிரியைக்கு உண்டு.பொருத்தமற்ற, பிள்ளைகளிடம் எடுபடாத முறைகளைக் கொண்டு பிள்ளைகளை அணுகி அவை தோல்வியடையும்போது விரக்தி நிலையை அடையாதிருக்க கவர்ச்சியான உத்திகளைக் கையாள்வது முக்கியமானதாகும். பிள்ளைகளை ஒரு செயற்பாட்டிலிருந்து அல்லது கருமத்திலிருந்து தவிர்ப்பதை அல்லது தனது பக்கம் இழுத்துக் கொள்வதை நோக்காகக் கொள்ளாது ஒரு கருப்பொருளின் அடிப்படையில் பிள்ளையைத் தம் பக்கம் ஈர்த்துக் கொள்ளும் வழி வகைகள் பற்றி எப்போதும் சிந்திக்க வேண்டும்.

3. பிள்ளைகளின் ஆர்வங்களுக்கு மெருகூட்டி பொருட்களுடன் கூடிய நடைமுறைப் பயிற்சிகளை முன்வைக்கும அளவுக்கு தன்னை உருவாக்கிக் கொள்ளாதவிடத்து இயல்பாகவே பின்னடைய வேண்டிய நிலை முன்பள்ளி ஆசிரியைக்கு ஏற்படும். தனது தலையீட்டை முடியுமான அளவு குறைத்துக் கொள்ள ஆசிரியை ஆவன செய்ய வேண்டும். ஆசிரியை பல சந்தர்ப்பங்களில் தவறு விடும் நிலை இங்கு காணப்படுகின்றது. உதாரணமாக தவறான ஒரு கருமத்தில் ஈடுபட்டுள்ள ஒரு குறும்புக்காரப் பையனைப் பாராட்டுவதும் அத்தகைய ஒரு தவறுதான். எதிர்காலத்தில் பெரிய ஒரு தவறைச் செய்தவற்கு அந்தப் பாராட்டும் தூண்டுதலாக அமையலாம். அத்துடன் பிள்ளை ஒரு பிரச்சினையை எதிர் கொண்டிருப்பது தெரிந்தால் அதிலிருந்து விடுபடும் வழியை அதற்குக் காட்ட வேண்டும். இன்றேல் பிள்ளையின் ஆர்வம் மழுங்கிவிடக் கூடும். உண்மையில் பிள்ளையின் நோக்கம் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். அதன் நோக்கம் வெறுமனே ஒரு கருமத்தில் ஈடுபடுவதன்று. மாறாக அறை கூவல்களை எதிர்கொள்வதாகும். தனது தகுதிக்கேற்ற பாரத்தைச் சுமக்கும் ஒருவருக்கு உதவி தேவைப்படாது. அத்தகைய பிள்ளையை உன்னிப்பாக அதற்குப் புரியக்கூடிய விதமாக அவதானிப்பதும் கூட அதனை அக்காரியத்திலிருந்து அகற்றி விடக்கூடும். உரிய வேலையை உரிய வழியில் செய்வதைக் கண்ட போது ஆசிரியர் பார்வையை விலக்கிக் காணாதது போல இருப்பது கூடிய பயனளிக்கும் என்று தெரிந்தால் அப்படிச் செய்ய வேண்டும். ஒரே பொருளை இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் எடுக்க முயற்சிக்கும் போது அல்லது ஒரு பொருளுக்காக இருவர் போட்டி போடும் போது கூட உதவி கோரப்படாதவிடத்து அவர்களாகவே ஒரு முடிவுக்கு வர இடமளித்து ஒதுங்கிவிட வேண்டும். பிள்ளை ஒரு பொருளுடன் ஒரு கருமத்தில் ஈடுபட்டு முடிவடைந்து விட்டால் அதனை இன்னொரு பொருளுடன் இன்னொரு கருமத்தில் ஈடுபடுத்துவது தான் ஆசிரியரது பணியாக இருத்தல் வேண்டும். சிலவேலைகளில் ஒரு பிள்ளை ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டு முடிவடைந்த பின் வேறொரு வேலைக்கு மாறுவதற்கு முன்பதாக அந்தப் பொருளுடன் அல்லது ஆக்கத்துடன் ஆசிரியரை விருப்புடன் பார்த்து அதற்குக் கணிப்பை எதிர்பார்க்கக்கூடும். அத்தகைய சந்தப்பத்தில் மற்ற எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு "நல்ல அழகாக இருக்கிறது", "கெட்டிக்காரி/கொட்டிக்காரன்" என்று வாய்விட்டுக் கூற வேண்டும். ஒரு கருமம் வெற்றியடைந்தமையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வதில் ஆசிரியரும் பிள்ளையுடன் இணைந்து கொள்ள வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியைகள் பிள்ளைகளின் உடலைச் சுத்தம் செய்து உணவூட்டி விடுகின்ற வேலையாட்கள் அல்லர். பிள்ளைகள் சுதந்திரமாக இவ்வேலைகளைச் செய்து கொள்ளும் நிலை உருவாக்கப்படல் வேண்டும். தன் வேலைகளைத் தானே செய்து கொள்ள தனக்காகத் தானே சிந்திக்க நமது பிள்ளைகளைப் பழக்க வேண்டும்.

அவர்களுக்கு அதற்காக உதவி செய்ய வேண்டும். பிள்ளையை ஒரு சுதந்திர பிரசையாக்கும் இலக்கை மனதில் கொண்டு கருமமாற்றும் ஆசிரியராக எப்போதும் நடந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் செய்து கொடுத்து பிள்ளைகளுக்காகவும் தானே சிந்தித்துச் செயலாற்றி முன்பள்ளியில் வந்து சேர்ந்த அதே மட்டத்தில் அல்லது தரத்தில் பிள்ளையை வெளியேற்ற நினைக்கக்கூடாது.

பிள்ளையினது இயல்பின் இரகசியத்தை ஊடுருவிப் பார்க்கும் திறமை ஆசிரியர்களுக்குண்டு. பிள்ளைகள் பற்றிய எளிமையான விடயங்கள் தெரிந்த, அவர்களின் வாழ்க்கைத் தகவல்களை அறிந்த, ஆசிரியர்கள் அவர்கள் மீது கூடிய கருணையுடன் அன்புடன் நடந்து கொள்வர். தமது விருப்பு வெறுப்புக்களுக்கப்பால் நின்று, பிள்ளையின் தனிப்பட்ட தொடர்புகளுக்கும் அந்தஸ்துகளுக்கும் அப்பால் நின்று பிள்ளை மீது அன்பு செலுத்தும் நிலை உருவாகுமெனின் அம் முன்பள்ளி ஆசிரியை உயர்ந்த நிலையில் உள்ளார் என்று துணிந்து சொல்லலாம்.

உண்மையான அன்பு என்பது தனது பிள்ளையின் மீது அல்லது உறவினர் மீது செலுத்துவது அல்ல. இதனை முதன் முதலில் பரீட்சித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் முன்பள்ளி ஆசிரியைக்குக் கிடைக்கும். அப்போது அன்பின் மகத்துவத்தை முதல் தடவையாக உணரலாம். முன்பள்ளி ஆசிரியையாக வரும் பொழுது முதலில் குறைந்த அளவு வேலை செய்து கூடிய அளவு சம்பளம் பெறும் நோக்குடன் வந்திருக்கலாம். அல்லது அதிகாரம், தலைமைத்துவம், புகழ் போன்றவற்றையும் விரும்பியிருக்கலாம். பெரியதொரு முன்பள்ளியின் நிர்வாகியாக வரும் எண்ணம் கூட இருந்திருக்கலாம். ஆனால் இவற்றில் எல்லாம் உண்மையான மகிழ்ச்சி இல்லை. பிள்ளைகளிடையே சஞ்சரிக்கும் போது தான் மகிழ்ச்சியின் சொல்லார்ந்த பயன்களை அடைய முடியும் என்பது விளங்கும்.

அத்துடன் பிள்ளை விருத்தி தொடர்பாக நிகழும் மாற்றங்கள் பற்றி தொடர் அவதானம் நிரந்தரமாக முன்பள்ளி ஆசிரியையிடம் இருக்க வேண்டும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் பிள்ளைகள் தொடர்பாகவும் நவீன கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் தொடர்பாகவும் வரும் காத்திரமான ஆக்கங்கள் நிகழ்ச்சிகளை வாசித்தும் கேட்டும் பார்த்தும் புதியவற்றைத் தமதாக்கிக் கொள்ளும் திறன் எப்போதும் முன்பள்ளி ஆசிரியரிடம் குறைவின்றி இருக்க வேண்டும். கண்காட்சிகள், முன்பள்ளி விழாக்கள் போன்றவற்றில் பங்குபற்றி அனுபவம் பெறுதலும், பத்திரிகை, சஞ்சிகைகளிலிருந்து தமது துறைக்கு தொடர்பான விடயங்களை சேகரிக்கும் ஆர்வமும் எப்போதும் இருக்க வேண்டும்.

முன்பள்ளிகளில் சேரும் பிள்ளைகள் சில மாதங்களில் அல்லது ஓரிரு வருடங்களில் முறையான ஆரம்பப் பாடசாலையில் சேர இருப்பவர்கள் என்பது தெரிந்ததே. எனவே முன்பள்ளி ஆசிரியை எப்போதும் ஆரம்பக் கல்விப் பாடநெறி பற்றியும் குறிப்பாக தரம் ஒன்றில் மணவர்கள் கற்கப் போகும் விடயங்கள் பற்றியும் பாடத்திட்டம், செயற்பாடுகள் போன்றவை பற்றியும் நன்கறிந்திருக்க வேண்டும். பாடசாலையில் தரம் ஒன்றில் கற்பிக்கும் விடயங்களை முன்பள்ளியிலேயே கற்பிக்க வேண்டிய அவசியமில்லை எனினும் இந்த விடயங்கள் தொடர்பான விளக்கத்தை முன்பள்ளி ஆசிரியை பெற்றிருத்தல் வேண்டும்.

பிள்ளைகளிடையே நல்ல பழக்கங்களை ஏற்படுத்தவும் பண்பாடுகளை வளர்க்கவும் எத்தகைய வழி முறைகளைக் கையாளலாம் என்ற அவதானிப்பும் தேடலும் எப்போதும் முன்பள்ளி ஆசிரியரிடம் இருக்க வேண்டும். திட்டமிட்டுச் செய்து பார்த்தல் மூலமும் பிள்ளைகளின் நடத்தைகளை தொடர்ந்து அவதானிப்பதன் மூலமும் இதனைச் செய்யலாம். ஒரு தொகுதிப் பிள்ளைகளூடாகப் பெறும் அனுபவங்கள் அதற்கடுத்த தொகுதிப் பிள்ளைகளிடையே நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டலாக அமைய வேண்டும்.

(எம்.எச்.எம். ஹஸன் எழுதிய "முன்பள்ளிக் கல்வி" (கலைத்திட்டமும் வழிகாட்டலும்) எனும் நூலில் இருந்து..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர இலங்கையில் பாலர் கல்வி - அரசின் பங்களிப்பு


**முனைவர் அனுஷ்சியா சத்தியசீலன்**
சிரேஷ்டவிரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


பாலர்கல்வி



## முன்னுரை

குழந்தைகள் பாடசாலைக்குச் சென்று ஆரம்பக் கல்வியைத் தொடங்கும் நிலைக்கு முன்னராகப் பெறுகின்ற முறைசார்ந்த நிறுவன ரீதியான கல்விச் செயற்பாட்டை பாலர் கல்வி என்று குறிப்பிடுவர். முன்பள்ளிக் கல்வி என்றும் (Pre-School/ Education) பாலர் கல்வியென்றும் (Childhood Education) அழைக்கப்படும். இக்கல்வி பொதுவாக 3/4 - 5/6 வயதுக்குட்பட்ட பருவத்தினரை உள்ளடக்குகின்றது.

"முன்பள்ளி" (Pre - School) என்ற எண்ணக்கரு 17 ஆம் நூற்றாண்டளவில் வளர்ச்சி காணத்தொடங்கியது. 5/6 வயதுக்குட்பட்ட பருவத்தினரின் முக்கியத்துவத்தைக் கல்விச் சிந்தனையாளர்கள் பலர் வற்புறுத்தத் தொடங்கியமை, பொருளாதார மந்த நிலைமைகளினால் ஆண்களுடன், பெண்களும் வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியமேற்பட்டமை, வேலைக்குச் செல்லுதல் என்பது பெண்களுக்கான அந்தஸ்தை அளித்தமையினால் அவர்கள் தொழில் பார்க்கத் தலைப்பட்டமை, கூட்டுக்குடும்பங்களுக்குப் பதிலாகத் தனிக் குடும்பங்கள் உருவாகியமை போன்ற இன்னோரன்ன காரணிகள் முன்பள்ளிக் கல்விக்கான தேவையை அழுத்தியபோது முன்பள்ளிக் கல்வியானது முறையாக நிறுவன ரீதியாக உருவாகி வளர்ச்சி கண்டது. மேலும் பெற்றோர், ஆசிரியர் அதில் காட்டிய ஆர்வம், அப்பள்ளிக் கல்வியினால் பெறப்பட்ட அனுகூலங்கள் போன்றவை அதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்தின. இவ்வாறு ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சிகண்ட முன்பள்ளிகள் அதன் குடியேற்றங்களாகவிருந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் நிறுவன ரீதியாக வளர்ச்சி கண்டமை இயல்பான போக்காக இருந்தது.

பாலர் கல்வியின் அவசியம் இன்று குறிப்பிடத்தக்களவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வெறும் சிந்தனை வழியிலன்றி நடைமுறைச் செயற்பாடுகள், ஆய்வுகள் பாலர் பருவத்தினர்பாலான கரிசனையை வெளிப்படுத்தின. பாலர் பராமரிப்பு, கல்விச் செயற்பாடுகள், கல்விச்செயற்பாடுகளினூடான வழிகாட்டல்கள், சுகாதாரமும் போசாக்கும், பாலர் கல்வி நிலையங்களின் அமைப்பு முறைமை, பாலர் கல்வி கலைத்திட்ட வடிவமைப்பு போன்றன தொடர்பான பல்வேறு ஆய்வுகளும் இன்று முனைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

*பொருளாதார மந்த நிலைமைகளினால் ஆண்களுடன், பெண்களும் வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியமேற்பட்டமை, வேலைக்குச் செல்லுதல் என்பது பெண்களுக்கான அந்தஸ்தை அளித்தமையினால் அவர்கள் தொழில் பார்க்கத் தலைப்பட்டமை, கூட்டுக்குடும்பங்களுக்குப் பதிலாகத் தனிக் குடும்பங்கள் உருவாகியமை போன்ற இன்னோரன்ன காரணிகள் முன்பள்ளிக் கல்விக்கான தேவையை அழுத்தியபோது முன்பள்ளிக் கல்வியானது முறையாக நிறுவன ரீதியாக உருவாகி வளர்ச்சி கண்டது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படையிலேயே 21 ஆம் நூற்றாண்டானது "பாலர் கல்விக்கான நூற்றாண்டு" எனக் குறிப்பிடப்படுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. இவ்விடத்தில் திரு. நெல்சன் மண்டேலாவின் (தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி) பின்வரும் கருத்து நோக்கத்தக்கது: "என்னருமை குழந்தைகளே உங்களுடைய கண்களில் ஒளியைக் காண்கின்றேன். உங்கள் உடல்களில் துடிப்பையும் ஆன்மாவின் எதிர்பார்ப்பையும் நான் காண்கின்றேன். எனக்குத் தெரியும் நானல்ல நீங்களே எதிர்காலத்தை வடிவமைக்கப் போகின்றவர்கள். நானல்ல நீங்களே பிழைகளைக் கண்டுணர்ந்து எல்லாவற்றையும் சரியாக்கப் போகின்றவர்கள்" (UNICEF 2001)

அந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்த இக்கல்விச் செயற்பாட்டில் இலங்கையைப் பொறுத்தவரையில் அரசின் பங்களிப்பு எத்தகையதாக இருந்தது, இருக்கின்றது என்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை இடம்பெறுகின்றது.

**சுதந்திர இலங்கையில் பாலர் கல்வி - அரசின் பங்களிப்பு**

இலங்கையில் பாலர் கல்விச் செயற்பாடுகள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இடம்பெற்றாலும், அதன் நிறுவன ரீதியான செயற்பாடுகள் 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலிருந்தே முனைப்புடன் இயங்கியமையை அறிய முடிகின்றது. அதனால் 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலிருந்து அரசின் பங்களிப்பு எத்தகையதாக இடம்பெற்றது என்பதனை இங்கு கருத்திற் கொள்வோம்.

இலங்கை அரசாங்கம் 1960 இல் பாடசாலைகளைத் தேசிய உடமையாக்கியபோது பாலர் பாடசாலைகள் எதனையும் பொறுப்பேற்கவில்லையென்பதுடன் முன்பள்ளிகள் பற்றிய தனது கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை. அரசாங்கச் செயற்பாட்டினைப் பொறுத்தவரையில் 1961 இல் பேராசிரியர் ஜே. ஈ. ஜெயசூரியா தலைமையிலான தேசிய ஆணைக்குழுவே முதன்முதலாக முன்பள்ளி பற்றிய கருத்துக்களைத் தெரிவித்தது. அக்குழு "அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் கல்வித் தரத்தைக் கல்வித் திணைக்களங்கள் கண்காணிக்க வேண்டும்" எனத் தெரிவித்தது. ஆயின் அது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1972 இன் கல்விச் சீர்திருத்தம் கல்வியில் ஒரு "புதிய பாதை" எனக் குறிப்பிடப்பட்டது. அச்சீர்திருத்தத்தில் பாடசாலை ஆரம்ப வயது 6 ஆக்கப்பட்டபோது (1972 வரை பாடசாலை சேரும் வயது 5 ஆக இருந்தது) முன்பள்ளிக் கல்வி பற்றிய கருத்து பின்வருமாறு இடம்பெற்றது. "ஒரு பிள்ளைக்கு முன்பள்ளிக்கல்வி தருவது தக்கதேயாகும். ஆனால் முழுமையான முன்பள்ளிக் கல்வி தருவதாயின், மிக நவீனமான கல்வித்துணைகளும், உபகரணங்களும் வேண்டுமாதலால் செலவு அதிகமாகும். அதற்குச் சிறப்புப் பயிற்சி பெற்ற "ஆசிரியர் தாதிகள்" அவசியம். அதனால் அப்படிப்பட்ட முழுமையான முன்பள்ளிக் கல்வியை வழங்குதல் பொருளாதார வளர்ச்சிபெற்று, உயர்ந்த தேசிய வருமானம் உள்ள நாடுகளிற்றான் சாத்தியமாகும்." இங்கு முன்பள்ளிக் கல்வியின் அவசியத்தை அரசு ஏற்றுக்கொண்டபோதும் அதனைத் தாமே வழங்குவதிலான தடைகளைச் சுட்டிக்காட்டி அதற்கான நாட்டமின்மையை வெளிப்படுத்தியமையை உணரமுடிகின்றது.

1979 இன் பிரேமரத்தன தலைமையிலான கல்விக்குழு பாலர் பாடசாலைகள் பொதுக் கணிப்பிட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் அவை பதிவு செய்யப்பட்டு வழிகாட்டலும், உதவியும் வழங்கப்படவேண்டுமெனவும் சிபார்சு செய்தது. இருப்பினும் அக்குழுவும் முன்பள்ளிக் கல்விக்கான பொறுப்பு யாரிடம் உள்ளதென்பதைத் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. 1981 இன் கல்வி வெள்ளையறிக்கை மீண்டும் பாடசாலை அனுமதிவயதை 5 ஆக்கியது. அதன் பின்னணியில் பிள்ளையின் ஆரோக்கிய விருத்திக்கு முன்பள்ளிக் கல்வி அவசியமில்லை என்ற கருத்தை அது இழையோடவிட்டிருந்தது.

1990 இன் இளைஞர் அமைதியின்மைக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவோ முன்பள்ளிக் கல்விக்கான அவசியத்தை ஏற்றதுடன் அதனைப் பின்வருமாறு வெளிப்படுத்தியிருந்தது. "முன்பள்ளிகளின் செயற்பாட்டினால் ஆரம்பப் பள்ளிக் கற்றலில் நெருங்கிய தொடர்பும், தேர்ச்சியும் ஏற்படுமென்றும், இதனால் இக்கல்வி விருத்தியில் கல்விமான்கள் வழிகாட்ட வேண்டும்" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் அங்கும் அரசினுடைய நேரடிக் கண்காணிப்பு, பொறுப்பு பற்றிய கருத்துக்கள் எதுவுமே தெளிவாக்கப்படவில்லை. 1991 இன் தேசிய கல்வி ஆணைக்குழு "பாலர் நிலையங்கள் தனியார் நிலையங்களாக இருக்க வேண்டும் என்பதுடன், எல்லோருக்கும் பாலர் கல்வி அவசியமில்லை என்றும், வேலைக்குச் செல்வோர் பாலர் கல்விக்கென ஒழுங்குகளைச் செய்வது மேலதிக சுமையாகலாம்" என்றும் கூறியதனூடாக முன்னைய கருத்துக்கு முரணான கருத்தினை முன்வைத்தது. ஆயினும், 1997 இன் ஜனாதிபதி துரித நடவடிக்கைக் குழுவானது முன்பள்ளி தொடர்பான தனது கூடிய கரிசனையை வெளிப்படுத்தியது. தகுந்த வழிகாட்டலும் சிறந்த மேற்பார்வையும் வேண்டிநிற்கும் முன்பள்ளிச் செயற்பாடானது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்போது கூடிய பயனைத் தரக்கூடுமென்பதனைக் கூறியதுடன் நாட்டின் பல பாகங்களிலும் முன்பள்ளிகள் இயங்கினாலும், அவற்றுள் பெரும்பாலானவை தரத்தில் குறைந்தனவாகச் செயற்படுவதனையும் சுட்டிக்காட்டியது. அதன்வழி அக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவால் பின்வரும் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டு அமுல்படுத்தப்படப் போவதாக எடுத்துக் காட்டப்பட்டது. அதன் பிரகாரம்,

- 3-5 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகள் கூடியளவில் பங்குபற்றுவதற்கேற்ற வகையில் அதிக எண்ணிக்கையில் முன்பள்ளிகளை உருவாக்கி அதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தலை ஊக்குவித்தல்.
- தகுந்த அதிகாரமுடையவர்களால் முன்பள்ளி ஆசிரியரின் தரம், பள்ளி வசதிகள், மேற்பார்வை போன்ற விடயங்களில் சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் முன்பள்ளிகளை ஒழுங்கமைத்தல்.
- பல்கலைக் கழகங்கள், கல்வி, உயர் கல்வியமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் பொருத்தமான முகவர் நிலையங்களைச் சேர்ந்த இக்குறிக்கப்பட்ட துறையில் திறமை வாய்ந்தோரால் இம்முன்பள்ளிக்கான அடிப்படைப் பாடத்திட்டத்தை கையளிக்கும் முன் தயாரிக்கப்பட்ட வழிகாட்டியை ஆதாரமாகக் கொண்டு முன்னோடிச் சோதனை நடத்துதல். எவ்வாறெனினும் இவ்வாறு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டம் ஒரு வழிகாட்டியாக மாத்திரம் அமையுமேயொழிய ஆசிரியர்களின் சுய ஆக்கங்களை மழுங்கடிப்பதாக அமையமாட்டாது.
- கல்வி உயர் கல்வி அமைச்சு, இம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதோடு அவர்களுக்கு மாதிரி கற்பித்தலை விருத்தி செய்து கற்றலுக்கான பாடநூல்களையும் வழங்குதல்.
- ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் பிள்ளை வளர்ச்சிக்கான திணைக்களமும், பிள்ளைக் கல்வி நிலையமொன்றையும் நிறுவுதல் - இந்நிலையமானது பிள்ளை வளர்ச்சி பற்றிய அறிவையும் ஆய்வுகளையும் நடத்தி தகவல்களைப் பெறும் வங்கியை உருவாக்குவதோடு நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிக்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் மதிப்பீடு செய்யும்.

இதுவரை நோக்கியவற்றின்றும் இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு சில முக்கிய ஆணைக்குழுக்களுடைய சிபார்சுகளினூடாக ஆங்காங்கே சில காலங்களில் முன்பள்ளிக் கல்வியிலான அரசின் பங்களிப்புக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டமையை அறியமுடிகின்றது. ஆயின் நடைமுறையில் முன்பள்ளிக் கல்விக்கான அரசின் செயற்பாடுகள் கனதியாக இருக்கவில்லை என்பதே யதார்த்தம்.

**பாலர் கல்வி - சில குறிப்புகள்**

எந்தவொரு செயற்பாடும் எதிர்பார்க்கப்படுகின்றது. வரவேற்கப்படுகின்றது, விரிவடைந்து வருகின்றது என்றால் அடிப்படையில் அதற்கான கேள்வி



சமூகத்தில் அதிகரித்து வருகின்றது என்றே பொருள் கொள்ளப்படும். அந்த வகையிலேயே பாலர் கல்விச் செயற்பாடுகளையும் நாம் நோக்க முடியும். பாலர்கல்வி, கேள்வி அதிகரிப்புக்கான காரணங்கள் பலவாறாக இருந்தாலும் சமுதாயம் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்களே இதற்கான முதன்மைக் காரணங்களாகின்றன. அந்த வகையில் பாலர் கல்வியினால் பெறப்படும் அனுகூலங்களாகப் பின்வருவன பொதுவாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. குழந்தையின் ஆளுமை உருவாக்கம் / விருத்தி
2. உடல், உள வளர்ச்சி
3. மொழி, எண் அறிவு விருத்தி
4. சிறப்பான பயனுள்ள பொழுதுபோக்கு
5. மனித நேய விழுமியங்களை அறிய உதவுதல்
6. சமூகமயமாக்கல்
7. ஏனைய பொது ஆற்றல்களை, ஊக்கங்களை வளர்த்தல்
8. பொருத்தமான எண்ணக்கருவாக்கம்
9. ஆரம்பக் கல்விக்கான நல்ல அத்திவாரம்

மனிதனின் வளர்ச்சியைப் பல்வேறு படிமுறைகளாக வகுத்து நோக்கிய ஆராய்ச்சியாளர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர். "ஒரு குழந்தை பிறக்கும் போது 23% மூளை வளர்ச்சியுடன் பிறக்கின்றது. 70% மான வளர்ச்சி அதன் 6 வயதினுள் ஏற்படுகின்றது. எஞ்சியுள்ள 7% மான வளர்ச்சியே 23 வயதினுள் அடையப்பெறுகின்றது" இது பாலர் கல்வியின் முக்கியத்துவத்தை அப்பராயத்தினர்பால் காட்டப்படவேண்டிய அக்கறையை உணர்த்தப்போதுமானதாகும். அந்த வகையில் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்விச் செயற்பாட்டில் அரசினுடைய பங்களிப்பு என்பது வெறும் சிபார்சு அளவில் என்பதன்றி நடைமுறைச் செயற்பாடுகளிலும் குறிப்பிடத்தக்களவில் இருத்தல் என்பது மிக அவசியமானது, வரவேற்கத்தக்கது. "பிள்ளையின் பராமரிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசட்டை செய்தலாகாது. தட்டுத்தடுமாறும் மனித சமுதாயம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு அது ஒன்றே அவசியமானது. இதனைவிடப் பெறுமதிவாய்ந்த முயற்சி வேறு ஏதுமில்லை. உலகச் சிறுவர்கள் சார்பில் அவர்களின் குழந்தைப் பருவத்தில் அவர்களைச் செம்மையாகப் பராமரிப்பதிலேயே நம் வளர்ச்சி தங்கியிருக்கின்றது என்பதனை அரசாங்கம் உணர்ந்து கொள்வது அவசியம்." என்ற ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் கூற்று அலட்சியப்படுத்தப்படுவதற்கில்லை.

பொதுவாகக் கல்வித் தரமானது தரமான ஆசிரிய உள்ளீடுகளிலேயே தங்கியுள்ளது. தரமான ஆசிரியத்துவமென்பது பொருத்தமான ஆசிரியர் கல்வி, பயிற்சி வழங்கலிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் இலங்கையின் பாலர்கல்விஆசிரியர் கல்வி, பயிற்சிகளில் பல பிரச்சினைகள், குறைபாடுகள் அவ்வப்போது ஆய்வுகள் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான குறைபாடுகள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

1. ஆசிரியருக்கான கல்வித் தகுதி தொடர்பான வரையறையின்மை
2. பயிற்சி நெறிகளுக்கான வரையறை, மேற்பார்வை செய்தல், தரமேம்பாட்டை உறுதிசெய்தல் என்பன போதியதாக இல்லாமை.
3. யாரும் பயிற்சி பெறலாம் என்ற நிலைமை காணப்படுகின்றமை
4. பாலர் கல்வி ஆசிரியர்களுக்கான சம்பளம், சலுகைகள் கவர்ச்சிகரமாக இன்மை
5. பாலர் கல்வியின் அவசியம், பயிற்சியின் அவசியம் உண்மையாக உணரப்படாமை
6. பயிற்சி பெறுபவர் விரைவில் அத்தொழிலைவிட்டு விலகுதல் - அடிக்கடி புதியவர் வரவு இடம்பெறுதல்.
7. விசேட புலமைப் பரிசில் திட்டங்களோ, வாண்மை விருத்திச் செயற்திட்டங்களோ போதியதாக இன்மை
8. பொதுவான கலைத்திட்ட ஒழுங்கமைப்பு இன்மை
9. வளப்பற்றாக்குறை காணப்படுகின்றமை
10. இத்துறைசார்ந்த புத்தாக்கங்களைப் பெறுவதில் தடைகள் காணப்படுகின்றமை
11. இன்றைய சூழலில் கூட பெற்றோர், சமூகத்தினரிடையே இக்கல்வி தொடர்பாக போதியளவு அக்கறை காணப்படாமை

இவற்றுள் ஒரு சில தவிர்ந்த ஏனைய குறைபாடுகள் யாவும் வளர்ச்சியடைந்து வருகின்ற இலங்கை போன்ற நாடுகளில் பெருமளவில் அல்லது குறிப்பிடத்தக்களவில் அரசு என்ற பொது நிறுவனத்தாலேயே சீர்ப்படுத்தப்படக்கூடியன என்பதில் எந்தவித கருத்து முரண்பாட்டிற்கும் இடமில்லை.

இந்தவகையில் அரசினுடைய பொறுப்பும், பங்களிப்பும் குறிப்பிடத்தக்களவிலேனும் இருக்க வேண்டும் என்பதே பாலர் கல்வி வளர்ச்சிக்கும், தரத்திற்கும் அதன் நோக்கங்களின் நிறைவேற்றத்திற்கும் நல்ல அத்திவாரத்தை இடமுடியும். "பூரணமாக கல்வி முறையின் அடிப்படைக் கட்டமைப்பாக விளங்கும் முன்பள்ளிக் கல்வித் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமை பிரதான குறைபாடாகும். இம் முன்பள்ளிகளை பூரணமாகக் கையேற்பதற்கு அரசு தயங்குவதாகத் தெரிகிறது. அதனால் வசதி வாய்ந்த குடும்பத்துப் பிள்ளைகள் மட்டும் சிறந்த முன்பள்ளிக் கல்வியைப் பெற, வறிய குடும்பத்துப் பிள்ளைகள் அவ்வனுபவத்தைப் பெறமுடியாது பின்தங்கி நிற்க வேண்டியுள்ளது" என்ற இந்தியக் கல்வியிலாளர் கருத்து எமது நாட்டைப் பொறுத்தவரையில் புறந்தள்ளப்பட முடியாததாகும்.

**முடிவுரை**

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று இன்று பாலர் கல்வியின் அவசியம் பெரும்பாலும் உணரப்பட்டுள்ளது. அந்நிலைமையில் இலங்கையரசு வெறுமனே சிபார்சுகளில் மட்டும் பாலர் கல்வி பற்றிய சிந்தனைகளை இழையோடவிடுவதில் திருப்தி கண்டுவிட முடியாது. பாலர் நிறுவனங்களின் பொருத்தப்பாடு, ஒழுங்கமைப்பு, ஆசிரியர் கல்வித்தரம், அவர்களுக்கான கல்வி, பயிற்சி, வினைத்திறன் மிக்கதான கலைத்திட்ட ஆக்கம், சம்பளம், சலுகைகள், வளப்பகிர்வு, புத்தாக்கங்களை ஊக்குவித்தல், பொருத்தமான உட்கட்டமைப்பு இவற்றோடு இணைந்ததான முழுமையான செயற்பாடுகள் என யாவற்றையும் முடிந்தளவில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலில், வழிகாட்டுதலில் அரசு கரிசனையுடன் பொறுப்பேற்றுச் செயற்படல் அவசியம். அப்போதுதான் பாலர் கல்வியூடாகப் பெறப்படுவதாகக் கொள்ளப்படும் அத்துணை பயன்களும் குறிப்பிடத்தக்களவிலேனும் பிள்ளைகளைச் சென்றடைய முடியும். "வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளின் அரசாங்கங்கள் பொருத்தமான வேண்டத்தக்க வளங்களை தமது தேசிய நிதி ஒதுக்கீடுகளினூடாக வழங்கவில்லையாயின் பாலர் பருவத்து புத்துயிர்ப்பு, வளர்ச்சி, அபிவிருத்தி என்பவை வெறுமனே எதிர்பார்ப்புகளாக மட்டும் அமைந்துவிடும்." என்ற UNICEF (2001) வின் கருத்தானது அரசாங்கத்தின் போதிய பங்களிப்பை வலியுறுத்துவதாகவே இடம் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஞானசக்தி கணேசநாதன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அழகியல்

*அழகியல் கலையை வழங்கும் களங்களாக முன் ஆரம்ப பாடசாலை விளங்குகிறது. அறிவுக்கு வழி திறக்கும். புலமைகளுக்கும், தசைகளுக்கும் நன்கு பயிற்சியளிக்க உதவும் கலை அழகியற் கலையேயாகும்.*

# முன் ஆரம்பக் கல்வியில் அழகியல்

சுதந்திரமான வெளிப்படுத்தல் உருவானவது சுதந்திரமான பிள்ளைகளிடம் இருந்ததாகும். பிள்ளைகளிடத்தே இச் சுதந்திரம் ஏற்படுவது தனது சுற்றாடலை நன்கு கிரகித்துக் கொள்வதனாலேயே ஆகும்.

பிள்ளையின் சுயாதீன செயற்பாட்டிற் குரிய தடைகளை நீக்கும்பொழுது பிள்ளை சுதந்திரமான வெளிப்படுத்தலில் ஈடுபடும். "Advance Montessori methods" எனும் நூலில் *மரியமொன்ரிசேரி* அம்மையார் எடுத்துக் காட்டியுள்ளார். அந்த அடிப்படையிலேயே குழந்தைகளின் தனிதன்மைக்கு மதிப்பளிப்பதன் ஊடாக அழகியற் கலை வளர்க்கப்படுகின்றது. அழகியல் கலையை வழங்கும் களங்களாக முன் ஆரம்ப பாடசாலை விளங்குகிறது. அறிவுக்கு வழி திறக்கும். புலமைகளுக்கும், தசைகளுக்கும் நன்கு பயிற்சியளிக்க உதவும் கலை அழகியற் கலையேயாகும். இக் கலையை கற்பதனூடாக மாணவர்களை பூரண ஆளுமை உடைவர்களாகவும், சமூகத்தில் சிறந்த நற்பண்புள்ள சிற்பிகளாகவும், கலைஞர்களாகவும், சுவைஞர்களாகவும் உருவாக்குவது முன் ஆரம்பப் பாடசாலை என்றே கூறவேண்டும்.

முன்பள்ளிக் கலைத்திட்டத்தில் அழகியற் பாடத்தை கற்பிப்பதன் மூலம் மாணவர் களிடையே.,

1 ஆக்க இசை
2 ஆக்க அசைவு
3 ஆக்க நடிப்பு
4 உடற்கல்வி செயற்பாடுகள்.

என நான்கு அம்சங்களில் பிரதானமாக அவதானம் செலுத்தப்படுகின்றது. ஆக்கம் எனக் கூறுவது போல செய்தல் இல்லாமல் புதிய பாங்கில் ஏதேனுமொரு ஊடகத்தினூடாக முன் வைக்கப்படும் சுயாதீனமான வெளிப்படுத்தல் ஆகும். இசை, அசைவு, நடிப்பு எனும் செயற்பாடுகள் "ஆக்கம்" எனும் சொல்லினால் விசேடப்படுத்தப்பட்டு காட்டப்படுகின்றது. இத்தகைய சிறப்பு பெற்ற அழகியல் பற்றிய தத்துவ ஞானிகளின் கருத்துக்களை நோக்கும் போது *"பென்ஸ் சீரெக்"* என்பவர் சுய வெளிப்படுத்தலை ஊக்குவித்தல், பிள்ளையின் இயல்பான ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அமையும் என்று கூறுகின்றார். அகத்தினுள் எழும் மனவெழுச்சியினால் பிள்ளை வெளிப்படுத்தலுக்கு முற்படுகின்றன. உளச் சமநிலைக்கு முக்கியமான இச் சுயசிந்தனை செயலொழுங்கு தடை இன்றி பிரவாகிப்பதற்கு இடமளிப்பது ஆசிரியரின் பணியாகும் என *"ஹோபட்ரீட்"* *"Education Throuchart"* எனும் நூலில் குறிப்பிடுகின்றார். ஆகவே முன் ஆரம்பக் கல்வி கலைத்திட்ட அமுலாக்கத்தினூடாக மாணவர்களிடையே,

5. இரசனைத்திறன் விருத்தி.
6. கற்பனைத் திறன் விருத்தி.
7. ஆக்கத்திறன் விருத்தி.
8. கருத்தை வெளிப்படுத்தும் திறன் விருத்தி.

ஆகியவற்றை வளர்க்க முடியும்.

### இரசனைத் திறன் விருத்தி.

முன் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் முன் ஆரம்பக் கல்வி மாணவர்களிடையே இரசனைத்திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கு மாண வர்களின் உளத்திற்குப் பொருத்தமான அபிநயப் பாடல்களை தெரிவு செய்து கற்பிப்பதன் ஊடாகவும், வெகுசன தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக் காட்சியில் இடம் பெறும் சிறுவர் நிகழ்வுகளை இரசிப்பதற்கு வழிப்படுத்துவதனூடாக இரசனைத்திறனை மாணவரிடத்தே ஏற்படுத்த முடியும்.

### கற்பனைத்திறன் விருத்தி

ஒரு சிறிய கதையின் அல்லது பாடலின் பகுதியை உணர்ச்சி வெளிப்பாட்டுடன் ஆசிரியர் கூறி அதனைப் போலச் செய்யுமாறு இறுவட்டினூடாகக் காட்சிப்படுத்தி அப்பாடங்களைப் புத்தொறிப்பு கருவிகளோடு இணைத்து பாட வழிப்படுதுதல் மாணவர்களை ஊக்குவிக்கும் பொழுது அவர்களிடத்து அவர்களே அறியாமலே கற்பனைத்திறன் உருவாகிவிடும். மேலும் மிருகங்கள், பறவைகள் போலச் செய்தல், பாடல்களை ஆடல் பாடும் போதும் கற்பனைத்திறன்களை மேலோங்கும்.

### ஆக்கத்திறன் விருத்தி.

ஆக்கத்திறன் விருத்தியை உருவாக்கத்திற்கு சிறிய பாடல்களை ஆசிரியர் எழுதி மேலும் கழி மண்ணில் மாணவன் ஆக்கம் செய்தல், சித்திரம், உருவங்களை உருவாக்குதல் போன்றவற்றை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொழுது அவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களை வெளிப்படுத்தவும் வாய்ப்பு வழங்குவதன் ஊடாகவும் ஆக்கத் திறனை மேம்பாடு அடையச் செய்யலாம்.

### ஆக்க சக்தியைக் கலைகள் மூலமாக வளர்த்தல் (Fostering Creativity through arts)

குழந்தைகளின் சிந்தனை, கற்பனா சக்தி, கலை உணர்வுகள், உற்றுநோக்கும் திறன் அனைத்தையும் உருவாக்குவதே இப்பருவத்தின் ஆக்கச் செயல்களின் குறிக்கோளாக அமைய வேண்டும் குழந்தையின் சிந்திக்கும் திறனையும், கற்பனையையும், புதிய உணர்வுகளையும் உருவாக்குவதே ஒரு முன்பருவப் பள்ளி ஆசிரியையின் கடமையாகும். ஆக்கச் செயல்களின் நோக்கம் ஏதோ வரையறுக்கப்பட்ட ஒன்றை உருவாக்கவேண்டும். என்பதல்ல. குழந்தை ஆக்கச் செயலை ஒரு வழியாகக் கருதித் தனது உணர்வுகளை வெளியிட வாய்ப்பளிக்கப்பட வேண்டும். ஆக்கச் செயல்களின் மூலமாகக் குழந்தையின் இயக்க வளர்ச்சியைத் திறனை வளர்க்க வேண்டும். கையில் உள்ள நுண்ணிய தசைகளின் வளர்ச்சிக்கு ஆக்கச் செயல்கள் அடிப்படையாக அமைகின்றன. பிரஷைப் (Brush) பிடித்து வர்ணம் தீட்டும் போதும், மெழுகு பென்சிலால் (Cryons) வரையும் போதும் குழந்தை அவற்றைத் திறமையோடு பிடிக்கும் சக்தியைப் பெறுகிறது. அதன் மூலம் எழுதுவதற்கும் ஆயத்தமாகிறது. கண்களும், கைகளும் சேர்ந்து செயல்படும் திறனைப் பெறுகின்றன. அதன் வாயிலாக அறிவும் வளர்வதற்கு உறுதுணையாக உள்ளன.

### ஆக்கச் செயல்களைப் புகுத்தும் முறைகள்

1. மாதிரிகளைத் தந்து அவற்றின் பிரதிகளை (Copies) எடுக்கச் செய்வதன்று ஆக்கச் செயல்களின் நோக்கம் குழந்தைகள் தாங்களாகவே தாங்கள் பெற்ற முன் அனுபவங்களின் மூலம் தங்களது உள்ளத்தில் உருவான கருத்துக்களை வெளியிட வேண்டும். மாதிரிகள் அளிக்கப்படக்கூடாது குழந்தைகள் தாங்கள் நினைத்ததை எல்லாம் வெளியிடுவதற்கு முழுச்சுதந்திரம் அளிக்க வேண்டும் அங்கு எந்தத் தடையும் இருக்கக் கூடாது.

2. குழந்தைகள் ஒன்றைப் புதிதாகப் படைக்கும் போதும், உருவாக்கும் போதும் அதற்கு உற்சாகமளித்து ஊக்குவிக்க வேண்டும். "ஓ". என்ன அழகா வரைந்துள்ளாய்" என்ற வார்த்தைகளே குழந்தைகனை மேலும் ஆக்கச் செயலில் ஈடுபட ஊக்குவிக்கும்.

3. மற்றவர்கள், குறிப்பாகக் குழந்தைகளிடையே விமர்சிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். ஒரு குழந்தையின் ஆக்க சக்தியை வேறு ஒரு குழந்தை விமர்சிக்கும் போது அந்தக் குழந்தையின் உற்சாகம் குறைய நேரிடும் குழந்தைகளிடையே போட்டி மனப்பான்மையையும் தவிர்க்க வேண்டும். எல்லாக் குழந்தைகளும் தங்களது ஆற்றல்களைக் குறித்துப் பெருமைப்படக் கூடிய முறையில் ஆசிரியை குழந்தைகளை ஊக்கு விக்க வேண்டும்.

4. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் ஆற்றலில் திருப்தி கொள்ள வேண்டும். தங்களது குழந்தை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யை, மற்ற குழந்தைகளோடு ஒப்பிட்டு நோக்கக் கூடாது. தங்களது குழந்தையின் ஆற்றல் மீது நம்பிக்கை வேண்டும். அப்போது தான் வீட்டில் உள்ள மற்றப்பெரிய குழந்தைகள் விமர்சிப்பதையும் தடுக்க முடியும்.

5. வகுப்பறையில் ஆக்கச் செயல்களைக் கொடுக்கும் போது குழந்தைகளின் உடைகள் அழுக்கடையாதவாறு மேல் அங்கி (Apron) அணிவது சிறந்தது. இல்லாவிட்டால் குழந்தைகள் தங்களது உடைகளை அழுக்காக்கும் போது பெற்றோர்கள் சினமடையக் கூடும். அதே சமயத்தில் குழந்தைகள் சுத்தமாகச் செயல்களில் ஈடுபடவும் கற்றுக்கொள்கிறார்கள்

6. வர்ணம் தீட்டுதல், களிமண் வைத்து விளையாடுதல் போன்ற அழுக்குப் படக்கூடிய செயல்களில் ஈடுபடும் போது அச்செயல்கள் முடிந்தவுடன் இடத்தையும், தங்கள் கைகால்களையும் சுத்தம் செய்யக் கூடிய பழக்கத்தைக் குழந்தைகளிடையே ஊட்ட வேண்டும்.

7. குழந்தை அவ்வயதில் செயற்படுவதற்கு ஏற்ற, திறமைக்கு ஏற்ற செயல்களையே முன் பருவப் பள்ளியில் புகுத்தவேண்டும். அவர்களது நோக்கங்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களாக இருந்தால் இவர்களால் அவற்றைச் செயல்முறையில் வெளிக் கொணர முடியாதபோது அச் செயல்களை வெறுக்க ஆரம்பித்து விடு வார்கள்.

8. குழந்தைகளின் ஆர்வத்தையும், விருப்பத் தையும் மனத்தில் கொண்டு ஆக்கச் செயல்களைச் செய்ய வைத்தல் அவசியம் விரும்பமும் ஆர்வமும் இல்லா விட்டால் திறமையாகச் செய்யமாட்டார்கள்.

### கருத்து வெளிப்பாட்டுத் திறன்

கதைகள் கூறல் கருத்தை கூறுவதற்கு வழிப்படுத்துவதனூடாக முன்பள்ளி மாணவர்களிடம் கருத்தை வெளிப்படுத்தும் திறனையும் சிந்திக்கும் திறனையும் உருவாக்க முடியும்.

### கதைகளைத் தேர்ந்து எடுத்தலும் சொல்லுதலும்

கதை, குழந்தைகள் அனைவருக்குமே மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்றாகும். கதை சொல்லுதலை ஒரு பழைமையான கலை என்று கூறலாம். வீடுகளில், சிறுகுழந்தைகளுக்குக் கதை சொல்வது, வயது முதிர்ந்தோர்களின் ஒரு பொழுது போக்காகத் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. இக்கதைகள் பழைமையானதாக அன்றாடம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டவையாக இருப்பினும் குழந்தைகள் அவற்றைக் கரைகாணா மகிழ்ச்சியுடன் செவிமடுக்கின்றனர்.

தற்போது கதை சொல்வது என்பது முன்பருவப் பள்ளி வகுப்புகளுக்கான நிகழ்ச்சிக் குறிப்புக்களில் விஞ்ஞான முறைப்படி மிகவும் தேவையான ஒன்றாகக் கருதப்படுகின்றது. குழந்தைகளை மகிழ்விக்கக் கூடிய புதிய கதைகள் தற்போது குழந்தைகள் ஆராய்ச்சி நிறுவனத்தாரால் ஆக்கப்பட்டுள்ளன. மேலும் குழந்தைகளுக்கு ஏற்ற இக்கதைகளைத் தேரந்தெடுத்து அவற்றைத் திறம்படக் கூறுவது, முன் பருவப் பள்ளியின் ஆசிரியைகளின் கடமையாகக் கருதப்படுகின்றது.

### கதை சொல்லுவதன் நோக்கம் :-

எல்லாவிதமான கதைகளையும் குழந்தைகளுக்குக் கூறுவதென்பது பொருத்தமற்றது ஒன்றாகும். கதை சொல்லுவதிலும் கடைப்பிடிக்க வேண்டிய சில அம்சங்கள் உள்ளன. கதைகள் குழந்தைகளின் மனவளர்ச்சிக்குப் பெரிதும் உபயோகமாக அமைகின்றன. பின்வருவனவற்றைக் கதை சொல்லுவதற்கான நோக்கங்களாகக் கொள்ளலாம்.

1. கதைகள் குழந்தைகளுக்குப் பொழுது போக்காக அமைகின்றன.

**கதை, குழந்தைகள் அனைவருக்குமே மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்றாகும். கதை சொல்லுதலை ஒரு பழைமையான கலை என்று கூறலாம். வீடுகளில், சிறு குழந்தைகளுக்குக் கதை சொல்வது, வயது முதிர்ந்தோர்களின் ஒரு பொழுது போக்காகத் தொன்று தொட்டு இருந்து வருகின்றது.**

2. மொழி வளர்ச்சிக்கும் கதைகள் அடி கோலுவதோடு குழந்தைகள் புதிய வார்த்தைகளை அறிந்து கொள்ளவும், அவற்றை உபயோகிக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

3. கதை பேச்சுத் திறனை வளர்க்க உதவுகிறது. ஒரு முறை சொன்னதை மீண்டும் அப்படியே சொல்வதொன்பது குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமான செயலாகும். எனவே, தாங்கள் எண்ணிய வற்றைத் தெளிவாக வெளியில் கூறக் கதைகள் பெரிதும் உதவுகின்றன.

4. குழந்தைகளின் கற்பனா சக்தியை வளரச் செய்வதற்கு கதைகள் உதவுகின்றன. எண்ணங்களை முழுமையாகவும் கோர்வையாகவும் கூற இவை அடிகோலுகின்றன.

5. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியடைகின்றது.

6. சுற்றுப்புறச் சூழலுக்கும், குழந்தைகளுக்கும் இடையில் ஒரு பிணைப்பைக் கதைகள் ஏற்படுத்துகின்றன.

7. மனவெழுச்சிகளைச் சரியான முறையில் வளரச் செய்வதோடு அவைகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தவும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எதிர்காலத்தில் முறையான வாசிப்புத் திறன் வளர்வதற்கும் இது அடிப்படையாக அமைகின்றன.

மேலும் அபிநயங்களைப் போதிப்பதன் ஊடாக முகபாவத்தையும், உணர்ச்சி வெளிப்பாட்டையும் வளர்த்தெடுக்க முடியும். ஆகவே முன் ஆரம்பக் கல்வி மாணவர்களது பிஞ்சு உள்ளங்கள் நன்மை தீமை அறியாமல் எதையும் கிரகிக்கும் தன்மை வாய்ந்தவர்களாக இருப்பது இயற்கை. இத்தகைய கபடமில்லாத உள்ளங்களிலே விவேகத்தையும், சாதுரியத்தையும் வளர்ப்பதற்கும், அவர்களது குணாதிசயங்களை நல் வழியில் திருப்பி சிறந்த நற்பிரஜை ஆக்குவதற்கு கலையுணர்வு ஒரு தலை சிறந்த சாதனமாக அமைகிறது. இக்கலை உணர்வு அக்குழந்தையின் எதிர்கால நல் வாழ்விற்கு வித்திடுகிறது. இந்த இரசிக தன்மையே மனிதனை மனிதனாக்குவது. எனவே கலைகளால் குழந்தைகளிடம் நல்ல கலையுணர்வைத் தூண்டி நல்ல கலை இன்பத்தை வளரச் செய்வது, நற்பிரஜை ஆக்குவது முன் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களது முக்கிய பணியாகும்.



## யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்


## திருமதி அ.வேதநாயகம்

மனித வாழ்க்கைக் காலத்தில் முக்கியமான பருவம் முன்பள்ளிப் பருவம் ஆகும். தற்போதைய நவீன கல்விச் சீர்திருத்தம் முன்பள்ளிச் செயற்பாட்டுக்கு மிகுந்த முக்கியம் கொடுத்துள்ளது. ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் இம் முன்பள்ளி காலம் மிகக் கரிசனையுடன் கவனிக்கப்பட வேண்டியதாகவுள்ளது. தாயின் மடிதான் குழந்தையின் முதற் பாடசாலையாகும். எதனைப் பிள்ளையினால் செய்ய முடியாது என்பதைவிட, எதனைப் பிள்ளையினால் செய்ய முடியும் என்பது தான் முன் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியின் முதல் அடிப்படை விடயமாகும். ஆசிரியரின் செயற்பாடுகள் பிள்ளைகளினால் ஆர்வத்துடனும், விருப்புடனும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதுமாகத் திட்டமிடுவது முன் ஆரம்பக் கல்வி ஆசிரியரின் தலையாய கடமையாகும். இச்செயற்பாடுகள் முன் ஆரம்பக்கல்வி பாடசாலையின் உள்ளேயும் வெளியேயும் மகிழ்ச்சியும், ஆரவாரமும் கலந்த மனோ நிலையுடன் பிள்ளைகள் ஈடுபடுவதற்கான சூழ்நிலைகளை ஆசிரியர்களால் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு அர்ப்பணிப்பான முன்பள்ளி ஆசிரியர்களும் அவர்களுக்கு முறையான சம்பள் அமைப்பும் முறையாக ஒழுங்கமைக்க வேண்டும். அப்போது முன்பள்ளிக் கல்வித்துறை விரைவாக அபிவிருத்தியடையும்.

கல்வித்தர அபிவிருத்தியில் "அகவிழி" செய்து வரும் பணிகள் பாராட்டத்தக்கது. அகவிழியின் தொடர் வருகைக்கு எமது ஆசிரியர் சமூகம் பூரண ஆதரவு வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பா. தனபாலன் (பணிப்பாளர்),
ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவகம்,
யாழ்ப்பாணம்.

முன் பள் ளி

உலகளாவிய ரீதியில் இன்று முதன்மையான கல்வித்துறையாக முன் பள்ளிக்கல்வி திகழ்கின்றது. பாலர்களுக்காக நிலை பெற்றிருக்கும் கல்வியானது அவர்களை மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு வழி வகுப்பதாக இருக்க வேண்டும்

# ஒளிமயமான முன்பள்ளிக் கல்வி நடைமுறைகளும் பிரயோகங்களும்

உலகளாவிய ரீதியில் இன்று முதன்மையான கல்வித்துறையாக முன் பள்ளிக்கல்வி திகழ்கின்றது. பாலர்களுக்காக நிலை பெற்றிருக்கும் கல்வியானது அவர்களை மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு வழி வகுப்பதாக இருக்க வேண்டும். முன்பள்ளிக் கல்வி தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள இரண்டரை வயதிலிருந்து ஐந்து வரையான காலம் பாலகரின் வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பருவமாகும். முறைசார் கல்விக்கான அடித்தளம் இருவத்திலேயே இடப்படுகின்றது. அண்மைக் காலத்தில் இப்பருவம் தொடர்பான ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. புதிய கல்வியியற் செயலாற்றுகைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம், அரசு ஆகியோர் புரிந்து இப்பருவ பாலகர்களின் அபிவிருத்தியில் மிகக் கூடுதலான அக்கறை எடுக்க வேண்டியுள்ளது. இத்துறை தொடர்பான விழிப்புணர்ச்சி இன்று எல்லோரிடமும் ஏற்பட்டு வருகின்றது.

இப்பருவ பாலகர்களிடையே உடல் வளர்ச்சி (Physical Development) இயக்க வளர்ச்சி (Motor Development) மன எழுச்சி வளர்ச்சி (Emotional Development), அறிவு வளர்ச்சி (Intelectual Development), சமூக வளர்ச்சி (Social Development) ஆகிய அனைத்தும் வேகமாக வளர்கின்றன. இவ் வளர்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கினைத்து விருத்தியாக்கினால் தான் பூரணமான ஆளுமையுடைய பிள்ளைகளையும், எதிர்கால சந்ததிகளையும் உருவாக்க முடியும். இதற்கு ஏற்ற வாய்ப்புக்களையும், சூழ்நிலைகளையும் அளிப்பதில் முன்பள்ளிக்கல்வி பெரும் செல்வாக்கைச் செத்துகின்றது இவ்வகையில் நவீன முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோளாக பின்வருவன உள்ளன.

1. பாலர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருத்தல்.
2. அவர்களிடையே நல்ல பழக்கவழக்கங் களை வளர்த்தல்.
3. பாலர்களின் முழுமையான வளர்ச்சிக்கான சூழ்நிலைகளையும், ஊக்கலையும் உருவாக்குதல்.
4. மகிழ்ச்சிகரமான கற்றிலினூடாக மகிழ்வுடன் வாழும் சந்தர்ப்பங்களை உருவாக் குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அடுத்த கட்ட நிலைகளுக்குத் தயாராக்குதல்.
6. உடல் - உளரீதியில் சுகதேகிகளாக இருக்க வழியமைத்தல்.
7. ஆரோக்கியமான நற்பிரசைகளை உரு வாக்குதல். இங்கு ஆரோக்கியம் என்பது உடல் - உள - சமூக - ஆத்மீக நல்நிலைகளில் அடையக் கூடிய அதி உயர்நிலையாகும்.

இப்பருவத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மிக முக்கயமாக நோக்கப்படுகின்றது. இதில் உடலியற் தேவைகளான (Physical needs) காற்று, சுத்தமான நீர், சத்துணவு, உறைவிடம், உடை வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளும் உளவியற் தேவைகளான (Psychological needs) காப்புணர்ச்சி, அன்பும் பாசமும், சுதந்திர உணர்வு கணிப்பு, சுயவுணர்வுத் தேவைகள், துணிவாகச் செயலாற்றல் என்பவை உள்ளன. இவற்றில் தற்போதைய பாலகர்களிடையே உளவியல் தேவைகளே மேலோங்கி உள்ளதாக அண்மைய துறைசார் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறான தேவைகள் மறுக்கப்படும் போது, தடைசெய்யப்படும் போது அமைதியின்மை, விரக்தி, மன அழுத்தம், சந்தேகம், குற்றஉணர்வு ஆகியவை ஏற்பட்டு பாலகர்கள் மனநிலை ரீதியாக பாதிப்படையலாம். இன்றைய பெரும்பாலான பாலகர்களுக்கு இத்தேவைகளை உரிய முறையில் வழங்க முடியாத குடும்ப - முன்பள்ளிப் பாடசாலைச் சூழல் உள்ளது. இதைப் போக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன் முன்பள்ளி ஆசிரியர் வளர்ப்புத்தாயாக இருந்து பாலகர்களுக்கு இத்தேவைகளை வழங்குவதுடன் பெற்றோர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு முன்பள்ளிப் பாலகர்களின் தனியாள் வேறுபாடுகளையும் இனம் கண்டு செயலாற்ற வேண்டும்.

### பாலகர்களின் அறிவுத் தாகம்

முன்பள்ளிப் பருவ பாலகர்கள் இயல்பாகவே அறிவுத்தாகம் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆனாலும் அதை அறியாத நிலை மேலோங்கி காணப்படுகின்றது. கல்வி நிலைகளில் அடித்தளமாக, முதற் படியாக அமைவது முன்பள்ளிக் கல்வி யாகும். அடித்தளம் இல்லாத கட்டடம் எவ்விதம் திறனுள்ளதாக அமைய முடியும். நம் கல்வி முறையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்குக் காரணம் முறையான முன்பள்ளிக் கல்வி வழங்காத நிலையேயாகும்.

இப்பருவப் பிள்ளைகளின் இயக்க வளர்ச்சியை ஊக்குவிப்பதில் விளையாட்டுக்களும், உபகரணங்களும் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் இப்பாலர்களின் மனவெழுச்சி சீரான முறையில் வளர்வதற்கு ஆசிரியருடை அரவணைக்கும் செயலாற்றுகை வேண்டப்படுகின்றது. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவும், சீரான முறையில் வெளிப்படுத்தவும் இப்பருவ கற்றல் செய்முறைகள் உதவுகின்றன.

உலகளாவிய ரீதியில் நவீன முன்பள்ளியில் பொதுவான நேரசூசி பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என இத்துறை சார் ஆய்வாளர்கள் எடுத்தியம்புகின்றனர்.

1. இறைவணக்கம் (Prayer Assembly) பாலர்களில் விழுமிய நம்பிக்கைகளை ஏற்படுத்தல்.
2. ஆரோக்கிய பரிசோதனை (Health Checkup) - உடல் உறுப்புக்களை உற்று நோக்கி கவனித்தல்.
3. சுதந்திர உரையாடல் (Free conversation) - பாலர்களுடன் அளவளாவி ஆலோசனை வழிகாட்டல் வழங்குதல்.
4. வெளிவிளையாட்டுக்கள் - (Out door play) - ஓடி, ஆடி தசைநார் பயிற்சிக்கான விளையாட்டுக்கள்.
5. கை, கால், சுத்தமும் கழிவிடத்துக்குச் செல்லும் - (Toilet and wash) - உரிய சுத்தமான பழக்கவழக்கங்கள் பெறல்.
6. கதை சொல்லுதல் - (Story Telling) - கதை மூலம் கற்றல்.
7. பாடல்கள் - (Rhymes) பாடல்கள் பாடி இசையும் அசைவும்.
8. ஆக்கச்செயல்கள் - (Creative Activities) - விரல்பயிற்சி, வெட்டுதல், கிழித்தல், ஒட்டுதல், வர்ணம் பூசுதல்.
9. ஆயத்தச் செயல்கள் - (Readiness Activities) - மொழி, எண் சுற்றாடல் எண்ணக்கருக்களை கற்பதற்கான ஆயத்தம்.
10. வருகையும் வீட்டுக்குத் திரும்பலும் (Arrival and Departure)

### ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்

இவ்வாறான விடயங்கள் நெகிழ்ச்சியுடையதாக நாளாந்தம் பல்வேறு செயன் முறைகளுக்கு ஆசிரியரால் உள்ளாக்கப்படுகின்ற போது இப்பருவ பாலர்களின் அறிவுத்தாகம் விருத்தியடையும் வாராந்தம், தவணை, வருடம் என்ற வகையில் சூழல் நிலைமைகளை அனுசரித்துப் பாடத் திட்டங்களை முற்கூட்டியே தயாரிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் சுற்றாடல் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, களவேலைகள், ஆக்க சக்தியைக் கலைகள் மூலமாகப் பெறுதல், பெற்றார்களுடன் இணைந்து வெளிப்பயணங்களை (Fields trips) ஒழுங்குபடுத்தி அனுபவங்களை வழங்குதல் வாயிலாக முன்பள்ளிப் பாலர்களின் தேர்ச்சிகளை விருத்தியாக்கலாம்.

குழந்தை இலக்கியங்கள் மூலமாக வும் பல்வேறு கற்றல் சாதனங்கள் மூலமாகவும் விஞ்ஞான அனுபவங்களை (Science Experience) வழங்கி பாலர்களின் ஆராய்வு, கண்டுபிடிக்கும் ஊக்கத்தை விருத்தியாக்க வேண்டும். மற்றும் முன்பள்ளி விழாக்களை (Festivals in preschools) நடத்துவதன் மூலம் பாலர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமயமாதல் செயன்முறையை விருத்தியடையச் செய்யலாம். அதிலும் சமய விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், தேசிய விழாக்கள் என்ற வகையிலும் போட் டிகளாக அல்லாத விளையாட்டு விழாக்களை நவீன உளவியல் அடிப்படைகளில் நடாத்தி பாலர்களின் ஆளுமையைச் சிறந்த முறையில் விருத்தியாக்கலாம்.

### பெற்றார் கல்வி

இன்றைய நவீன முன்பள்ளி கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பெற்றார்களுக் கான கல்வி (Parent Education) மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. பெற்றார்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் இணைந்து செயலாற்றுவதன் மூலம் முன்பள்ளிக் கல்வியின் நோக்கம் நிறை வேறும். பெரும்பாலான படித்த, படிக்காத பெற்றோர்களுக்கு முன்பள்ளிக்கல்வி தொடர்பான விழிப் புணர்வு போதாமல் உள்ளது. எனவே பெற்றோர்களை முன்பள்ளிப் பாடசாலைகளுடன் இணைத்து பல செயலமர்வுகளையும், விழிப்புணர்வுச் செயற்திட்டங் களையும் முறையாக மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

முன்பள்ளிப்பாலகர்கள் இன்றைய கால சமூகப் பண்பாட்டுச் சூழலில் பல பாதிப்புக்களுக்கும் தாக்கங்களுக்கும் உட்பட்டுக் காணப்படுகின்றார்கள். இதனால் குழந்தைகளிடையே பல பிரச்சினைகள் எழுகின்றன. பிரிவுத்துயர், பொறாமை, கவலை, பயம், சினம், எதிர்மனப்பான்மை, பொருந்தா மனவெழுச்சி உணர்வுகளை வெளியேற்றும் பாலகர்களது குடும்பநிலை, பெற்றோர் பிரிவு, பெற்றோர் மது அருந்துதல் புரிந்துணர்வற்ற குடும்பநிலை என்பவற்றின் தாகங்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை மீட்க பெற்றோர்களுக்கான கல்வியும், வழிகாட்டல் ஆலோசனையும் மிக அவசியமாகவுள்ளது. இதற்குப் பெற்றோர் களுக்கான கூட்டம், குழு விவாதம், குழுச் சமர்ப்பிப்புக்கள், மனம் திறந்த கலந்துரை யாடல்கள், செயலமர்வுகள், ஒளி, ஒலி உபகரணங்கள் மூலமான விழிப்புணர்வுகள் தேவையாகவுள்ளன.

## நடைமுறைப் பெற்றோர் சம்பந்தம்

நாளாந்தம் குழந்தைகளைப் பாடசாலைக்குக் கொணர்வதும், ஆசிரியர்களுக்கு முகமன் கூறுவதும், மீண்டும் அழைத்துச் செல்வதும் பெற்றோரின் செயற்பாடாக அமைகிறது. இச்சந்தப்பங்களில், குழந்தைகளின் செயற்பாடுகள் அவர்களின் பலம், பலவீனங்கள் பற்றிய பெற்றோருடன் கலந்துரையாட ஆசிரியர்களால் முடியும். இது பெற்றோருக்கும் பாடசாலைகளுக்குமிடையிலான பெறுமதிமிக்க, தொடர்பானாலும் இது போதுமானதாக எனச் சிந்திப்பது நல்லது.

பெற்றோரைக் குழந்தைகளின் கல்வியில் சம்பந்தப்படுத்த, பல்வேறு மரபு ரீதியான வழிகள் பின்பற்றப்படுகின்றன. நிதி திரட்டுதல், கல்விச் சுற்றுலா போதல், குழந்தைகளின் உடைகளை சீர்ப்படுத்தல், கதை சொல்லுதல், வகுப்பில் உதவுதல், சமைத்தல், களிமண்ணால் உருவமைத்தல் போன்றனவாக அவற்றைக் குறிப்பிடலாம். 'ஆரம்பப் பள்ளிகளில் அடிநிலை மதிப்பீடு', 'குழந்தைகளின் கற்றலில் விரும்பத்தக்க விளைவுகள்' என்ற அறிக்கை என்பனவற்றின் பிரகாரம், பாலர் பாடசாலைகளில் பெற்றோர் சம்பந்தப்படும் வகையில் கலைத்திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வரும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. பெற்றோரைச் சம்பந்தப்படுத்துதல் என்பது, ஒரு சிக்கலான விடயமாதலால், இது பற்றிப் பாலர் பாடசாலையாசிரியர்கள் பலமாகச் சிந்திக்கின்றனர். எவ்வாறாயினும் கல்வியலாளர்கள் பெற்றோருக்கும், பெற்றோர் கல்வியியலாளர்களுக்கும் உதவமுடியும் என்பது சிந்திக்க வேண்டியதேயாகும்.

முறைசாரா அமைப்புகளையுருவாக்கி, பெற்றோரை நிர்வாக விடயங்களில் சம்பந்தப்படுத்தும் வகையில் சமீபத்தில் பல பாராளுமன்றச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1988ஆம் ஆண்டின் கல்விச் சட்டமும் கல்வியில் பெற்றோர் பங்காளிகள் ஆகும் வாய்பையளித்தது. ஆயினும் இந்தப் 'பங்குடைமை'யென்பது ஓர் இலட்சியக் கருத்தாகவிருந்ததால், உண்மையில் பெருமளவில் அது சாத்தியப்படவில்லை. பெரும்பாலான பெற்றோர்கள் நேரமின்மையாலன்றி, விரும்பாமை காரணமாகவே சட்ட ரீதியாகப் பொறுப்புகள் வகிப்பதில் பின்நின்றார்கள்.

(நன்றி : பேராசிரியர் மா. செல்வராஜா,
"முன்பள்ளிக் கல்வி சிந்தனைகளும் செயற்பாடுகளும்", - 2006, பக் : 28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**சபா.ஜெயராசா,**
முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**சிறப்புக் கட்டுரை**

உளவியல் மயப்பாட்டிலே பெரும் வீச்சு அல்லது முனைவுப்பாடான நிலை தோற்றம் பெற்றுள்ளது. அதாவது முற்றிலும் உளவியற் பாங்கனா நிலை மற்றும் அரைகுறையான உளவியற் பாங்கான நிலை என்ற துருவப்பாடுகள் காணப்படுகின்றன. அவ்வாறான நிலை சமூக அடுக்கமைப்புடன் இணைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி உளவியலில் ஒரு மாற்றுச் சிந்தனை ஈடுபாட்டியற் கற்றல்

உளவியலின் எழுகோலங்கள் முன்பள்ளிகள் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை பலநிலை உரு மாற்றங்களுக்கு இட்டுச் செல்கின்றன. அவ்வாறான உளவியல் மயப்பாடும் மேம்பாடும் நோக்கிய நிலைமாற்றமும் முன்பள்ளிகள் அனைத்திலும் ஊடுருவி வளம்படுத்தி வருகின்றதா என்பது மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் நடைமுறை வினாவாகவுள்ளது. உளவியல் மயப்பாட்டிலே பெரும் வீச்சு அல்லது முனைவுப்பாடான நிலை தோற்றம் பெற்றுள்ளது. அதாவது முற்றிலும் உளவியற் பாங்கனா நிலை மற்றும் அரைகுறையான உளவியற் பாங்கான நிலை என்ற துருவப்பாடுகள் காணப்படுகின்றன. அவ்வாறான நிலை சமூக அடுக்கமைப்புடன் இணைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

நடப்பியல் நிலையில் கற்றல் கற்பித்தல் இயல்புகளை அடியொற்றிய முன்பள்ளிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. முற்றிலும் உளவியல் மயப்பட்ட முன்பள்ளிகள் - வாண்மைப் பயிற்சி பெற்ற ஆசிரியத்துவம், இங்கிதமான கற்கும் சூழல், சுயமாகத் தொழிற்பட்டுக் கற்கும் ஏற்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கியிருத்தல்.
2. ஓரளவு உளவியல் மயப்பாடும் பொறி முறையான கற்றலையும் அவ்வப்போது வாண்மைப் பயிற்சிகளுக்குச் சென்று சிறிதளவு வாண்மைப் பயிற்சி பெற்ற ஆசிரியத்துவத்தையும் கொண்ட முன்பள்ளிகள்.
3. எதுவித உளவியல் மயப்பாடுமின்றி, ஒரு சில திறன்களை சிறாருக்குக் கற்பித்துக் கொடுக்கும் முன்பள்ளிகள் - இப்பள்ளிகளே பிரதி கூலமடைந்த சிறார்க்குரிய புகலிடமாகவுள்ளது.

முன்பள்ளிக் கற்பித்தல் தொடர்பான மாறிவரும் எண்ணக்கருக்களை நோக்குவதற்கு முன்னதாக மேற்குறிப்பிட்ட நடப்பியல் நிலவரங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டின் மேலெழுச்சி பெற்ற கற்றல் உளவியல் முன்மொழிவுகளில் "ஈடுபாட்டியற் கற்றல்" (Engaged Learning) முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வகைக் கற்றல் பின்வரும் பரிமாணங்களைக் கொண்டது.

1. தமது கற்றற் செயற்பாடுகளினால் மாணவர் தம்மைத் தாமே புத்துணர்ச்சிக்கு உள்ளாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மகிழ்நிலை கொண்ட கற்றல் அனுபவங்களால் தொடர்ந்து கற்கவும், விளக்கம் பெறவும் சிந்தனையின் அடுத்த கட்டத்துக்கு நகரவும் வழிப்படுத்தல்.

3. தமது கற்றலுக்கும், தமது வெற்றிகளுக்கும் தாமே பொறுப்பு என்ற உணர்வு ஊட்டப்படல்.

4. அறிவை இடமாற்றம் செய்து ஆக்க மலர்ச்சியுடன் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் சுய தொழிற்பாடுகள் ஊக்குவிக்கப்படல்.

5. பிறருடன் இணைந்து தொழிற்பாடுகொள்ளவும் கற்கவும் வல்ல திறன்கள் வளமாக்கப்படல்.


ஈடுபாட்டியற் சூழமைவு "அறிவைக் கட்டியெழுப்பும் கற்றல் சமுதாய" உருவாக்கலுடன் இணைந்திருக்கும். அறிவுதூண்டாடப்படுதலும், சமூக உணர்வு தூண்டப்படுதலும், வேண்டத்தகாத தனிமனிதப் போட்டிகளும் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும். அல்லது அவற்றுக்கு எதிரான தாங்கல் முனைப்பு (Resistance) உருவாக்கப்படும் கூட்டிணைவுக் (Collaborative) கற்றற் செயற்பாடுகள் வளமாக்கப்படும். கூட்டிணைவுச் சமூகத்தில் அனைத்து உறுப்பினர்களிடத்தும் நுண்மதி பரவலாக்கப்பட்ட நிலையின் எடுகோள் முக்கியப்படுத்தப்பட்டிருக்கும். அனைத்துச் சிறாரும் தமது வளர்ச்சி மட்டங்களுக்குரிய உச்ச நிலைகளிலே நின்று வினா எழுப்பவும், விடைதேடவும் தீர்மானம் எடுக்கவும், பங்குபற்றவும் கூட்டாகத் தொழிற்படவும், ஊக்கிவிக்கப்படுவர், வேறுபாடுகளின்றி அனைத்து மாணவர் அனைவரது அறிவுப் பலம் கட்டியெழுப்படுவதற்குரிய உறுதிறன்களை (Strategies)க் கண்டறிவதற்குரிய தேடல் தொடர்ந்தவண்ணமிருக்கும்.

ஈடுபாட்டியற் கற்றலில் மாணவரின் வகிபாகங்கள் பின்வருமாறு அமையும்.

1. முனைப்பெழுவினர் (Explored) வகிபாகம் - அதாவது சூழலுடன் இடைவினை கொண்டு தொடர்புகளைக் கண்டறிதலும் எண்ணக்கருக்களை உருவாக்கிக் கொள்ளலும், மக்கள், பொருள்கள், சம்பங்கள் தொடர்பான தீர்மானங்களைக் கண்டறிவதற்குரிய முனைப் பெழுகையை வலுப்படுத்தலும்.

2. அறிகைப் பயிலுனர் (Cognitive Apprentice) வகிபாகம் தமது சிந்தனைவளத்தையும், தொழிற்பாட்டு வளத்தையும், உற்றுநோக்கல், பிரயோகித்தல் முதலியவற்றால் தொடர்ச்சியாக முன்னேற்றம் பெறச் செய்தல். தமது அனுபவங்களை எழுபெயர்ச்சி (Articulate) செய்தல் இதனால் முன்னெடுக்கப்படும்.

3. அறிகை உருவாக்குனர் (Producers of Knowledge) என்ற வகிபாகம் அறிவை உருவாக்குதல் வளர்ந்தவர்களுக்குமட்டும் உரிய செயற்பாடு அன்று. தமது அனுபவங்களை ஒன்றிணைத்து புதிய சொற்களஞ்சியத்தை உருவாக்கும் திறன் சிறார்க்கு



உண்டு. எனினும், வளர்ந்தோரின் சொற்களஞ்சிய ஆட்சி பின்னர் அதனை மேவி, மூடி மறைத்து விடுகின்றது.

ஈடுபாட்டியற்கற்றலுக்குரிய குழு ஆக்கம் பன்முகப்பாடுகளைக் கொண்டதாக அமைக்கப்படல் வேண்டும். ஆண்கள், பெண்கள், பல்வேறு நிலைப்பண்பாடுகளில் இருந்து வருவோர்; பல்வேறு கற்றல் கோலங்களைக் கொண்டோர், பல்வேறு திறன்களும் ஆற்றல்களும் கொண்டோர். பல்வேறு பொருளாதார மட்டங்களில் வாழ்வோர் முதலியவர்களை உள்ளடக்கியதாகக் கற்றற் குழு அமைக்கப்படும். குழுச் செயற்பாட்டில் அனைத்து மாணவரும் சமகணிப்புக்கு உள்ளாக்கப்படுவர். அனைவருக்கம் சமசந்தர்ப்பம் வழங்கப்படும் கற்றல் இலக்குகளுக்கு ஏற்றவாறும், நெகிழ்ச்சிப் பாங்குடையதாகவும் குழுக்கள் அமைக்கப்படும்.

இரண்டு போதனை மாதிரிகைகள் ஈடுபாட்டியற் கற்றலிலே பயன்படுத்தப்படும். அவை:

1. **இடைவினை முனைப்பு.**
   **(Interactive)**

   கற்போரை இடைவினை முனைப்புக்கு உள்ளாக்கும் வகையிலே சாதனங்கள், சூழல், மொழித் தொடர்பாடல், முதலியவை அமைக்கப்படும்.

2. **பிறப்பாக்கல் முனைப்பு**
   **(Generative)**

   அனுபவங்கள் வழியாக அறிவை உருவாக்குமாறு கட்டுமை செய்யுமாறும் அர்த்தமுள்ள வழிகளை உருவாக்குமாறும் கற்றலும், கற்றற் சூழலும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகைக் கற்றல் ஆசிரியர்களை மரபு வழியான அணுகு முறைகளிலிருந்து வேறுபட்ட முறையிலே தொழிற்படுவதற்கு உறுதியும் உற்சாகமும் தருகின்றது. பாரம்பரியமான ஆசிரியத்துவத்திலே மேற்கொள்ளப்பட்ட ஒற்றைப் பரிமாணம் கொண்ட ஒரு வழித் தொடர்பாடல் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. ஆசிரியர் வழியாக மட்டும் முன்னெடுக்கப்பட்ட அறிவுக் கையளிப்பு தகர்ப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.

ஈடுபாட்டியற் கற்பித்தலில் ஆசிரியரின் வகிபாகங்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றன.

(அ) உறுவளம் செய்பவர் (Facilitator)

(ஆ) ஆற்றுப்படுத்துனர்

(இ) இணைந்து தொழிற்படுபவர்

மாணவர்கள் தாமாகக் கற்பதற்குரிய சூழலையும், அனுபவங்களையும், தொழிற்பாடுகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் உறுவளம் செய்பவராக ஆசிரியர் தொழிற்படல் வேண்டும். ஆற்றுப்படுத்துனர் என்ற வகிபாகத்தில் அறிவையும் மாணவரையும் ஒன்றிணைக்கும் ஊடுமொழிபவராகத் (Mediator) தொழிற்படல் சிறப்பாக விதந்துரைக்கப்படுகின்றது. அவ்வகைத் தொழிற்பாடு பின்வரும் பண்புகளை உள்ளடக்கியதாக அமையும்.

(அ) சிறாரின் முதிர்ச்சிக்கும் தேவைக்கும் ஏற்றவாறு அனுபவங்களையும் தகவல்களையும் நெகிழ்ச்சிப் பாங்குடன் பெற்றுக் கொள்ள உதவுதல்.

(ஆ) முன்னைய அனுபவங்களுடன் புதிய அனுபவங்களை ஒன்றிணைக்கத் துணை செய்தல்.

(இ) பிரச்சினைவிடுவிக்கும் முயற்சிகளைச் செப்பனிட உதவுதல்.

(ஈ) மாணவருடன் இணைந்து தானும் கற்பவராக இனங்காட்டுதல்.

ஈடுபாட்டியற் கற்றல் மாணவரின் வாழ்க்கையுடன் இணைந்தாகவும், பலதுறை அறிவையும் அனுபங்களையும் ஒன்றிணைப்பதாகவும் சிறாரின் ஆற்றலுக்கு அறைகூவல் விடுப்பதாயும் அமைக்கப்படுதல் வேண்டும். தமது கற்றல் இலக்குகளைத் தாமே உருவாக்கிக் கொள்வோராயும், தமது முன்னேற்றங்களைத் தாமே கணிப்பீடு செய்யும் நிலைக்கு முன்னேறிச் செல்வர். ஆற்றுகை நிலைப்பட்ட கணிப்பீடே இங்கு முன்னெடுக்கப்படும்.

தமது கற்றலுக்குச் சிறார் தாமே பொறுப்பு என்பது உளவியற் செயற்பாடுகள் வழியாக வலியுறுத்தப்படுகின்றது. அதனூடாகத் தம்மைதாமே நெறிப்படுத்தவும் சிறார் கற்றுக்கொள்கின்றனர்.

ஈடுபாட்டியற் கற்றலின் கணிப்பீட்டு முறைமை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

(அ) ஆற்றுகை நிலைக்கணிப்பீடு

(ஆ) பிறப்பாக்கல் முனைப்பு

(இ) கலைத்திட்டத்தோடு பின்னிப் பிணைந்திருத்தல்

(ஈ) தர நிர்ணயங்களை மாணவர் பெற்றோர் என்ற அனைவரும் அறிந்திருத்தல்.

கணிப்பீட்டின் குறிக்கோள் சிறாரின் கற்றற் செயற்பாடுகளை மேலும் தூண்டிவிடுதலாகும். கணிப்பீட்டிலே பன்முகப்பட்ட அளவு கருவிகளும் முறைகளும் பயன்படுத்தப்படும். அதாவது பேசுதல், வாசித்தல், எழுதுதல் முதலிய மரபு வழிபாட்டோடு மட்டும் கணிப்பீட்டு முறைமை நின்றுவிடமாட்டாது.

மாணவர் தாமே வினைப்பாடு கொள்ளல், செயற்பாடுகள் வாயிலாகத் தெறிப்புக் கொள்ளல், கற்றலையும் அனுபங்களையும் மேல் நோக்கிய அசைவியக்கத்துக்கு இட்டுச் செல்லல், கற்றல் அனுபவங்களை எழுபொருள் (Authentic) பண்புடையதாக ஈட்டிச் செல்லல் முதலியவை ஈடுபாட்டியற் கற்றலின் சிறப்புப் பண்புகளாகவுள்ளன.

கற்றல் தொடர்பான உளவியல் ஆய்வுகளும் அணுகுமுறைகளும் மேலைப்புலத்து முன்பள்ளிகளிலே ஊடுவிச் செல்லும் நிலையும் நவீன அறிவுச் சமூகம் அறிவுப் பொருண்மியம் முதலியவற்றுக்குரிய தெளிவான அடித்தளங்கள் முன்பள்ளிகளிலே இடப்படும் நிலையும் கவன ஈர்ப்பைப் பெற்று வருகின்றன. மேலைப் புல முன்பள்ளித் தராதரங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய முன்பள்ளிகளை உருவாக்குதல் பற்றிய சிந்தனைகள் வளர்முக நாடுகளிலும் எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. ஆயினும் அவற்றை நடைமுறை கொள்ளச் செய்வதிலே பல நிலை இடைவெளிகள் காணப்படுகின்றன.

மேலைப்புலத்துப் பண்பாட்டுப் பின்புலத்திலும், பணவலிமையிலும் உருவாக்கப்பட்டுள்ள ஈடுபாட்டியற் பொருட்களையும் சாதனங்களையும் அப்படியே இறக்குமதி செய்தலும் பயன்படுத்துதலும் பொருத்தமற்ற நடவடிக்கைகளாகும். பொருளாதார வசதி மிகவும் மேலோங்கிய சிறார்கள் கற்கும் தலை நகரில் உள்ள சில முன்பள்ளிகள் சிறாருக்குரிய கற்றல் சாதனங்களை மேலை நாடுகளில் இருந்து அதிக பணச் செலவில் இறக்குமதி செய்து பயன்படுத்தும் நிலையும் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஏழைச் சிறார்கள் கற்கும் வசதி குன்றிய முன்பள்ளிகளை வலுவூட்டும் ஒன்றிணைந்த திட்டங்கள் முன்னேடுக்கப்பட வேண்டியுள்ளன. மேலை நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கற்றல் சாதனங்களுக்கு இணையான சாதனங்ககளை உளவியலாளரதும், தொழில் நுட்பவியலாளரதும் ஒன்றிணைந்த முயற்சிகள் வேண்டப்படுகின்றன. உறுபாவனைகள் (Improvisation) இத்தொடர்பிலே முக்கியத்துவம் பெறுதலை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது. உறுபாவனை நுட்பங்கள் ஆசிரியர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்பள்ளிகளின் தற்போதைய நிலை

முனைவர் ஜெயலட்சுமி
இராசநாயகம்,
கல்வியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

அலசல்

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று கல்வியின் முக்கியத்துவம் அதிகம் உணரப்படுகின்றது. நகரங்கள் கிராமங்கள் தோறும் முன்பள்ளி நிலையங்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

இன்றைய நிலையில் சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாக வாழ்வது முக்கியமானதாகும். ஒரு பிள்ளை ஒரு குடும்பத்தில் உயிரியல் வரலாற்றோடு தன் வாழ்க்கையை ஆரம்பித்து நாளடைவில் சமூக வரலாற்றோடு தன் வாழ்க்கையைப் பொருத்திக் கொள்கின்றது. 'நான்' என்ற குறுகிய உணர்வு "நாம்" என்ற அளவில் விரிவாக்கம் பெறுகின்றது. ஆரம்பத்தில் தன் பொற்றோருடனும், குடும்ப உறவுகளுடனும் தன்னைப் பொருத்தி வாழும் பிள்ளை முதன்முதலாகத் தன் குடும்ப சூழலைப் பிரிந்து முன்பள்ளி நிலையங்களுக்கு வருகின்றது. அங்கு ஏனைய பிள்ளைகளையும் தன் சகாக்களாகக் கருதிப் பழகும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அங்கு "சமூகமயமாக்கல்" நிகழுகின்றது. மனிதர்கள் சமூக அமைப்பிலிருந்து விலகி வாழமுடியாது. சமூகத்திற்குப் பொருந்தும் வகையில் தன் நடத்தைகளை மாற்றியமைக்க வேண்டும். அவ்வகையில் பிள்ளைகளும் பல்வேறு சமூக அமைப்பிலிருந்து வரும் ஏனைய பிள்ளைகளைப் புரிந்து வாழவும், அவர்களைத் தோழமை உணர்வோடு ஏற்றுக் கொள்வதற்கும் வழிகாட்டும் முன்பள்ளிகள் ஒரு பிள்ளையின் உடல், உள ஆராக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாதது.

ஒரு நாட்டினுடைய வளமான எதிர்காலம் அந்நாட்டின் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பது கோட்பாட்டளவில் மட்டுமல்லாமல் யதார்த்தமாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே இன்று ஐந்து வயதுக்கு உட்பட்டோரின் கல்வி ஏற்பாடுகளில் கணிசமான வளர்ச்சிப் போக்குகள் காணப்படுகின்றன.

பொதுவாக இன்று பிள்ளைகள் முன்பள்ளி நிலையங்களுக்குச் செல்வதன் அவசியம் பெற்றோர்களால் உணரப்பட்டுள்ளது. "எதிர்காலக் கற்றலுக்காகக் கற்றல்" என்னும் குறிக்கோளினை நிறைவேற்றும் பருவம் முன்பள்ளிப் பருவமாகும். இதனைக் கருத்திற் கொண்டு பெற்றோர்களும், ஆசிரியர்களும் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்று கல்வியின் முக்கியத்துவம் அதிகம் உணரப்படுகின்றது. நகரங்கள் கிராமங்கள் தோறும் முன்பள்ளி நிலையங்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் காணப்படுகின்றன. யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி நிலையங்களையும் ஆசிரியர் மாணவர் தொகைகளையும் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Number of Registered Pre Schools, Students and Teachers by DS/AGA Division - 2006

| No | DS/AGA Division | Pre Schools | Students | Teachers | |
|---|---|---|---|---|---|
| | | | | Permanent | Others |
| 01 | Delft | 7 | 199 | | 17 |
| 02 | Islands South | 37 | 580 | | 45 |
| 03 | Islands North | 22 | 442 | 2 | 37 |
| 04 | Karainagar | 16 | 290 | | 26 |
| 05 | Jaffna | 32 | 712 | | 99 |
| 06 | Nallur | 63 | 1731 | | 115 |
| 07 | Valikamam South West | 58 | 1120 | | 101 |
| 08 | Valikamam West | 48 | 916 | 3 | 92 |
| 09 | Valikamam South | 52 | 1112 | | 102 |
| 10 | Valikamam North | 38 | 672 | | 70 |
| 11 | Valikamam East | 89 | 1910 | | 163 |
| 12 | Thenmarachchi | 87 | 1500 | | 144 |
| 13 | Vadamarachchi South West | 63 | 1102 | 2 | 110 |
| 14 | Vadamarachchi North | 72 | 1205 | | 136 |
| 15 | Vadamarachchi East | 24 | 482 | | 40 |
| | Total | 708 | 13973 | 7 | 1297 |

**Soruce: Department of Local Government, Jaffna.**

இவ்வட்டவணையை அடிப்படையாகக் கொண்டு யாழ்மாவட்ட முன்பள்ளிகளின் நிலையை அறிய முடிகின்றது. யாழ் மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் தொகை 1304 ஆகக் காணப்படுகின்றது. ஆனால் இதில் நிரந்தரமான, பயிற்றப்பட்ட ஆசிரியர் 07 பேர் மட்டுமேயாவர். மிகுதி 1297 ஆசிரியர்களும் தற்காலிக ஆசிரியர்களாவர். இவற்றில் பயிற்றப்பட்டோர், பயிற்றப்படாதோர் என்ற விகிதாசாரத்தில் ஆசிரியர்கள் உள்ளனர். 708 முன்பள்ளிகள் யாழ்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனைவிடப் பதிவு செய்யப்படாத முன்பள்ளிகளும் உள்ளன. இத்தகைய முன்பள்ளிகளில் சில முன்பள்ளிகள் மட்டுமே ஓரளவிற்கு சகல வசதிகளையும் கொண்டுள்ளன. பல முன்பள்ளிகள் அடிப்படை வசதிகூட இன்மையால் சீரற்ற செயற்பாடுகளுடன் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். பல முன்பள்ளிகளில் மலசலகூடங்கள், குடிநீர் வசதிகள் கூடக் கிடைப்பதில்லை.

முன்பள்ளிகள் எல்லாம் நிரந்தரமான கட்டடத்தைக் கொண்டிருக்கவில்லை. மரத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பல வழிகளிலும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் சில தனிப்பட்டோரின் அன்பளிப்புகள், நன்கொடைகள் போன்றவற்றினால் சில முன்பள்ளிகள் தமது அடிப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 708 முன்பள்ளிகள் இருந்தபோதும் சில முன்பள்ளிகளில் ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு மேலான பிள்ளைகளை வைத்து ஆசிரியர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில முன்பள்ளிகளில் ஆசிரியர் தொகைக்கேற்ப மாணவர் தொகை குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் வளப்பகிர்வில் சமமற்ற ஒரு போக்கினை யாழ்ப்பாண மாவட்ட முன்பள்ளிகள் கொண்டுள்ளன.

**முன்பள்ளிகளும் ஆசிரியர்களும்:**

முன்பள்ளிப் பிள்ளைகளின் சுபாவத்தினை விளக்கிக் கொள்வதில் ஆசிரியர் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இன்று ஆசிரியர் தொகை கணிசமான அளவு காணப்பட்ட போதிலும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பயிற்சி பெறாதவர்களாகவே இருக்கின்றனர். மேலைத்தேய நாடுகளைப் பொறுத்தவரையில் நாட்டின் துரித மாற்றத்திற்கு ஏற்ப முன்பள்ளி நடவடிக்கைகள் மீது அரசின் கவனம் சென்றுள்ளது. பட்டப்பின் கல்விநெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களே முன்பள்ளி ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றார்கள். எக்காரணம் கொண்டும் பயிற்றப்படாத ஆசிரியர்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதேயில்லை. இலங்கையைப் பொறுத்தவரையில் யாருமே முன்பள்ளிகளில் கற்பிக்கலாம் என்ற நிலை காணமுடிகின்றது. யாழ்மாவட்டத்தை எடுத்து நோக்கும் போது இந்நிலைதான் கூடுதலாகக் காணப்படுகின்றது.

இலங்கையிலே முன்பள்ளிகளை அரசு பொறுப்பெடுக்கவில்லை. அதற்கென உரிய கலைத்திட்டமும் நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன. அரசு ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவதோடு முன்பள்ளிகளையும் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் போது செயற்பாடுகள் துரித வளர்ச்சி பெறும். இன்று பல முன்பள்ளிகளில் ஆசிரியர்கள் பெறும் வேதனம் மிகக் குறைவாகும். அந்நிலையில் அவர்களால் தமது கடமைகளைச் சரிவர ஆற்ற முடிவதில்லை. ஒருவருடைய வேலைத் திருப்திக்கும், தரமான வேலைக்கும் அவர்கள் பெறும் வேதனமும் சாதகமானதொரு காரணியாக அமைகின்றது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆகக் குறைந்தது 1000 ரூபாவைக் கூடத் தமது மாதாந்த வருமானமாகப் பெற்றுக் கொள்ளும் முன்பள்ளி ஆசிரியர்களும் இருக்கின்றார்கள். அரசு இவைகளைப் பொறுப்பெடுக்காமையினாலும், ஆசிரியர்களுக்குரிய வேதனம் மிகக் குறைவாக இருப்பதாலும், ஓரளவு கல்வித் தகைமையுடையவர்கள் இப்பதவிக்கு வருவதில் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் குறைந்த கல்வித் தகைமையுடையவர்கள் ஆசிரியர்களாகச் செயற்படும்போது பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்வதோடு பிள்ளைகளும் சரியான பாதிப்புக்கு ஆளாகின்றார்கள். ஆகவே எதிர்காலத்தில் முன்பள்ளி தொடர்பான பயிற்சி பெற்றவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

ஆசிரியர்கள் பலர் உண்மையில் அதிக ஆர்வத்துடன் செயற்படுகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும் அவர்களுக்குரிய பயிற்சியளிப்பதில் அரசும், ஏனைய நிறுவனங்களும் முழுமையாகச் செயற்படவில்லை. ஆசிரியர்களால் பிள்ளைகளுக்கும், சமூகத்திற்கும் ஏராளமானவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதனால் ஆசிரியர்களிடம் அத்தியாவசியமான சில குணாதிசயங்கள் காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- பிள்ளைகளிடம் அன்பும் ஆதரவும் காட்டுதல்.
- பொறுமை, சுயகட்டுப்பாடுடையவராக இருத்தல்.
- சமநிலை, நேர்மை தவறாதவராக இருத்தல்.
- தலைமைத்துவப் பண்புகள் கொண்டவராக இருத்தல்.
- உடல், உள உறுதியுடையவராக இருத்தல்.
- தீர்மானங்களை எடுப்பதில் உறுதியுடையவராக இருத்தல்.
- நல்லொழுக்கம் உடையவராயிருத்தல்.
- அறிவாண்மை உடையவராக இருத்தல்.

இத்தகைய சில பண்புகள் உடையவர்களாக ஆசிரியர்கள் இருக்கும்போது சிறார்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்காலத்தில் சிறப்பானதாக அமைய வாய்ப்புண்டாகின்றது. முன்பள்ளி ஆசிரியர்கள் பொதுவாக ஒரு தாய் போன்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். அன்பு, பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவைகளைப் பிள்ளைகளுக்கு வழங்குதலில் எதுவித தயக்கமும் இருத்தல் கூடாது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பயிற்றப்படாத ஆசிரியர்களால் இத்தன்மைகள் எல்லாம் சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகத்தான் உள்ளது. சில காரணங்களுக்காகவும் ஒரு தொழில் கட்டாயம் தேவை என்ற நிலைப்பாட்டிற்காகவும் இத்தகைய தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக நடக்கின்றபோது தான் பிள்ளைகளும் சரியான நடத்தைக்குப் பொருத்தமாகத் தம்மை மாற்றிக் கொள்கின்றார்கள். ஆனால் இன்று எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களிடமும் ஒரு நல்லாசிரியருக்குரிய பண்புகள் இருக்கின்றது என்று கருதமுடியாது. மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றுவதற்கேற்ற நடத்தை இல்லாதவர்களாகவும், பொறுப்பற்றவகளாகவும் இருக்கின்றார்கள். பிள்ளைகளின் உள நலத்தைப் பாதிப்படையச் செய்யும் வகையில் வன்நடத்தைகள் கொண்டவர்களாகவும் விளங்குகின்றார்கள். சில முன்பள்ளி நிலையங்களில் மிகவும் கல்வித்தரம் குறைந்தவர்கள் கூட இன்று கற்பிப்பதைப் காண முடிகின்றது. ஆசிரியர் என்ற பதமானது ஆசு + இரியர் என்று அமைகின்ற போது குற்றங்களைக் களைபவர் எனப் பொருள்படும். அறிவுக் குற்றத்தைக் களைபராகிய ஆசிரியர்கள் தாம் குற்றமற்றவர்களாக விளங்க வேண்டும்.

ஒருவரின் ஆளுமையைத் தீர்மானிப்பதிலும், அவருக்குரிய மதிப்புக்களைக் கொடுத்து உயர்ந்த நிலையில் வைத்து எண்ணுவதற்கு ஒருவரின் உடைகளும் ஒரு காரணமாகும். நமது தமிழ்க் கலாசாரத்தின் ஆசிரியர்கள் சேலை அணிந்து பாடசாலை செல்ல வேண்டியது விரும்பத்தக்கதாகும். இன்று முன்பள்ளிகளில் சேலை அணியும் ஆசிரியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். சேலையுடன் ஒரு ஆசிரியர் முன்பள்ளிக்குச் செல்லும் போது பிள்ளைகளும் அதற்கொரு மதிப்பைக் கொடுப்பார்கள். தமிழர்களின் பாரம்பரிய உடைகளில் சேலையும் முக்கியமான-தாகும்.

இன்று சில முன்பள்ளிகள் மிகவும் சிறப்பாகப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மூலம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு ஆசிரியர்கள் மிகவும் கவனமாகவும், விழிப்பாகவும், துரிதமாகவும் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஒரு தாயின் வகிபங்கினை மிகவும் சிறப்பாகச் செய்ய முற்படும் ஆசிரியர்கள் பலர் இன்றும் காணப்படுகின்றார்கள். தம் பிள்ளைகளை உணர்ந்து முழுமையாகத் தெரிந்து கொள்கின்றார்கள். அவர்களது தேவைகள், விருப்பங்கள், திறன்கள் போன்றவற்றைக் கண்டறிந்து அதற்கேற்ப செயலாற்றுகின்றார்கள். இதனால் ஆசிரியர்கள் மத்தியில் அர்ப்பணிப்பு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிள்ளைகளுக்காக விட்டுக் கொடுத்தல், பொறுமை கடைப்பிடித்தல், சகிப்புத்தன்மை, அன்புள்ளவர்களாக இருத்தல், அர்ப்பணிப்பு போன்ற தன்மையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**முன்பள்ளிகளில் மாணவர் அனுமதி:**

அனேகமாக எங்கெங்கு செயற்பாடுகள் துரிதமாகவும், தவறின்றியும் மேற்கொள்ளப்படுகின்றதோ அங்கே தான் எல்லோருடைய கவனமும் இருக்கும். முன்பள்ளிகளில் சில உண்மையில் மிகவும் அக்கறையுடனும், நவீன உத்திகளைக் கையாண்டும் செயற்படடு வருகின்றன. இத்தகைய முன்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகமாகும். சில முன்பள்ளிகள் தமது வீடுகளுக்கு அருகில் இருக்கும் போது கூட அதைத் தவிர்த்து சில பிள்ளைகள் நன்கு திட்டமிட்ட வகையில் செயற்படும் முன்பள்ளிகளை நாடுகின்றனர். சில முன்பள்ளிகளில் ஆங்கிலமொழி மூலம் கற்பித்தல் இடம் பெறுவதனால் அதனையும் சில பெற்றோர்கள் விரும்பி தம் பிள்ளைகளை ஆங்கில மொழி மூலமான முன்பள்ளிகளில் அனுமதியைப் பெறுகின்றார்கள்.

சில முன்பள்ளிகளில் ஒரு ஆசிரியர் தனது எண்ணிக்கைக்கு அதிகமான மாணவர்களை வைத்துக் கற்பிக்கும் நிலையில் தனி மாணவர் மேல் கவனம் எடுப்பது கடினமானதாகி விடுகின்றது. ஆனால் சில முன்பள்ளிகளில் மாணவர் தொகை குறைவாகவும் உள்ளது. முன்பள்ளிகளில் காணப்படும் வசதிகளைப் பொறுத்தும் மாணவர்கள் எண்ணிக்கை கூடிக் குறையலாம். தளபாட வசதிகள் அற்ற நிலையில் மரங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளும் உண்டு. சில முன்பள்ளிகள் மாணவர் அனுமதியைக் கட்டுப்படுத்துகின்றன. தற்போது ஒவ்வொரு முன்பள்ளிகளிலும் மாணவர்கள் சீருடை அணியும் முறையும் நடைமுறைக்கு வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

**கல்வி நடவடிக்கைகள்:**

இன்றைய கல்விமுறைகள் விளையாட்டு மூலமான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. செய்து பார்த்தல் அனுபவத்தினூடாகக் கற்றல் பிரச்சினை தீர்த்தல், விளையாட்டு மூலம் கற்றல் போன்றவைகள் இன்றைய கல்வி நடவடிக்கைகளில் முக்கியம் பெறுகின்றன. நவீன நூற்றாண்டின் போக்குகள் ஒவ்வொருவரிடமும் கல்வி தொடர்பான விழிப்புணர்வையும், புத்தாக்க சிந்தனைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் கல்வியுலகம் பல மாற்றங்களைத் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றது.

மாணவர்கள் சமூகப் பொருத்தப்பாடுடையவர்களா, சமூக அங்கத்தவர்களை ஏற்று வாழும் மனப்பக்குவம் உடையவர்களாக வாழ வேண்டியதன் அவசியத்தை இன்றைய நவீன சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் வகுப்பறையில் குழு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். குழுச் செயற்பாடுகளைப் பல்வேறு முறைகளில் நடத்துவதற்காக அவர்களைச் சில அடிப்படைகளில் குழுக்களாகப் பிரித்தல் வேண்டும். அவர்கள் மிகவும் இலகுவாக ஊடாடுவதற்கு ஏற்றவகையில் இருக்கைகள் ஒழுங்க-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கப்படல் வேண்டும். இருக்கையில் 'ப' வடிவில் அமைவதன் மூலம் ஆசிரியர்கள் எல்லா மாணவர்களையும் கவனித்துக் கொள்வதற்கு இலகுவானதாக அமையும். ஆசிரியருடன் மாணவர்கள் இலகுவில் தொடர்பை ஏற்படுத்த முடியும். மாணவர்கள் தமக்குள்ளேயும் தொடர்புகளை ஏற்படுத்த இத்தகைய ஒழுங்குமுறைகள் வசதியாக அமைகின்றன. இவ்வகையில் வகுப்பறையைச் சரியாக ஒழுங்குபடுத்திய பின்னர் வகுப்பறையின் மூலைப்பகுதிகள் எஞ்சியவையாகக் காணப்படும். அத்தகைய மூலைகளை வேறு செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தலாம். அவர்கள் சுதந்திரமாக இருந்து சில ஆக்கங்களைச் செய்வதற்கு வேண்டிய வகையில் ஒரு மூலையை ஒதுக்கலாம். அது "சுற்றாடல் மூலை" எனப்படும்.

பிள்ளைகள் மணல், களி போன்றவற்றைப் பயன்படுத்தி விளையாடுவதற்கு வசதியாக "மணல் மூலையும்" அவர்கள் தமது விருப்பப்படி ஏதாவது ஒரு படத்துடன் கூடிய கதையுள்ள புத்தகங்களைப் பார்ப்பதற்காக ஓர் மூலையில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்படலாம். அது "வாசிப்பு மூலை"யாகும். முன்பள்ளிப் பிள்ளைகள் படங்களினூடாகவே கதைகளை விளங்கும் ஆற்றலுள்ளவர்களாகையால் அதற்கென புத்தகங்கள் தயாராக இருத்தல் வேண்டும். ஏதாவது ஒரு சிறு நாடகத்தை நடிப்பதற்காகச் சிலவேளைகளில் ஒப்பனை செய்ய வேண்டிய தேவையும் அவர்களுக்கு ஏற்படலாம். இதனால் "ஒப்பனை மூலை" ஒன்றினை அமைக்கலாம். அவை எல்லாவற்றிற்கும் அவசியமாக நீரின் தேவை மிகுதியாக உணரப்படுவதனால் "நீர் வசதியோடு கூடிய "நீர் மூலை" அவசியமாகும். இத்தகைய நிலையில் வகுப்பினை ஒதுக்கீடு செய்யும் போது பிள்ளைகளும் மகிழ்வுடன் கூடிய அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பட வைக்கும்போது அவர்களிடம் குழு உணர்வு, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், தலைமைத்துவம், நம்பிக்கை போன்ற பண்புகள் உருவாகின்றன. இன்றைய முன்பள்ளிகள் பல குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. குழுக்களைத் திறமையடிப்படையில் பிரிக்கும் போது எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்குத் தெரியப்படுத்தக் கூடாது. ஆண் பிள்ளைகள் பெண்பிள்ளைகள் இருசாராரையும் கலந்து கலப்புக் குழுவாக்கலாம். சில வேளைகளில் பிள்ளைகள் தாம் விரும்பும் குழுவில் சேரவும் அனுமதி வழங்கப்படுகின்றன. குழுக்களாகப் பிரிக்கும் போது அக்குழுக்களுக்கு ஏதாவது ஒரு பெயரினை வழங்கலாம். பிள்ளைகள்



ஒரே குழுவில் தொடர்ந்து இருப்பதற்கு விரும்பாத நிலையில் மாற்றியும் விடலாம். இதன் மூலம் கற்றல் சந்தர்ப்பங்கள் அதிகமாகின்றன.

யாழ்ப்பாண மாவட்ட முன்பள்ளிகளைப் பொறுத்தவரையில் கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அவை எல்லா முன்பள்ளிகளிலும் காணப்படுவதில்லை. குழந்தைகளுக்கும் சிறந்த புலக்காட்சிகளே முக்கியமாகும். குழந்தைகள் விரும்புவது காட்சி சார்ந்த பொருட்களேயன்றிக் கருத்துச் சார்ந்த மொழிகளல்ல. இதனால் உபகரணங்கள் இல்லாத கற்பித்தல் பயனற்றது. அனேகமாக உபகரணப் பயன்பாடு இருந்தபோதிலும் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப போதுமானதாக அமைவதில்லை. கற்பித்தலில் அவதானித்தல், பரிசோதனை செய்தல், பிரச்சினை தீர்த்தல், கண்டுபிடித்தல், சுற்றுலா போன்றவைகள் இன்று முக்கியம் பெறுகின்றன. இன்று மாணவன் பெறும் அறிவு செயல்முறை அறிவாகின்றது. பிள்ளைகள் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கருத்துக்களைப் பிள்ளைகள் மீது திணிக்காமல் அக்கருத்துக்களை வெவ்வேறு நவீன வடிவங்களில் பிள்ளைகள் உள்ளத்தில் பதிக்க வேண்டும்.

இன்று முன்பள்ளிகளில் பிள்ளைகள் சுயாதீனமாகச் செயற்படும் நிலையைக் காணமுடிகின்ற போதிலும் ஆசிரியர்கள் பல்வேறான செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொடுக்க வேண்டும். வயதிற்குப் பொருத்தமான வகையில் அவர்கள் சிந்தனையைத் தூண்டும் வகையில் கல்விப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இவைகளை விடுத்து நீண்ட நேரம் இருக்கையில் அமர்த்தி வைத்து ஆசிரியரது ஒருவழித்தொடர்பான செயற்பாடுகள் முன்பள்ளி நிலையங்களில் இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். இது மாணவனின் உடலையும் உளத்தையும் பாதிக்கும். கற்பித்தற் செயற்பாடுகள் வெறும் திணிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளாக அமையக்கூடாது. மாணவனைச் செயற்படவும், சிந்திக்கவும், தூண்டும் வகையில் அமைதல் சிறப்பானதாகும். கருத்துக்களை தனித்து தேக்க நிலையில் மட்டுமல்லாமல் அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் கருமவீரர்களாகப் பிள்ளைகள் செயற்படுகின்ற போதுதான் கல்வி வெற்றியைத் தரும் ஒரு செயற்பாடாகின்றது.

இன்று முன்பள்ளிகளில் சில பயிற்சிபெற்ற ஆசிரியர்களையும், திட்டமிட்ட கல்வி நடவடிக்கைகளையும் கொண்டு இயங்கி வருகின்ற போதிலும் பல முன்பள்ளிகளில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பிள்ளைகள் கற்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் பிள்ளைகளின் முழுமையான கல்விச் செயற்பாடுகள் தடைப்படும் நிலை காணப்படுகின்றது.

திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவைகள் தடையாக அமைகின்றன. சில முன்பள்ளிகள் பொது நிறுவனங்களிலும், சில தனியாரின் வீடுகளின் ஒரு பக்கமாகவும் நடைபெறுவதைக் காண முடிகின்றது. இதனால் போதிய இடவசதியையும், காற்றோட்டத்தையும் கொண்டிருக்கவில்லை.

முன்பள்ளிகளில் விளையாட்டுப் போட்டி, கண்காட்சி, பரிசளிப்பு போன்ற விழாக்கள் இடம்பெறுகின்றன. இப்போட்டிகள் மாணவர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றன. அனேகமான முன்பள்ளிகள் இத்தகைய போட்டிகளைத் தமது மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்பவும், கருத்துக்கேற்பவும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். சில முன்பள்ளிகள் தமது மாணவர்களை அருகிலுள்ள சில இடங்களுக்கு அழைத்துச் சென்று நேரடி அனுபவங்கள் ஊடாகச் சில விடயங்களை விளங்க வைப்பதை அவதானிக்கலாம். முன்பள்ளிகளைப் பொறுத்தவரையில் சுற்றுலா என்பது நீண்ட தூர இடங்களுக்கு அழைத்துச் செல்வது இயலாத காரியமாகும். ஆகவே அருகிலுள்ள சில இடங்களுக்காவது பிள்ளைகளைக் கூட்டிச் சென்று அனுபவங்களைப் பெறச் செய்தல் அவசியமாகும். இது பிள்ளைகளுக்கும் மன மகிழ்வைத் தரும் ஒரு செயலாக அமைகின்றது. இதனால் பிள்ளைகள் தாம் கற்கின்றோம் என்பதைவிட தாம் அனுபங்களைப் பெறுகின்றோம் என்பதை உணர்ந்து கொள்கின்றார்கள். நேரடி அனுபங்கள் மூலம் பிள்ளைகள் பெறும் விடயங்களானது அவர்கள் ஞாபகத்தில் நிலை நிறுவத்துவதற்கு இலகுவாகின்றது. மறக்கவும் முடியாததாக அமைந்துவிடும்.

## எதிர்காலச் செயற்பாடுகள்:

ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் சில வருடங்களே அப்பிள்ளையின் அறிவு, ஆளுமை, சமூக நடத்தைகள் போன்றன விருத்தியடையும் பருவமாதலால் இப்பருவம் மிகவும் அவதானத்துடனும், விழிப்புடனும் ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் உற்று நோக்கப்பட வேண்டிய பருவமாகும். இதனால் அவர்களுக்கான அறிவுச் செயற்பாடுகள் நன்கு திட்டமிட்ட முறையில் அமைய வேண்டும். அவர்களின் பாதுகாப்பு, உணவு, அன்பு, ஊக்கம் போன்ற செயற்பாடுகளில் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் அவர்கள் மேல் தனிக்கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் உச்ச அளவிலான அனுபவங்களைத் திரட்டுவதற்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் அவ்அனுபவங்கள் குழந்தையின் வீட்டு அனுபவங்களுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். இதனையே ஜோன்டுயி

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் உபகரணப் பயன்பாடு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் பிள்ளைகள் விரும்புவது காட்சி சார்ந்த பொருட்களேயன்றி கருத்து சார்ந்த மொழிகள் அல்ல. ஆகவே பிள்ளைகளுக்கு சொற்களுக்கு முன்னர் பொருட்களைக் காட்ட வேண்டும்.**

(Jonn Dewey) "பாடசாலை என்பது சமூகத்தின் ஒரு சுருங்கிய பாதிப்பாக இருக்க வேண்டும்" என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். இன்றைய கல்வியானது ஏன்? எதற்கு? எப்படி? எப்போது? எவ்வாறு என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைதல் வேண்டும். மாறும் காலச் சூழலுக்கேற்ப பிள்ளைகளும் மாறிவிடுகின்றார்கள். இன்று அதற்கேற்றாற் போல கல்வியின் வேகமும் துரிதமானதாகும். இதனால் அதற்கு ஈடு செய்யும் வகையில் கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டும். இல்லையேல் கல்வியின் மூலம் உச்சப் பயனைப் பெறமுடியாமல் போய்விடும்.

கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் உபகரணப் பயன்பாடு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் பிள்ளைகள் விரும்புவது காட்சி சார்ந்த பொருட்களேயன்றி கருத்து சார்ந்த மொழிகள் அல்ல. ஆகவே பிள்ளைகளுக்கு சொற்களுக்கு முன்னர் பொருட்களைக் காட்ட வேண்டும். பிள்ளைகளின் ஒன்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட புலன்களுக்குக் கவர்ச்சியையூட்டிக் கற்பிக்கும் செயற்பாடுகள் தான் எதிர்காலத்தில் வெற்றியைத் தரும். இதனால் பயிற்சிபெற்ற ஆசிரியர் இவைகளின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்திருப்பார்களாதலினால் சரியான முறையில், தேவையான இடங்களில் உபகரணங்களைப் பயன்படுத்துதலில் திறமையுடையவர்களாகின்றார்கள். இதன் மூலம் மாணவனது சிந்தனா சக்தி அதிகரிக்கின்றது. கற்பனைகள் இலகுவில் மனதில் பதிவதுடன் ஞாபகத்தில் நிலை நிறுத்தப்படுகின்றன.

கல்வி என்பது பல்வேறு துரித மாற்றங்களோடு உயர்ந்த சிந்தனைகளையும் உடையதாக நாளாந்தம் பல மாற்றங்களை உள்வாங்கி நடைபெறும் ஒரு செயலாகும். இதனால் ஒரு பிள்ளையின் எதிர்காலம் என்பது அது பெறும் கல்வியிலேயே தங்கியுள்ளது. அதன் எதிர்காலம் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் செயற்பாடுகளில்தான் தங்கியுள்ளது. இதனால் அதனைச் சரியான முறையில் உருவாக்குதலில் அல்லது நிர்மூலமாக்குவதில் பெரும் காரணகர்த்தாக்களாக விளங்கும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். பிள்ளைகளின் அன்புத்தேவை, பாதுகாப்புத் தேவை, உணவுத் தேவை, கல்வித் தேவை போன்றவைகள் சரியான முறையிலே நிறைவேற்றப்பட வேண்டும். இதன் மூலம் மாணவனின் உடல், உள்ளம் இரண்டின் வளர்ச்சியும் துரிதமாகின்றது.

மாணவர்கள் கல்வியின் மூலம் இன்று அதிகம் செயற்படுபவர்களாக மாற்றப்படுகின்றார்கள். தமது பிரச்சினைகளை ஓரளவு அணுகக்கூடியவர்களாகவும், சிந்தனைத் திறம் அதிகம் உள்ளவர்களாகவும் விளங்குகின்றார்கள். இதனால் எல்லா விடயங்களையும் தமது அனுபத்தின் மூலம் பெறக்கூடியவர்களாகத் திட்டமிட்ட கல்வியை அவர்களுக்கு வழங்க வேண்டும். அனுபவத்தின் மூலம் பெறும் விடயங்கள் அவர்களால் மறக்கப்பட முடியாதது ஆகையால் முன்பள்ளிக் குழந்தைகளுக்கு விளையாட்டின் மூலமே கல்வியைப் பெறுவதற்குரிய வசதிகளை வழங்க வேண்டும். இன்றைய முன்பள்ளிகள் இத்தகைய செயற்பாடுகளை உடையதாகக் காணப்பட்ட போதிலும் பல முன்பள்ளிகளில் விளையாட்டின் உயர் பயனை உணரமுடியாத ஆசிரியர்கள் பலர் இன்றும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்காலத்தின் செயற்பாடுகள் எப்போதும் மேல்நோக்கிய உயர்வையே காட்டும் என்பது பொதுவாக ஏற்றுகொள்ளப்பட்ட போதிலும் அதற்காகச் சரியான திட்டமிடல் அவசியமாகும். இதனால் பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

- முன்பள்ளிகளை அரசு பொறுப்பெடுக்க வேண்டும்.
- ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும்
- பெற்றோர்கள் கல்வி தொடர்பான விழிப்புணர்வு அதிகமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- முன்பள்ளிகளுக்கான கலைத்திட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- பெற்றோர் ஆசிரியர் தொடர்பு அதிகமாக இருக்க வேண்டும்.
- முன்பள்ளிகள் அமைவிடம் சரியான முறையில் இருக்க வேண்டும்.
- முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனம் அதிகமாக்கப்பட வேண்டும்.
- முறையான கற்பித்தற் சாதனங்களை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.
- முன்பள்ளி நிலையங்கள் சமூக ஆதரவைப் பெற்று இயங்க வேண்டும்.

இத்தகைய நடைமுறைகள் எதிர்காலத்தில் சரியான முறையில் அமையும் என்பது உறுதியாகும்.

**முடிவுரை**

இன்று நாடெங்கிலும் முன்பள்ளிகள் எண்ணிக்கையில் அதிகளவாக இருந்த போதிலும் அவையாவும் திட்டமிட்டகல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ஆசிரியர்களுக்குப் போதி பயிற்சிகள் வழங்கப்படாமையினால் அவர்களால் கிடைக்கும் பயனும் குறைந்து கொண்டேயுள்ளது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏறக்குறைய 700இற்கு மேற்பட்ட முன்பள்ளிகள் பதிவு செய்யப்படாமலும் இயங்கும் நிலை காணப்படுகின்றது. ஆயினும் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளில் பல அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்குவதையும் காணமுடிகின்றது. எனினும் இவைகள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும் எதிர்காலத்தில் அதற்குரிய மனித, பௌதிக வளங்களைப் பெற்று இயங்கும் நிலையில் அதன் கல்வி வளர்ச்சி அதிகமாகும் என எதிர்பாக்கப்படுகின்றது. எத்தகைய நிலை இருந்த போதிலும் எமது எதிர்காலத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் முன்பள்ளிகள் சிறப்பாகச் செயலாற்றி சிறந்த மனித வளத்தை உருவாக்க வேண்டுமானால் அவை இன்னமும் பலமைற்கற்களைக் கடக்க வேண்டியுள்ளது. பலர் இன்னும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**எஸ். செல்வராணி (ஆசிரியை)**
தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளி,
பருத்தித்துறை.


நேர் கண்டவர்:- ப. இராஜேஸ்வரன்

சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியராக எஸ்.செல்வராணி பணிபுரிந்து வருகின்றார். அவரது நோக்கு நிலையில் முன்பள்ளி அமைப்பு பற்றிய சிந்தனைகள் இங்கே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

# தொழில் திருப்தி இல்லாத நிலை தொடர வேண்டுமா?

**இராஜேஸ் :**

இன்று கல்வித்துறை பரந்த அளவில் விரிந்து, வளர்ச்சியடைந்து வருகின்றது. அதற்கேட்ப நாட்டிலுள்ள முன்பள்ளிகள் சமமாக வளர்ச்சியடைந்து வருகின்றனவா, அவற்றின் கற்றல் - கற்பித்தல் செயன்முறை தரமாக உள்ளனவா?

**செல்வராணி :**

முன்பள்ளிக் கல்வித்துறை விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆனால் சமமாக அல்ல. நகரப்புரங்களிலும், வளர்ச்சியடைந்த பிரதேசங்களிலும் தனியாரும், சில நிறுவனங்களும் மிக உயர்ந்த தரத்திலும் பெருமளவு பணத்தைக் கட்டணமாகப் பெற்றும் முன்பள்ளிகளை நடாத்த பெரும்பாலான பிரதேசங்களில் குறைந்த வளங்களுடன், வசதிகளற்று முன்பள்ளிகள் இயங்குகின்றன. இன்னும் பல பிரதேசங்களில் முன்பள்ளிகள் தொடங்கப்படாமலே உள்ளன. எனவே முன்பள்ளிக் கல்வி எமது நாட்டில் சீரான முறையில் தரமாக வளர்ச்சி காணவில்லை என்றே கூறலாம்.

**இராஜேஸ் :**

நீங்கள் முன்பள்ளி ஆசிரியராக வருவதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

**செல்வராணி :**

நான் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே ஒரு ஆசிரியராக வரவேண்டும் என விரும்பினேன். அவ் விருப்பமே என்னை முன்பள்ளி ஆசிரியராக்கியது. அத்துடன் சிறுவர் சிறுமியருக்குக் கற்பிப்பது என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். பாடசாலைக் காலத்திலேயே அயல் வீடுகளில் உள்ள சிறார்கள் என்னிடம் படிக்க வருவார்கள். அவர்களுடன் ஆடிப்பாடி நடித்து, விளையாடிப் பெற்ற அனுபவங்கள் என்னை முன்பள்ளி ஆசிரியராக்கியது.

**இராஜேஸ் :**

எத்தனை வருடங்கள் நீங்கள் முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளீர்கள், எவ்வாறான பயிற்சிகளைப் பெற்றுள்ளீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வராணி :**

கடந்த பத்து வருடங்களாக முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன். இக்காலத்தில் பல அரச - அரசசார்பற்ற - தனியார் நிறுவனங்கள் பல வகையான பயிற்சிகளைத் தந்தன. சர்வோதய நிறுவனம், யுனிசெவ், வலயக்கல்வி அலுவலகம், பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றம், தனியார்கள் எனப் பல நிறுவனங்கள் ஒரு நாள், ஒரு வாரம் எனப் பல வகைகளில் பல்வேறு வகையான பயிற்சிகளை வழங்கி வந்தன. அவற்றைப் பல்வேறு காலகட்டங்களில் பெற்றிருந்தேன். அப்பயிற்சிகள் ஒரு முழுமையான செயற்றொடராக நடைபெறவில்லை. அத்துடன் முன்பள்ளி தொடர்பான எல்லாத் துறைகளிலும் பயிற்சியைப் பெற முடியவில்லை. 2006 ஆம் ஆண்டு ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனம் என்ற அரச சார்பற்ற நிறுவனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறியை ஆரம்பித்து. அதில் ஒரு வருடகால பயிற்சி பெற்றேன்.

**இராஜேஸ் :**

அப்பயிற்சியினால் நீங்கள் பெற்ற பயன்கள் எவையாக இருந்தன?

**செல்வராணி :**

முன்பள்ளி ஆசிரியர்களுக்காக தொழில் வாண்மைப் பாடங்களும் (உளவியல், தத்துவம், வழிகாட்டல், அளவீடு) பாலர்களுக்கு எவ்வாறு கற்பிப்பது, பாலர் வளர்ச்சிப்பருவங்கள், முன்பள்ளி முகாமைத்துவம், கற்பித்தல் பயிற்சி, அபிநயப்பாடல், நாடகம், கதை கூறல் தொடர்பான தேர்ச்சிகளைப் பெற்றேன். இப்பாடநெறிப் பயில்வு பயிற்சிகளுடன் கூடியதாக இருந்ததால் சிறப்பாக இருந்தது. மேலும் இத்துறையில் மேலும் வளர உந்துதலை வழங்கியது. என்றாலும் நவீன கணினிக் கற்கை, 2 ஆம் மொழி, உடற் கல்வி, உபகரண ஆக்கம் தொடர்பான மேலதிக முழுமையான பயிற்சிகளைப் பெறமுடியாத சூழ்நிலைகளும் காணப்படுகின்றன.

**இராஜேஸ் :**

அவ்வாறு எனின் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை என நீங்கள் கருதுகின்றீர்கள்?

**செல்வராணி :**

ஒரு நியம அடிப்படையில் நாடு முழுவதும் அரசாங்கத்தின் வழிகாட்டலில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சியை அளிக்கும் ஆசிரிய பயிற்சி முன் சேவை நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் முன்பள்ளி ஆசிரியருக்கு முறையான முன்பயிற்சியையும், தொடர்ந்து பயில்வையும் மேற்கொள்ளலாம். இது இன்று மிக அவசியமாக வேண்டப்படுகின்றது. இது நமது மிக உன்னதமான தேசியச் செல்வமாகிய முன்பள்ளிப் பிள்ளைச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைவதுடன், ஆசிரியர்களின் தொழில் சமூக மதிப்பைப் பெறுவதற்கும் உதவியாக அமையும்.

**இராஜேஸ் :**

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியை அரசாங்கம் ஒழுங்குபடுத்த வேண்டும் எனக் கூறினீர்கள். இன்றைய முன்பள்ளித் துறையை முழுமையாக அரசாங்கம் பொறுப்பேற்பது பற்றிய தங்கள் கருத்து என்ன?

**செல்வராணி :**

இது மிகவும் முக்கியமான விடயமாகும். கல்வியமைப்பிலே மிக முக்கிய அலகாகவும் முதன்மைத் துறையாகவும் முன்பள்ளிக் கல்வித்துறை உள்ளது. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அரசாங்கமே இத்துறையைப் பொறுப்பேற்றல் சிறந்தாகும். நாட்டிலுள்ள முன்பள்ளிகளிடையே பொருத்தமான ஒத்த தன்மையோ, கலைத்திட்ட ஒழுங்கமைப்போ, முகாமைத்துவமோ இல்லாத நிலையில், எவ்வித வரையறைகளும் அற்று முன்பள்ளிகள் காணப்படுகின்றன. இதனால் இத்துறையின் அபிவிருத்தி விரைவாக ஏற்படாத சூழ்நிலைகளும் உள்ளன. இலங்கையில் இத்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளில் ஈடுபட்ட கல்வியியலாளர்கள் முன்பள்ளிகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை வலியுறுத்தி வருவதையும் இத்தருணத்தில் சுட்டிக் காட்டுகின்றேன்.

**இராஜேஸ் :**

இன்றைய முன்பள்ளி ஆசிரியர்களுடைய உரிமைகள், சலுகைகள் தொடர்பாக உங்கள் கருத்துநிலை என்னவாகவுள்ளது?

**செல்வராணி :**

பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் விருப்பத்துடன் தமது கற்பித்தல் நடவடிக்கைகளில் அர்ப்பணிப்பாக ஈடுபட்டாலும் சொல்லவொன்னாத வேதனைகள், சவால்களுடனேயே கடமையாற்றுகின்றார்கள். மிகக் குறைந்த அற்பசொற்ப சம்பளத்துடன் கடமையாற்றும் பொரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்களுடைய பொருளாதார நிலை சிறப்பானதாக இல்லை. இந்நிலையில் அவர்களுக்குத் தொழில் திருப்தி எவ்வாறு ஏற்படும். மேலும் எமது முன்பள்ளி ஆசிரியர்களை ஒருங்கிணைக்கும் தொழில்சங்கமோ அல்லது அமைப்போ எதுவுமில்லை. இவ்வாறான நிலையில் எமது உரிமைகளைப் பற்றி என்ன கூறுவது மேலும் சலுகைகள் என்று எமக்கு எதுவுமில்லை.

**இராஜேஸ் :**

இந்த மோசமான நிலையிலிருந்து முன்பள்ளி ஆசிரியர்களை மீட்க ஏதாவது வழிகள் உள்ளனவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வராணி :**

ஆம் முதலில் குறுகிய கால ரீதியில் தற்போது கடமையாற்றும் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் மாவட்ட ரீதியாகவோ, வலய ரீதியாகவோ ஒருங்கிணைத்து ஒரு நிர்வாகத்தின் கீழ்கொண்டு வந்து அரசார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவற்றின் மூலம் ஒரு நிலையான சம்பளத்தை முன்பள்ளி ஆசிரியர்களுக்குத் தீர்மானித்து வழங்கலாம். நீண்டகால நோக்கில் இவர்களுக்கான வாண்மைத் துவப்பயிற்சியைக் கொடுத்து அரசாங்கமே முன்பள்ளி ஆசிரியர்களைப் பெறுப்பேற்று மாகாண அமைச்சின் மூலமோ அல்லது உள்ளூராட்சி அமைப்புக்கள் மூலமே சம்பளத்தை வழங்கினால் ஆசிரியர்களாகிய நாம் மிகுந்த மனத்திருப்தியுடன் இத்தொழிலை மேலும் அர்ப்பணிப்புடன் செய்ய வாய்ப்புக்கள் ஏற்படும்.

**இராஜேஸ் :**

இன்றைய முன்பள்ளிகள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் பற்றிய உங்கள் நிலை என்ன?

**செல்வராணி :**

எமது பிரதேசத்திலும் நாட்டிலும் உயர்வர்க்கப் பிள்ளைகள் பெருமளவு பணத்தைக் கட்டி தரமான கல்வியைப் பெற முனையும் அதே வேளை பரந்த அளவில் காணப்படும். சாதாரண அல்லது வசதிகள் வளங்கள் குறைந்த முன்பள்ளிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அவற்றில் முக்கியமானதாகப் பொருத்தமான வகுப்பறைக் கட்டடம் இன்மை, கோவில்கள், சனசமூக நிலையங்கள், வீட்டுத் திண்ணைகளிலேயே பல முன்பள்ளிகள் இயங்க வேண்டியுள்ளது. மேலும் கற்றல் - கற்பித்தல் சாதனங்கள், விளையாட்டு முற்றம், விளையாட்டு - சுற்றாடல் மூலை, மின்சார வசதி, தொலைக்காட்சி, வானொலி ஆகியவை காணப்படாத நிலையில் நவீன முறையில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பல வகையான இடங்களை எதிர்நோக்குகின்றார்கள். மேலும் இவ்வாறாகக் கற்பிப்பதற்கான பயிற்சி போதாமல் உள்ளது. கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களும் சில காலத்துடன் தமது தொழிலை விட்டுச் செல்ல புதியவர்கள் உள் வருகின்றார்கள். எனவே தொடர்ச்சியாகப் பல இடங்களைத் தாங்க வேண்டிய நிலையில் முன்பள்ளிகள் உள்ளன.

**இராஜேஸ் :**

இவ்வாறான இடங்களைத் தீர்க்க ஏதும் வழிமுறைகள் காணப்படுகின்றனவா?

**செல்வராணி :**

முன்பள்ளிகளை முகாமை செய்வோர் சரியாகப் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அத்தோடு பெற்றார்கள் பெருமளவு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். சமூகத்திலுள்ள பெரியோர்கள், நிதியுடையோர், அரசார்பற்ற நிறுவனங்கள் என்பது குறித்த பிரதேச முன்பள்ளிகளை நீண்டகால - குறுகிய காலத் திட்டங்களின் அடிப்படையில் இலகுவாக அபிவிருத்தி நோக்கி நகரலாம். இதற்கு முதலில் எல்லா முன்பள்ளிகளையும் ஒருங்கிணைத்து ஒரு நிர்வாக அமைப்பிற்குள் கொண்டு வந்து செயலாற்ற வேண்டும். இதற்கு உள்ளூராட்சி அல்ல கல்வியமைப்புத் தலைவர்கள், அரசியல்வாதிகள் துணிகரமாக முடிவுகளை எடுத்துச் செயலில் இறங்க வேண்டும். ஊடாகங்கள் இவ்விடயங்கள் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

---

தற்கால முன்பள்ளிகளில் குழந்தைகளின் நாட்டங்களுக்குப் பொருத்தமான செயல்களை உள்ளடக்குகின்ற, ஒரு முழுமையான அலகாகப் பாடசாலை நாளைக் கருதுகின்றோம். இது புரோபலின் சிந்தனை மரபிலிருந்து உதித்ததாகும். புரோபல் குழந்தைக் கல்வி முன்னோடிகளுள் குறிப்பிடத்தக்க ஒருவர் என்பதை அறிவோம். அவரின் செல்வாக்கினை முன்பள்ளிகளில் காண்கிறோம். எதிர்காலத்திலும் அது தொடரும். ஆயினும் 'மனிதனின் கல்வி' (1896) எனும் அவரின் பிரதான நூலானது இலகு வாசிப்புக்கு ஏற்றதாக அமையாததால், அவரின் நூல்கள் அதிகளவில் இன்று வாசிக்கப்படுவதில்லை என்பதை இங்கு குறிப்பிடலாம். எப்படியாயினும் புரோபலின் பங்களிப்பு முன்பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை சிறந்த வரப்பிரசாதமே என்பதில் ஐயமில்லை.

எண், எழுத்து வாசிப்பு என்னும் மூன்றையும் மேற்கொள்ளுதலை நாளாந்த வழக்கமாகக் கொண்டிருந்த அக்காலக் குழந்தைப் பள்ளிகளுக்கு மாறாக, வெகுமதிகள், செயற்பாடுகள், பாடல்கள், விளையாட்டுக்கள், கதைகள், உரையாடல்கள் என்பன புரோபலின் குழந்தைப் பிள்ளைகளின் கலைத்திட்டத்தினை உருவாக்கின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(நன்றி : பேராசிரியர் மா. செல்வராஜா,
"முன்பள்ளிக் கல்வி சிந்தனைகளும் செயற்பாடுகளும்" - 2006 பக் : 04)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**பேராசிரியர். சோ. சந்திரசேகரன்**
பீடாதிபதி, கல்விப்பீடம்,
கொழும்பு கல்கலைக்கழகம்

சிறப்புப்பார்வை

பின்லாந்துப் பிள்ளைகளின் பிரதான பண்பு தமது கல்வி மேம்பாட்டுக்கான பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொள்வதாகும். கற்றலைப் பொறுத்தவரையில் இவ்வகையான பொறுப்பேற்கும் பண்பைப் பிள்ளைகள் வளர்த்துக் கொள்ளும் வகையில், முன்பள்ளிக் கல்வி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை பின்லாந்துப் பிள்ளைகளின் உயர்ந்த கல்வித் தேர்ச்சிக்கு ஒரு பிரதான காரணமாகும்.

# முன்பள்ளிக் கல்வியின் உலகளாவிய முக்கியத்துவம்

57 நாடுகளின் 15 வயதுப் பிள்ளைகளின் வாசிப்பு, விஞ்ஞான, கணித அறிவை ஆராய்ந்த சர்வதேச மதிப்பீட்டுப் பரீட்சைகளின் படி பின்லாந்து மாணவர்களே உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இதன் காரணமாக அமெரிக்கா உட்படப் பல நாடுகளின் கல்வியியல் ஆய்வாளர்கள் பின்லாந்து மாணவர்களின் உயர் தேர்ச்சிக்கான காரணங்களை ஆராயமுற்பட்டனர்.

அமெரிக்க மற்றும் பல உலக நாடுகளின் பிள்ளைகள் 5 வயது தொடக்கம் முறையான பாடசாலைகளில் அனுமதி பெறுகின்றனர். ஆனால் பின்லாந்து மற்றும் ஸ்காந்திநேவிய நாடுகளில் 7 வயதிலேயே மாணவர்கள் ஆரம்பக்கல்வியைத் தொடங்குமுன்னர், முன்பள்ளி வயதில் சகல பின்லாந்துப் பிள்ளைகளும் மிகவும் உயர்தரமான முன்பள்ளிக்கல்வியில் ஈடுபடுகின்றனர். பாடநூல் புலமையை வழங்காது, இந்நிலையில் பிள்ளைகளின் சமூகநடத்தை, சுய பிரதிபலிப்பு என்னும் விடயங்களில் அக்கறை செலுத்தப்படுகின்றது. பிறநாடுகளின் வலியுறுத்தப்படாத ஒரு பிரதான அம்சம் பின்லாந்துக் கல்வியில் முன்பள்ளி நிலையில் வலியுறுத்தப்படுகின்றது.

பின்லாந்துப் பிள்ளைகளின் பிரதான பண்பு தமது கல்வி மேம்பாட்டுக்கான பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொள்வதாகும். கற்றலைப் பொறுத்தவரையில் இவ்வகையான பொறுப்பேற்கும் பண்பைப் பிள்ளைகள் வளர்த்துக் கொள்ளும் வகையில், முன்பள்ளிக் கல்வி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை பின்லாந்துப் பிள்ளைகளின் உயர்ந்த கல்வித் தேர்ச்சிக்கு ஒரு பிரதான காரணமாகும்.

பின்லாந்தின் இத்தகைய அணுகுமுறை 1830களில் ஜெர்மன் நாட்டுக் கல்விச் சிந்தனையாளரான என்பாரின் F. Froebel என்பாரின் 'குழந்தைப் பூங்கா' (Kindergarten - Children's Garden) என்ற கொள்கையுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். பிள்ளைகளுக்கு விளையாடும் வாய்ப்புகளை வழங்கி அவையூடாகக் கற்கும் நிலைமைகளைக் குழந்தைப் பூங்கா ஏற்படுத்துகின்றது. 'இவ்வாறான வாய்ப்புகளை முன்பள்ளிப் பருவத்தில் வழங்கி, எதிர்காலத்தில் பாடசாலையில் முறையான கல்வி பெறுவதற்கான அத்திவாரத்தை வழங்குதல் வேண்டும் என்று Froebel கூறினார். அவரது மற்றொரு கருத்து, 'சகல சமூகவகுப்புகளைச் சேர்ந்த சிறந்த ஆண்களும் பெண்களும் எதிர் காலத்தில் சிறந்த வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்கு, முன்பள்ளிப் பருவத்தில் ஏற்படும் உள, உடல் வளர்ச்சி காரணமாகும் என்பதாகும்.

**சுவீடன்**

மற்றொரு ஸ்காந்தினேவிய நாடான சுவீடனின் கல்வி முறையும் உலகில் வெற்றிகரமாக செயற்பட்டு வரும் கல்வி முறைகளுள் ஒன்று; இதற்குப் பிரதான காரணம் அந்நாட்டின் முன்பள்ளி நிலையில் செய்யப்பட்டுள்ள கல்வி ஏற்பாடுகளாகும். அந்நாட்டின் முன்பள்ளிக் கல்விமுறை ஏறத்தாழ 1970 களில் தொடங்கப்பட்டது; இக்காலப்பகுதியிலேயே முதலாவது முன் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி 6 வயதுப் பிள்ளைகளுக்கு இலவச முன்பள்ளிக் கல்வி வழங்கப்பட்டது; மேலும் இச் சட்டப்படி 6 வயதுப் பிள்ளைகள் 525 மணி நேரம் முன்பள்ளிக்கல்வி பெற உரித்துடையவர்களாயினர்; இக்கல்வி பிள்ளை பேணல் நிலையம், குடும்பப் பிள்ளை பேணல் நிலையம் என்பவற்றால் வழங்கப்படும். இக்கல்வியை வழங்கும் அதிகாரம் மாநகர சபைகளுக்கு வழங்கப்பட்டது. 1990களின் பிற்பகுதியில், முன்பள்ளிக் கல்வியானது குடும்பத்தை விடுத்து கல்விக் கொள்கையுடன் தொடர்பு படுத்தப்பட்டது. அக்காலத்தில் சுவீடன் அரசாங்கம் கட்டாயப் பாடசாலைக் காலத்தின் ஆரம்பத்தில் பெறும் கல்வியை முன்பள்ளிக் கல்வி வலுப்படுத்தும் என்று கருதியது. இச்சிந்தனையானது 1-6 வயதுப் பிள்ளைகளின் முன்பள்ளிக் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பிரதானமாக, அரசாங்க மட்டத்தில் குறிக்கோள்களும் கற்றல் நோக்கங்களும் உள்ளடங்கிய ஒரு முன்பள்ளிப் பாட ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது; இப்பாட ஏற்பாடு சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் பிள்ளைப் பேணல் சேவை வழங்குவோரையும் உள்ளடக்கி அமைந்தது.

மேலும் பிள்ளை பேணல் சேவைக்குப் பதிலாக முன்பள்ளிக் கல்வி என்னும் சொல் பயன்படுத்தப்படலாயிற்று.

பின்னர் படிப்படியாக 4-6 வயதுப் பிள்ளைகள் யாவருக்கும் இலவச முன்பள்ளிக் கல்வி வழங்கப்படலாயிற்று. 2000 ஆம் ஆண்டளவில் நாடாளாவிய ரீதியில் ஆசிரியர் தகுதிகள், வகுப்பறையின் பருமன், ஆசிரியர் - மாணவர் விகிதம் போன்ற விடயங்களில் சமமான தரங்கள் வலியுறுத்தப்பட்டன.

சர்வதேசப் பரீட்சைகளில் உயர்சித்திகளைப் பெற்ற டென்மார்க், நோர்வே, சுவீடன், பின்லாந்து முதலிய ஸ்காந்திநேவிய நாடுகளின் முன்பள்ளிக் கல்வி தொடர்பான கட்டமைப்பு ஏற்பாடுகள், கல்வி முறையோடு ஒன்றிணைக்கப்பட்ட ஏற்பாடுகளாக அமைந்தமை ஒரு பிரதான அம்சமாகும்.

**ஐக்கிய அமெரிக்கா.**

இருபதாம் நூற்றாண்டில் கல்வியாளர்களும், பிள்ளைகளின் நலன்களில் அக்கறை காட்டியவர்களும் முன்பள்ளிக் கல்வியை விரிவுபடுத்துமாறு பெரிதும் வலியுறுத்தினர். இதன் விளைவாக 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துண்டுப்படுத்தப்பட்ட, ஒழுங்கற்ற ஒரு முன்பள்ளிக் கல்வி முறையே ஐக்கிய அமெரிக்காவில் வளர்ச்சி பெற்றிருந்தது. இது சமூகத்தினதும் பிள்ளைகளினதும் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவை அல்ல என்பதும் உணரப்பட்டது.

ஆயினும் கல்வி, வேலை, நலனளித்தல் (Welfane) தொடர்பான சமூக சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அமெரிக்காவில் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தின. அது குடும்பம் சம்பந்தப்பட்ட விடயமல்ல; தேசிய கல்வியுடன் தொடர்புள்ள விடயம் என்பது அமெரிக்காவில் புரிந்து கொள்ளப்பட்டது. 1980களிலும் 1990 களிலும் ஆரம்ப, இடைநிலைக்கல்வி வளர்ச்சியில் காட்டப்பட்ட விசேட ஆர்வம் காரணமாக, முன்பள்ளிக் கல்வியிலும் மிகுந்த அக்கறை காட்டப்பட்டது.

1998, 2000 ஆகிய ஆண்டுகளில் சில ஐக்கிய அமெரிக்க மாநிலங்களின் (உதாரணம் நியூ ஜேர்சி, கரோலினா) நீதிமன்றங்கள், ‘அபாயங்களை (Risk) எதிர்நோக்கும் பிள்ளைகள்’, பிற்காலத்தில் பாடசாலைகளில் பல கற்றல் பிரச்சினைகள் எதிர்நோக்கக் கூடும்; எனவே அவர்களுக்கு முறையான முன்பள்ளி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என மாநில கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் செய்யப்பட்ட சில ஆய்வுகளின்படி இளம் பிள்ளைகள் கற்பதற்கான ஆற்றல் படைத்தவர்கள் எனக் கண்டறியப்பட்டது. வழமையான அமெரிக்கச் சிந்தனை சற்று மாறுபட்டது. பழைய சிந்தனையின் படி, முன்பள்ளிக் கல்வியானது சமூக மயமாக்கலைப் பிரதான பணியாகக் கொண்டது; அதாவது சகபாடிகள் மற்றும் குடும்பத் தொடர்பற்றவர்களுடன் பழகும் முறையைப் பயிற்றுவதே முன்பள்ளிக் கல்வி. ஆனால் புதிய ஆய்வுகள் முதல் ஐந்து ஆண்டுகளில் பிள்ளைகளின் சமூகதேர்ச்சி, மொழி ஆற்றல், எண்ணக்கருவாக்க ஆற்றல் என்பன அதிக அளவில் விருத்தியாவதாக இவ்வாய்வுகள் எடுத்துரைத்தன (தேசிய ஆராய்ச்சிக் கழக ஆய்வுகள்).

இந்த ஆய்வுகள் எடுத்துக் கூறிய வேறு விடயங்கள்:

- நன்கு திட்டமிடப்பட்ட, குறிக்கோள்களை உள்ளடக்கிய உயர்தரமான முன்பள்ளிகளுக்குச் சென்ற பிள்ளைகள், ஆரம்பப்பள்ளியின் சிக்கலான பாட ஏற்பாட்டைக் கற்க சிறந்த முறையில் ஆயத்தப்படுத்துகின்றனர்.
- முன்பள்ளி வயதுப் பிள்ளைகள் எவ்வாறு விருத்தியடைகின்றார்கள்? இப்பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிக்க வேண்டும், இவ்விடயங்கள் தொடர்பான ஆசிரியர்கள் ஒரு கட்டாயமான தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் பேணலும் (Care) முன்பள்ளி வயதில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்; வேலை செய்யும் பெற்றோர்கள் தாம் வேலை செய்து கொண்டிருக்கும் போது, தமது பிள்ளைகள் கற்பதோடு கவனிப்புக்கும் உள்ளாக வேண்டும் என்பதை அறிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். அக்காலத்து முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டங்கள் பிள்ளைகளை முறைசார் பள்ளிக்கு ஆயத்தப்படுத்தல், வேலை செய்யும் பெற்றோருக்கு உதவுதல் முதலிய விரிவான நோக்கங்களைக் கொண்டிருக்கவில்லை. ஏதேனும் ஒரு குறிக்கோளே இருந்தது. இதன் விளைவாக முன்பள்ளிக் கல்வி ஏற்பாடுகளில் ஒரு பொதுத்தன்மை காணப்படவில்லை. நிர்வாக ஏற்பாடுகள், கல்வி வழங்கும் முறை, குறிக்கோள்கள் என்பவற்றில் வேறுபாடுகள் காணப்பட்டன.

- இப்பின்புலத்தில் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இளம் பிள்ளைகளின் முன்பள்ளிக் கல்வி விடயத்தில் ஐக்கிய அமெரிக்கா ஏனைய ஐரோப்பிய நாடுகளை விடப்பின்தங்கிக் காணப்பட்டது. இவ்விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தன:
- பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் 3-6 வயதுப் பிள்ளைகளுக்கு விரிவான இலவச முன்பள்ளிக்கல்வியை வழங்குகின்றன; 1999-2000 இல் 95-99% பிள்ளைகளுக்கு முன்பள்ளிக்கல்வி கிட்டியது. அவுஸ்திரியா, நெதர்லாந்து, ஸ்பெய்ன், ஜெர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளில் 70% பிள்ளைகளுக்கு இவ்வசதி கிட்டியது.

மற்றொரு பிரதான அம்சம் இவ்வுயர்ந்த தொகையினரான பிள்ளைகளுக்கு முறையான முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித்திட்டமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தகுதி வாய்ந்த ஆசிரியர்களாலே இவை நடாத்தப்பட்டன. இவற்றுள் பிள்ளைகளைப் பேணும் நிலையங்கள் அடங்கமாட்டாது. ஐரோப்பிய முன்பள்ளி ஆசிரியர்கள் பட்டப்படிப்புக்கு இணையான தகுதிகளைக் கொண்டவர்கள்.

சகல ஐரோப்பிய நாடுகளிலும் முன்பள்ளிக்கான நிதியை அரசாங்கம் ஒதுக்குகின்றது. வசதியுள்ள பெற்றோர்கள் மட்டும் செலவுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவில் கல்வியின் மீதான அரசாங்கச் செலவுகள் பாரதூரமான முறையில் சமச்சீரற்றவை; முன்பள்ளிக் கல்விக்கான செலவு 2000 கோடி டொலர்; பாடசாலைக்கான செலவு 40000 கோடி டொலர்; உயர் கல்விக்கான செலவு 10000 கோடி டொலர். அமெரிக்கர்கள் திறன்களை மேம்படுத்த முன்பள்ளிக்கல்விக்கு மேலதிக தேவையாக உள்ளது. அடிப்படைக் கல்வியும் சமூகமயத்திறன்களும் மேம்பட இந்நிதி அதிகரிப்பு தேவை என வலியுறுத்தப்படுகின்றது.

பல நாடுகளில் வாழும் வறிய பிள்ளைகள், பாடசாலை செல்லும் வயதை எட்டியதும் தமது அறிவாற்றல் (Cognitive) மற்றும் சமூக ஆற்றல்களில் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

- ஈகுவடோர் (Ecuadore) நாட்டில் செய்யப்பட்ட ஆய்வொன்றின்படி 6 வயதுப் பிள்ளைகளின் அறிவாற்றலில் காணப்பட்ட திட்டவட்டமான வேறுபாடுகள், பெற்றோர் கல்வியுடனும் பொருளாதார, சமூக அந்தஸ்துடனும் தொடர்புடையவை. 22 மாதம் பிள்ளைகளிலும் இவ்வேறுபாடுகளைக் காணமுடியும்.
- ஐக்கிய அமெரிக்க ஆய்வொன்றின்படி, மூன்று வயதிலேயே கற்றலில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன; மொழித் தேர்ச்சியில், சமூக பொருளாதார நிலைமைகளில் வேறுபட்ட பிள்ளைகள் அதிக அளவில் சமமற்ற சித்திகளைப் பெற்றிருந்தனர். பிள்ளைப் பருவத்தில் (1-16 வயது) கிட்டும் கற்றல் அனுபவங்கள் மூளையின் அமைப்பிலும் (Architecture) வளர்ந்தோர் நிலையில் உள்ள ஆற்றலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- பிள்ளைப் பருவத்தில் செய்யப்படும் தலையீடுகள் (முன்பள்ளிக் கல்வி, போஷாக்கு, வளர்ச்சியைக் கண்காணித்தல், பெற்றோர்களின் பிள்ளை வளர்ப்புத் திறன்களை அதிகரித்தல்) எதிர்கால வாய்ப்புகளையும் கற்பதற்கான ஆற்றலகளையும் வளர்க்க உதவுகின்றன.
- மற்றொரு அண்மைக்கால ஐக்கிய அமெரிக்க ஆய்வொன்றின் படி (2003) ஆரம்பப்பிள்ளைப் பருவத்தில் செய்யப்படும் முதலீடுகளினால் (பிள்ளைகள் பாடசாலை செல்லும் முன்னர்) அதிக பயன்கள் (Returns) கிட்டுகின்றன; பாடசாலைகளில் ஆரம்ப இடைநிலைக் கல்வி) செய்யப்படும் முதலீடுகளினால் கிடைக்கும் பயனைவிட இது அதிகமானது.
- முன்பள்ளிக் கல்வியில் செய்யப்படும் 1 டொலர் முதலீட்டுக்கு 6 டொலர் பெறுமதியான பயனும் பாடசாலைக்கல்வியில் ஒரு டொலருக்கு 3 டொலர் பயனும் கிட்டுவதாக இவ்வாய்வு தெரிவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று அபிவிருத்தியடைந்த நாடுகளின் அனுபவங்களும் ஆராய்ச்சி முடிவுகளும் பிள்ளைகளின் பிற்காலப் பாடசாலைக்கல்வித் தேர்ச்சியில் முறையான முன்பள்ளிக்கல்வி ஏற்படுத்தும் தாக்கம் பற்றித் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையில் 3-5 வயதுப் பிள்ளைகள் யாவருக்கும், இலவசமான, முறையான முன்பள்ளிக்கல்வி ஏற்பாடுகள் இன்றும் செய்யப்படவில்லை. தற்போதைய முன்பள்ளிக் கல்வி ஏற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை. முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, பாட ஏற்பாடு, கட்டமைப்பு வசதிகள் என்பன குறைபாடுடையனவாகவும் பல சந்தர்ப்பங்களில், ஆரம்பக் கல்வி ஏற்பாடுகளைப் பிரதிபலிப்பதாக முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. இலங்கை முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. இலங்கையின் பாடசாலைக் கல்வியின் தராதர மேம்பாட்டுக்கான ஏற்பாடுகளும் சீர்திருத்தங்களும் முன்பள்ளிக் கல்வியிலிருந்து தொடங்குதல் வேண்டும் என்பதே இந்நாடுகளின் அனுபவங்கள் வழங்கும் பாடமாகும்.

# பல்கலாசார விழிப்புணர்வு

பொருட்கள் பாலர் நிலையத்தின் ஒழுங்கமைப்பு, பெற்றோரின் வகிபங்கு, கலைத்திட்ட அணுகுமுறை என்பன சார்பாக எடுக்கப்படும் தீர்மானம் ஒவ்வொன்றும் கலாசார மனப்பாங்குகளைப் பிரதிபலிக்கிறது.

கல்வியியலாளரின் மனப்பாங்குகள், ஆற்றல்கள், அறிவு என்பவை கலாசாரக் கோடலுக்கெதிரான அணுகுமுறையை விருத்தி செய்தவிலுள்ள பிரதான காரணிகளாகும். முதியோர் கலாசாரப் மனப்பாங்குகளை உளசுத்தியுடன் மீள்பார்வை செய்தல் என்பது வரவேற்புக்குரிய ஓர் அனுபவமாகும்.
கல்வியியலாளரின் மனப்பாங்குகள், ஆற்றல்கள், அறிவு என்பவை கலாசாரக் கோடலுக்கெதிரான அணுகுமுறையைவ் விருத்தி செய்வதிலுள்ள பிரதான காரணிகளாகும். முதியோர் கலாசாரப் பின்னணிகள், சமுதாயத் தொடர்கள், ஏனையோர் பற்றிய மனப்பாங்குகளை உளசுத்தியுடன் மீள்பார்வை செய்தல் என்பது வரவேற்புக்கரிய ஓர் அனுபவமாகும்.

கல்வியியலாளர்கள், குழந்தைகளிடம் பொருத்தமான மனப்பாங்குகளை விருத்தி செய்வதனால், அவர்கள் தமது பக்கச்சார்பு நிலையை இனங்கண்டு கொள்வது மிக முக்கியமாகும்.

குழந்தைகள் கலாசார விழிப்புடையவர்களா வளர்வதை ஊக்குவிக்குமுகமாக கல்வியியலாளர்கள் செய்ய வேண்டியவை இதன் கீழ் தரப்படுகின்றன.

குழந்தைகள் ஒவ்வொருவரினதும் உணர்வுகளையும், தேர்ச்சிகளையும் சார்ந்த சுயவிழிப்புணர்வையும் நயத்தைலையும் மேம்படுத்தவல்ல செயல்களை ஊக்குவித்தல்.

குழந்தைகளின் வாழ்க்கை நிலைகள் ஒத்தனவாயும், அதே தருணம் வேறுபாடானதாக காணப்படுகிறது. என்பது சார்பான கலந்துரையாடலுக்கு அவர்களை ஊக்குவித்தல், இவ்வாறான செயற்பாடுகளால் அவர்கள் தமது கலாசாரம் பற்றியும் ஏனையோரின் கலாசாரம் பற்றியும் உணர்வர்.
மேலும் இவை ஏனைய இனக்குழுக்கள் பற்றிய எதிர்மாறான அமைப்புகள் உருவாவதைத் தடுக்கின்றன.

குழந்தைகளின் கருத்துக்கள், உணர்வுகளிலிருந்து வேறுபட்ட கருத்துக்கள், உணர்வுகளை பிற இன மக்கள் கொண்டிருக்கலாம் என்பதை அறிய ஊக்குவித்தல். முன்னர் கருதப்பட்டது போல் குழந்தைகள் தன்மையானவர்களல்லர் என்பதற்குச் சான்றுகள் இன்றுள்ளன. இந்த அம்சம் இன்று கற்பிப்பதற்கு உகந்தது.

பல்வேறு வகையான உடை நடை, பேச்சு, இசை, உணவு முதலானவை பற்றிய கலந்துரையாடல் முதலியனவற்றிற்கு இடமளிக்கும் வகையில் கலைத்திட்டத்தில் கலாசார அடிப்படையை விசாரித்தல். பல்வேறு இன, மத பாரம்பரிய விழா, கொண்டாட்டங்களைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தலாம். சிறுபான்மை இன மக்கள் காணப்படாத இடங்களுக்கும் இது பொருந்தும். பல்வேறு இன கலாசாரங்களின் உடை முதலியனவற்றின் வேறுபாடுகளைக் காணவும், இசை முதலியவற்றைக் கேட்கவும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அது பல்கலாசார விழிப்புணர்வுக்குப் பெரிதும் உதவும்.

(நன்றி : பேராசிரியர் மா. செல்வராஜா,
"முன்பள்ளிக் கல்வி சிந்தனைகளும் செயற்பாடுகளும்", - 2006 பக் : 131-132)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சோமநாதபிள்ளை கனகலெட்சுமி

**உரையாடியோர் : திகநாதன், மீனா**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப் பற்றுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆரையம்பதிக் கிராமத்தில் 1980 தொடக்கம் தற்போது வரை முன்பள்ளி ஆசிரியையாக சேவையாற்றி வருபவர் சோமநாதபிள்ளை கனகலெட்சுமி. இவர் இன்று வரை ஆசிரியர் பணியில் சலியாது ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அகவிழி இதழுக்காக அவரருடன் உரையாடினோம்.

### எமது கிராமம் எமது பிள்ளைகள்

எனது ஆரம்பக்கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ணமிசன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை ஆரையம்பதி மகாவித்தியாலயத்திலும் தொடர்ந்தேன். அப்பொழுது எனது குடும்பத்தை ஆட்கொண்டிருந்த வறுமை காணமாக எனது கல்வியை தொடர முடியவில்லை. அதனால் க.பொ.த சா/தரத்துடன் எனது கல்வியை இடைநிறுத்திக் கொண்டேன்.

வீட்டு கஷ்டம் காரணமாக அவல் இடித்து விற்கும் தொழிலில் ஈடுபடத் தொடங்கினேன். பாடசாலையில் உயர்கல்வியை கற்கும் வாயப்பினையும் இழந்தைமையயிட்டு நான் பெரிதும் கவலைப்பட்டேன். ஆனால் என்ன செய்ய முடியும். ஆயினும் எனது பாடசாலை அதிபரான திரு. கிருஷ்ணபிள்ளை, கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரான ரகுபதிராஜா ஆகியோர்கள் இணைந்து ஆரம்பித்த முன்பள்ளிப் பாடசாலையிலே ஆசிரியராக இணைந்து கொண்டேன். இதற்கு எனது தந்தையும் உதவியாக இருந்தார்.

அதன்பின் முன்பள்ளி தொடர்பான பயிற்சிக்காக 1980.01.01 திகதி கிளிநொச்சியிலுள்ள குருகுலத்திலே இணைந்து கொண்டேன். நாங்கள் சுமார் 27 பேர் பயிற்சிக்கு சென்றோம். ஆனால் பயிற்சியை முழுமையாக முடிக்காமலேயே நாம் ஊருக்கு திரும்பினோம். தொடர்ந்து பயிற்சி நெறியினை மட்டக்களப்பைச் சேர்ந்தவரும் அதிபராகவும் இருந்த ஆலாலசுந்தரம் வவுனியாவைச் சேர்ந்த வைத்தியர் சிவசுந்தரம் ஆகியோரது வழிகாட்டுதல்களுடன் மட்டக்களப்பு பூராகவும் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்து பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்றன.

எனது முதல் முன்பள்ளி அனுபவத்தில் 75 பிள்ளைகள் இணைந்து கொண்டார்கள் இடவசதி போதாமை, பிள்ளைகளுக்கான செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுக்க முடியாமை, பாடசாலைக்கு இணையும் பிள்ளைகளில் 11 பேருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இன்மை, 8 வயதைத் தாண்டியும் பாடசாலை செல்லாமல் முன்பள்ளியில் மாணவர்கள் இணைதல் போன்ற பல சிக்கல்கள் அப்போது இருந்தன. நாங்கள் எமது பிள்ளைகளை முன்னேற்றும் நோக்கில் பாடசாலையில் இணையாமல் வீடுகளில் தேங்கிக் கிடந்த பிள்ளைகளை முன்பள்ளியில் இணைப்பதற்கு ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுவீடாகச் சென்று பிள்ளைகளைக் கண்டு பிடித்து பாடசாலையில் இணைத்துக் கொண்டோம்.

இவ்வாறு நான் முன்பள்ளிப் பிள்ளைகளுடன் அதிக நேரத்தை செலவிடத் தொடங்கினேன். ஒவ்வொரு நாளும் காலை 7.30 மணி ஆனதும் அந்த பிள்ளைகளைப் பார்க்க மனம் விரும்புகின்றது. சில வேளை எனது தேவை காரணமாக பாடசாலை செல்லாது விட்டால் அதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் இழப்புகளையிட்டு கவலைப்படுவேன். புதிது புதிதாக அவர்களுக்கு என்ன விளையாட்டுகளை சொல்லிக்கொடுக்கலாம் என அசைபோடுவேன். பிள்ளைகள் எப்போதுமே என்னுடன் பிரியமாக இருப்பார்கள்.

அத்துடன் பிள்ளைகளின் பெற்றார்களும் என்மீது மதிப்பும் மரியாதையையும் வைத்துள்ளார்கள். நானும் அவர்களுடன் நல்ல தொடர்பாடலை எந்நேரமும் பேணிவருகின்றேன். அதேபோல் முன்பள்ளித் துறையில் அக்கறை செலுத்தும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் அடிக்கடி பார்வையிட வருவதுடன் என்னையும் எம்போன்றவர்களையும் அவர்கள் பாராட்டிச் செல்வது நமக்கு பெரும் உற்சாகத்தைத் தருகின்றது.

எனது முன்பள்ளி பாடசாலை சேவையில் பலதரப்பட்ட குறைபாடுடைய மாணவர்களை சந்தித்து உள்ளேன். அதில் மூளைக் குறைபாடுடைய ஒரு பிள்ளை விளையாட்டல்லாத விளையாட்டு செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொண்டிருந்த போது என்னைப் பிடித்துக் கடித்துவிட்டான். நான் அந்தச் சிறுவனை நாளாந்தம் அணுகி ஏனைய பிள்ளைகளின் நடவடிக்கையை அவருக்கு சுட்டிக் காட்டி நீங்கள் இப்படிச் செய்யக்கூடாது இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டால் எங்கள் அனைவரிலும் இருந்து உங்களை பிரித்து வேறு இடங்களுக்கு அனுப்பிவிடுவார்கள் எனவும் கூறுவேன். பெற்றாரிடம் சென்று அவருக்குரிய சிகிச்சைகளை தொடரும்படி கூறுவேன். நான் உளவியலில் கற்றுக் கொண்ட அணுகுமுறைகளை இங்கு பிரயோகிப்பேன். மாணவர்களை நல்வழிப்படுத்தவும் அவர்களுக்கான ஆலோசனைகளை வழிநடத்தல்களை வழங்கவும் நான் பின்னிற்பதில்லை. இதனால் பெற்றோர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்வதும் பிள்ளைகள் பற்றி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவதையும் தொடர்ந்து பின்பற்றி வருகிறேன்.

அதே போல வாய்பேச முடியாத மழலை மொழி பேசும் பிள்ளை பாடசாலைக்கு சேர்ந்த போது அவர் காட்டுகின்ற சைகைகள், கதைகள் எனக்கு மட்டுமே விளங்கும் ஏனெனில் எனது தம்பியும் இளமையில் அவ்வாறே இருந்து வழமையாக பேசும் நிலைக்கு மீண்டார். இதனால் நான் அவருடன் கூடியநேரம்



உடனிருந்து சொற்களை பொருட்களை சுட்டிக்காட்டி, மீண்டும் மீண்டும் கூறச் சொல்லி வருவேன். இப்போது அப் பிள்ளை பேச்சுத் தடையற்ற பிள்ளையாக பேசிக்கொண்டிருக்கிறார்.

இதன் பின்பு உடலியல் குறைபாடுடைய பிள்ளைகளுக்காக ஆரையம்பதி கோயில்குளம் பகுதியில் ஒரு பராமரிப்பு நிலையத்தை அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று இயக்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தில் பிள்ளைகளை இணைக்க விரும்பாத பெற்றோர் எங்களை நம்பியே பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர். நாங்களும் எமது கிராமம், எமது பிள்ளைகள் என்பதனால் அவர்களில் கூடியளவில் அக்கறை செலுத்தி சாதாரண நிலைக்குள் கொண்டுவர இன்று வரைபாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதில் மறக்க முடியாத நிகழ்வு ஒன்று. 1983 இனக்கலவரத்தின் போது எமது பாடசாலை தீக்கிரையாக்கப்பட்டதுடன் அந்நேரம் நானும் பாடசாலைக்கு வந்த 11 பிள்ளைகளும் அங்குதான் நின்றோம். அப்பொழுது எங்களை சுட்டுக் கொலை செய்வதற்காக பலர் வந்த போது நான் கைகள் இரண்டையும் உயர்த்தியபடி பக்கத்திலுள்ளவர்களை சத்தம் போட்டு அழைத்தேன். அப்போது சிங்களம் தெரிந்த எங்களூர் பெரியவர் ஒருவர் அங்கு வந்து எங்களைப் பற்றி கூறி அவ்விடத்திலிருந்து எம்மை வெளியேறிச் செல்ல வழி சமைத்தார். அதன் பின்பு நமது சமுதாயம் இவ்வாறான இன்னல்களைச் சந்திக்கும் போது நாம் இப் பிள்ளைகளையாவது நல்ல நிலைக்குள் கொண்டுவரபாடுபட வேண்டும் என்று எண்ணிச் செயற்படத் தொடங்கினேன்.

இப் பாடசாலை காலை 8.00 மணிக்கு இறைவணக்கத்துடன் ஆரம்பித்து உடல் விருத்திச் செயற்பாடுகள் அதன் பின் கணித விருத்திச் செயற்பாடுகள் எண்கோலம், நிறக்கட்டைப் பயன்பாடுகள், ஆக்கத்திறன் செயற்பாடுகள், விளையாட்டல்லாத விளை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாட்டுகள், சூழல்விருத்திச் செயற்பாடுகள் என்பன நாளாந்தம் அவர்களுக்கு ஊட்டப்படும்.

அதில் குறிப்பாக சூழல்விருத்திச் செயற்பாட்டில் வீதியில் செல்லும் வாகனங்களின் சத்தங்களை கண்களை மூடி செவிமடுக்கச் செய்து அவ்வாகனத்தின் பெயரைக் கூறச்செய்தல் பறவைகளின் சத்தத்தைக் கொண்டு பறவைகளை இனம் காணச்செய்தல் அவ்வாறான நேரடி அனுபவங்களை வழங்க முடியாத போது ஒலி பற்றி தெரிந்த பிள்ளையை ஒலி எழுப்பச் செய்து அவ் ஒலியை ஏனைய மாணவர்களை இனங்காணச் செய்தல். விளையாட்டல்லாத விளையாட்டுக்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் இவ்வாறான செயற்பாடுகளை பிள்ளைகளுக்கு செய்விப்பதன் மூலம் அவர்களும் என் நேரமும் எங்களை எதிர்பார்த்தபடியே பாடசாலைக்குள் வருகின்றனர்.

பிள்ளைகளுக்கான எழுத்தறிவை வழங்கும்படி பெற்றோர்கள் எம்மை நிற்பந்திக்கிறார்கள். இது பிழையான செயல். ஆனாலும் நாம் அவர்கள் திருப்திக்காக அடிப்படை எழுத்துக்கள், சொற்களை இனங்காணல் போன்றவற்றை பழக்குகின்றோம். இதில் உள்ள பிரச்சனை என்னவெனில் 1ம் ஆண்டிலும் பிள்ளைகளுக்கு எழுத்துக்கள் தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. நாங்களும் இச் செயற்பாட்டை இங்கு செய்து முடிப்பதால் 1ம் ஆண்டு ஆசிரியரை பிள்ளைகள் வெறுக்கின்ற நிலையும் உருவாகும். எனவே நாம் எழுத்தறிவை வழங்குவதில் கூடிய வரையில் தவித்துக் கொண்டுள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் எங்களுக்கு 25 வருடகாலமாக அரசாங்கத்தால் ஆசிரியராக்கப்படவோ ஒரு நிறுவனத்தால் நிரந்தர சம்பளத்துடன் ஆசிரியையாக செயற்படவோ முடியவில்லை. அந்த வகையில் 1980 தொடக்கம் 1983 வரையும் மாதாந்தம் கிளிநொச்சி குருகுலத்தால் 150= வும் பெற்றாரிடம் தலா 5/= திரட்டப்பட்டு (கிராம அபிவிருத்தி சபை) மாதம் 250/= வழங்கி வந்தது. அதன் பின்பு 1983 – 1988 வரையும் R.D.S பெற்றாரிடமிருந்து திரட்டின பணத்தில் 300/= யை வழங்கி வந்தது. 1990 சரீரம் நிறுவனம் பொறுப்பேற்று மாதாந்தம் பெற்றார்களிடமிருந்து தலா 50/= R.D.S மூலமாக எமக்கு வழங்கப்பட்டது. தற்போது KOINONIA எனும் நிறுவனம் 6 மாத ஒப்பந்த அடிப்படையிலே ஆசிரியையாக இணைத்து மாதம் 5000/- சம்பளம் வழங்கி வருகின்றது.

இவ்வாறான கொடுப்பனவுகளை கொண்டு நாம் எவ்வாறு குடும்பத்தை நடத்துவது. எனக்கு பல்வேறு சிரமங்கள் உள்ளது. குறிப்பாக எனது கணவர் இனக்கலவரத்தினால் கை, கால் பாதிக்கப்பட்டு வேலைக்கு செல்ல முடியாமலேயே உள்ளார். எனது பிள்ளைகள் க.பொ.த உயர்தரத்திலும், க.பொ.த சாதாரண தரத்திலும் படிக்கின்றனர். தரம் 6, 7 இல் படிக்கின்ற பிள்ளைகளுமாக 8 பேர்களின் வாழ்வாதாரத்துக்குப் எனது வருமானம் போதமையாகவே உள்ளது. இதனால் நான் அதிகாலை 2.30 மணிக்கு எழுந்து 400 இடியப்பம் அவித்து பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு கொடுப்பதால் ஒரு நாளைக்கு 300/= மீதப்படும். அதன் பின் 7.45 மணிக்கு பாடசாலை சென்று மதியம் 12:00 மணிக்கு பாடசாலை விட்டு வருவேன். பின்னர் வீட்டில் உள்ளவர்களுக்கு உரிய சாப்பாட்டு வேலையை கவனித்துவிட்டு மா இடித்து பின்னேர இடியப்பம் அவித்து கடைக்கு அனுப்புவேன். இவை மூலம் கிடைக்கும் சிறிய வருமானங்களைக் கொண்டு தான் எனது பிள்ளைகளின் படிப்பை என்னால் கவனிக்க முடிகின்றது.

ஆயினும் கடந்த வருடம் சிக்கின்குனியா காய்ச்சலால் நான் பீடிக்கப்பட்டதிலிருந்து கைவிரல்களை அசைக்க முடியவில்லை. அதனால் எனது O/L படித்துக் கொண்டிருக்கின்ற மகள் பாடப்புத்தகத்தை அருகில் வைத்து படித்தபடி இடியப்பம் அவிப்பதற்கு உதவி செய்து வருகின்றார். இவ்வாறான நிலையிலிருந்து மீண்டெழுவதற்காக பல்வேறு சந்தர்பங்களில் தொழில் வாய்பை நாடியுள்ளேன். ஒருமுறை பாடசாலை உதவியாளர் வேலைக்காக விண்ணப்பித்து அதிபரால் வழங்கப்பட்ட சான்றிதளுடன் சென்றிருந்தேன். அப்போது நேர்முகப் பரீட்சையில் வைத்தே என்னை விலக்கிவிட்டனர். இதற்கான காரணத்தை அறிந்த போது எனது இடத்தில் பணம் கொடுத்த ஒருவரின் பெயர் போடப்பட்டிருந்ததை அறிந்து கொண்டேன். அதன் பின்னர் வைத்தியசாலை பராமரிப்பாளர் வேலைக்காக விண்ணப்பித்திருந்தேன். அதில் நான் விண்ணப்பித்த விண்ணப்பப் படிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலப்பிரதி இல்லை எனக்காரணம் கூறி என்னை மாத்திரம் வேலைக்கு எடுக்க மறுத்து விட்டனர்.

அதன் பின்னராவது முன்பள்ளித்துறை சம்பந்தமான பயிற்சிகளை முடித்து ஆசிரியராக வேண்டும் எனும் நோக்கில் கிழக்கு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட சான்றிதழ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றதுடன் வலயக்கல்வியலுவலகம், அரசசாரா நிறுவனங்கள் நடத்தும் 90 நாள் பயிற்சிகளில் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன். இதுவரையான எனது அநுபவம் நீண்டது ஆயினும் அதற்கான பலாபலன் எனக்கு முழுமையாக கிடைக்கவில்லை. இருந்த போதிலும் நான் எனது சமூகத்திற்காகவும், எனது பிள்ளைகளுக்காகவும் (மாணவச்சிறார்கள்) என்னை பாடசாலையை விட்டு வெளியேறு என்று சொல்லும் வரையும் கற்றுக் கொடுப்பேன் என உறுதிகொண்டுள்ளேன்.

எனது முன்பள்ளித்துறையின் எதிர்காலம் பற்றி குறிப்பிடும் போது கட்டிட வசதி சிறப்பாக இருப்பதுடன் பிள்ளைகளின் விளையாட்டு பிறவசதிகளும் பெற்றோர்களின் பங்களிப்பும் தொடர்சியாக இணைந்திருக்க வேண்டும். நிறுவனங்கள் அனுசரனை வழங்க வேண்டும். அருகில் உள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர் முன்பள்ளிக்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும். அதிகாரிகள் சமூகநலன் விரும்புபவர்களாக செயற்பட வேண்டும். இவ்வாறு இருப்பின் முன்பள்ளித்துறை சிறப்பாக இயங்கும். இதுவரையில் நான் படிப்பித்த பிள்ளைகளில் பலர் நல்ல பதவி வகித்தாலும் என்னைக் கண்டு அவர்கள் மதிப்பு தருகின்றார்கள். தற்போது உள்ள பிள்ளைகள் விவேகம் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். பிள்ளைகளுக்குரிய கல்வியை அவர்களது பிரதேசவளம், பண்பாடு சார்ந்ததாக நாம் கொடுக்க வேண்டும். இதுவே எனது எதிர்பார்ப்பு. வரன்முறையான கல்வித் துறைக்குள் முன்பள்ளிக் கல்வியும் உள்வாங்கப்படவேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட வேண்டும். இதைவிட முன்பள்ளித் துறை ஏற்றத்தாழ்வின்றி சிறப்பாக செயற்பட வேண்டும். இதற்கான வழிமுறைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சமூக நலன் சார்ந்த சிந்தித்து செயலாற்ற வேண்டும். எங்களைப் போன்ற முன்பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கையிலும் மாற்றம் வேண்டும்.

---

அண்மை சேய்மை என்பன பற்றிக் குழந்தைகள் விளங்கிக் கொள்ள வேண்டும் பொருட்கள், எவ்வளவு அருகாக உள்ளன என்பதைக் குறிக்கும் 'அண்மை' பற்றியும், பொருட்கள் எவ்வளவு தூரம் வேறாகப் பிரிந்துள்ளன என்பதைக் காட்டும் வேறாக்கம் பற்றியும் குழந்தைகள் விளங்கிக்கொள்ள வேண்டும். பொருட்களைத் தூரத்தூர வைத்தும், அவற்றை நெருக்கமாக வைத்தும் இடைவெளியை அவர்கள் கண்டறிந்து கொள்கிறார்கள். மூடிய இடைவெளி பற்றி அனுபவ வாயிலாக அறிய ஆரம்பிப்பதோடு முழுமையான திருத்தமில்லாவிடினும் உள்ளே, வெளியே ஆகிய சொற்களையும் கையாள ஆரம்பிக்கிறார்கள்.

பியாஷே, இன்கெல்டர் ஆகியோர் (1969) துவாரங்கள் உள்ள, துவாரங்கள் இல்லாத பொருட்களை வேறுபடுத்தி அறியவும், அதே போல தடத்தினுள் பொருட்களைக் கொண்ட மூடிய நூலிளைத் தடம், தடத்திற்கு வெளியே பொருட்களைக் கொண்ட மூடிய நூலினைத்தடம் என்பவற்றை வேறுபடுத்தியறியவும் குழந்தைகளால் முடியுமெனக் கண்டு கொண்டனர். ஆயினும் பல இடைவெளித் தொடர்புகளுடன் மேலும் நன்றாக ஈடுபடுவதற்கு குழந்தைகளுக்கு நீண்ட காலம் எடுக்கலாம்.

பொருட்களை பொருத்தவும் வேறாக்கவும் தராளமாகச் சந்தர்ப்பங்களை வழங்குதல் - இச்செயற்பாடுகளால் பொருட்கள் ஒன்றோடொன்று பொருந்தக் கூடிய வழிகள் பற்றியும் (எடுத்துக்காட்டு: திருகாணி, இணைப்பு, ஊக்கு) அதேவேளை, எவ்வாறு சில பொருட்கள் எளிதாக ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்றன என்பது பற்றியும், சிலவற்றைப் பொருத்துவதற்குக் குறிப்பான அடையாளம் அவசியம் என்பது பற்றியும் குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். இச்செயற்பாடுகள் நுண்ணிய தசைநார்க் கட்டுப்பாட்டை மேம்படுத்திக் கொள்ளவும் துணையாகின்றன.

படங்கள் பிரதிபலிப்பனவற்றை யதார்த்தமாக ஒப்பிட்டு நோக்கக் கூடிய சந்தர்ப்பங்களை வழங்குதல் - இதற்கான சித்திரங்கள், புகைப்படங்கள், பல்வேறு வகைப் படங்களைப் பார்ப்பதற்கும், அவை பற்றிக் கலந்துரையாடுவதற்கும் ஊக்கமளிக்கலாம்.

(நன்றி : பேராசிரியர் மா. செல்வராஜா,
"முன்பள்ளிக் கல்வி சிந்தனைகளும் செயற்பாடுகளும்", - 2006 பக் : 100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் பக்கம்

'வெப்பியாரம்' எனும் சிறுகதை 'ஆழியாள்' எனும் ஒருவரால் எழுதப்பட்டு தங்களின் மார்ச் 2009 இதழில் பிரசுரமாகியிருந்தது.

ஒரு 10 வயது பெண்பிள்ளையின் மனதிற்கு பிடித்தவை "பிடிக்காதவை" என பட்டியலிட்ட ஆழியாள் 'மாஸ்டர் அங்கிள்' எனும் பாத்திரத்தை மெருகூட்டி காட்டுகிறார்.

உளவியல் வெளிப்பாடாக ஒரு வித பாலியல் உணர்வை மாஸ்டர் அங்கிள் ஊடாக புனைந்து ஒருவித ஒழுக்கக் கேடான செயல் சமூகத்தில் அரங்கேறுகிறது என காட்ட முற்படுகிறாரா? அல்லது தாய்மார் தங்களின் பெண் பிள்ளைகளை கண்டிப்புடன் வளர்க்க தவறுகிறார்கள் என ஆதங்கப்படுகிறாரா? என்பது வேறுவிடயம். ஆனால் இவ்வாறான செயல் யாழ்ப்பாணத்தில் நடப்பதேயில்லை (ஏன் பேச்சுக்குக்கூட கதைப்பதில்லை). இங்கே பிழை செய்பவர் யாழ்வாசி எனவும் பிழைக்கட்படுவர் (வர்ண) மட்டுவாசி எனவும் அறிய முடிகிறது. தமிழ் சொற்பிரயோகம், தமிழ் வாசனை ஊடாக கதையெழுயவர் மட்டுவாசி என்பது எனது 100% அநுமானம். இக்கதை ஒருவித "வெப்பு உணர்வையே" படித்த பண்புபட்ட மனிதர்களிடையே உண்டாக்கிறது. இரு பிரதேச சொல் வளம் பாவிக்கிறபோது மிக மிக கவனமாகவே கதாபாத்திரங்களை உருவாக்கி கதையை நகர்த்தவேண்டும். இல்லையேல் பல வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும். இதை எழுதிய ஆசியர் உணரவேண்டும் என்தே எனது விருப்பம்.

*யாழில் கல்விகற்ற மட்டுவாசி*
**ம. இந்திரநாதன்**

**(ஆ.ர்)**

ம. இந்திரநாதன் கருத்துடன் எந்தவிதத்தில் உடன்பட முடியாது. யாழ்ப்பாணத்தில் தற்போது எந்தெந்த வடிவங்களில் துஷ்பிரயோகங்கள் நடைபெறுகின்றது என்பது குறித்து எனக்கு ஆழமான விளக்கம் உண்டு.

தாங்கள் நேரில் வந்தால் இது பற்றி நிறையவே பேச முடியும். பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். யாழ்ப்பாணத்தாள் 'பிழைவிடமாட்டான்' 'அப்பாவி' என்ற உங்களது அறியாமையை முதலில் போக்குங்கள்

---

மார்ச் இதழ் எம்மை அதிகம் சிந்திக்க வைத்தது. எம்மிடையே இருக்கும் மிருகத்தை இனங் காண வேண்டும் என்பதை எச்சரிக்கிறது. குஜராத் கதையை முன்வைத்து எமது தற்போதைய கதைகளை புரிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

**திருமதி ஞானலதா**
நீர்கொழும்பு

---

சுவாமி விபுலானந்தரின் மருமகள் கண்ணம்மா ஆசிரியரை நாம் தரிசிப்பதற்கான சந்தர்ப்பம் அகவிழி மூலம் கிடைத்தது. இது மகிழ்ச்சி தருகின்றது. இத்தகு நபர் தற்போது மட்டக்களப்பில் இருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி
அகவிழிக்கு நன்றி

**தி.ப.வாசு தேவன்**
மட்டக்களப்பு

---

அகவிழியில் மாற்றங்கள் வருகின்றன இவை வரவேற்கப்பட வேண்டும். இன்னும் நிறையவே மாற்றங்கள் வேண்டும். சிறுகதை வடிவம் கல்வி சார்ந்த நோக்கில் அவ்வப் போது வெளிவரலாம். இலகுவான வாசிப்புக்கும் தேடலுக்கும் இது சிறந்த வழி

**செ. காண்டீபன்**
கொழும்பு

---

5ம் தரப் புலமைப்பரீட்சை மீதான விவாதக் களம் ஆரோக்கியமாக உள்ளது. இதைத் தொடருங்கள். இன்னும் பல்வேறு பார்வைகள் நோக்கநிலைகள் வேண்டும்.

தமிழர் மனப்பான்மையில் 5ம் தரப் புலமைப்பரீட்சை ஏற்படுத்தும் தாக்கம் பாதிப்புக்கள் விரிவாக ஆராயப்படவேண்டும். அகவிழி ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் சமூக நோயாக பரீட்சை மாறிவிட்டது. சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் உங்கள் முயற்சியை வரவேற்கின்றோம்.

**க. ஞானஸ்வரன்**
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHAVILI
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

# சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : ____________________

கற்பிக்கும் பாடசாலை : ____________________

பாடசாலை முகவரி : ____________________

தொலைபேசி/தொலைநகல் இல. : ____________________

மின்அஞ்சல் முகவரி : ____________________

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ____________________

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்;

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் *1100022581*

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : | 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | 7000/- |
| உள் அட்டை (முன்) | : | 6000/- |
| உள் அட்டை (பின்) | : | 5000/- |
| உள் பக்கம் | : | 4000/- |
| நடு இருபக்கங்கள் | : | 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House Road,
Tel: 065-2222097



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகம்





**மா.சின்னத்தம்பி**

ISBN : 978-955-1857-30-1 **விலை :** 400/-

இன்று கல்வி சூழல் மிக மோசமான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றது. காலமாற்றத்துக்கேற்ப கல்வி இலக்குகளில் பல மாற்றங்களும் ஏற்படுகின்றன.

இப்பின்புலத்தில் பாடசாலைகளை முகாமை செய்தல் என்பது வெறும் சிந்தனையாக மட்டுமன்றி பொருத்தமான செயல்வடிவம் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

இத்தகு உயரிய நோக்கங்களை விளக்குவதாக இந்நூல் வெளிவருகின்றது.




**சபா.ஜெயராசா**

ISBN : 978-955-1857-31-8 **விலை :** 260/-

இந்நூல் தமிழில் புனைகதை வரலாறு எழுதுதல் பற்றிய புதிய அணுகுமுறைக்கான புதிய அம்சங்களையும், தமிழ் மரபில் இத்துறையின் பேசப்படாத, தொட்டுக்காட்டப்படாத பல விடயங்களையும் நமக்கு அறிமுகம் செய்கின்றது.




**மா.சின்னத்தம்பி**

ISBN : 978-955-1857-32-5 **விலை :** 340/-

சமகால கல்வி வரலாற்றில் ஆசிரியரை விளைதிறன் மிக்கவராக்கல் பண்புகளை ஆழமாக வெளிப்படுத்தும் கைந்நூலாக இந்நூல் வெளிவருகின்றது.

சேமமடு

## சேமமடு பொத்தகசாலை
## CHEMAMADU BOOK CENTRE


UG.49,50, People's Park, Colombo -11, Sri Lanka

TEL : 011-247 2362, 232 1905 FAX : 011-244 8624

E-Mail : chemamadu@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**முரளி கொமினிகேஷன்**
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

**குமரன் ரேட் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

**நியூ கேசவன் புக்ஸ்டோல்,**
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

**அபிஷா புத்தகக் கடை**
137, பிரதான வீதி,
தலவாக்கல.
தொ.பே.இல: 052-2258437

**அருள் ரேட் சென்டர்**
19, பிரதான வீதி,
தலவாக்கல
தொ.பே.இல: 052-2258584

**அகவிழி நிலையம்**
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

**அறிவாலயம் புத்தகக்கடை**
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 024-4920733

**ஜானு புத்தக நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046

**நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்**
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

**அகவிழி நிலையம்**
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ் றோட்,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-2222-2097

**பி. ஜெகதீஸ்வரன்**
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

**அன்பு ஸ்ரோஸ்**
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

**புக் லாப்**
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

**எஸ். ஏ. முஹீர்**
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

**கவிதா புத்தகக் கடை**
வவுனியா
தொ.பே.இல: 0572223556

**S. ஏகாந்தராஜன்**
50/9, நாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

**பராசக்தி ஏஜன்சீஸ்**
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

**M.T.M தௌசீர்**
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

**பூபாலசிங்கம் புத்தகக் கடை**
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக் கடை**
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

**சேமமடு புத்தகக்கடை**
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

**ஜோதி புக் சென்டர்,**
கிரான் பாஜார்,
மன்னார்
தொ.பே.இல: 023- 2222052

**அகவிழி நிலையம்**
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

**அகவிழி நிலையம்**
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

**A.L. அனீஸ் அலி**
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org